

என்னில்
நிறைந்தவளே..
சந்யா ராஜ்குமார்

# என்னில் நிறைந்தவளே

## 1

‘‘சுரேன்.’’

‘‘சொல்லுங்கமா.’’

‘‘சஞ்சனாவப் போய்ப் பாத்துட்டு வரலாமாப்பா?’’

‘‘நான் வரலமா, நீங்க போய்ட்டு வாங்க.’’

‘‘என்னப்பா இப்படிச் சொல்ற?’’

‘‘வேற என்ன சொல்லணுங்கறீங்க?’’

‘‘நீ பேசறதையெல்லாம் கேட்டா எம் மருமகளோட மனசு என்ன பாடு படும்பா. இந்த ரெண்டு நாளா மூணு முறை போன் பண்ணிட்டா, தெரியுமா?’’

ஓ! இப்பொழுதே மருமகளாகி விட்டாளாக்கும் என்று மனதிற்குள் ஏளனமாக நினைத்தவன், ''அதுக்கு நான் என்ன பண்ண முடியும்?'' என்று முயன்று வரவழைத்த சாதாரணக் குரலில் கேட்டான்.

அப்படிக் கேட்ட மகனை ஆச்சரியத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டு பார்த்தார் கலைவாணி.

ஏன் இப்படிப் பேசுகிறானென்று புரியாமல் விழித்தார்.

திருமணம் முடிவாகி விட்டதுமே இந்தக் காலத்துத் தலைமுறைகள் போனில் எப்படியெல்லாம் பேசிக் கொள்கிறார்கள்! ஏன் நேரிலும் கூட.

அதை வேண்டுமானால் சற்று அதிகப்படியென்று கூடச் சொல்லலாம்.

ஆனால் இப்பொழுது மகன் செய்வது...

ஒரு சமயம் இந்தத் திருமணத்தில் அவனுக்கு விருப்பமில்லையோ?

ஏனோ அந்த எண்ணமே அவரை உலுக்கி விட்டிருந்தது.

பயத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டு அதை மகனிடமும் கேட்டார்.

ஆனால் பதிலுக்கு மகனோ, ''இன்னும் பத்து நாள்ல கல்யாணத்த வெச்சுக்கிட்டு இப்படியொரு சந்தேகமா?'' என்று சிரித்தான்.

அப்பாடா என்று மனதிற்குள் மகனறியாமல் நிம்மதிப் பெருமூச்சு விட்டார் கலைவாணி.

சரிதான், ஆனால் இப்படிப் பாராமுகமாக இருப்பதற்கு என்ன காரணம்?



அந்தப் பெண் சஞ்சனா, இவனுடைய மொபைலுக்கு அழைத்தால் வேலையில் பிஸி, திரும்பவும் அழைக்கிறேனென்று வைத்து விடுவதாம்.

ஆனால் மீண்டும் அழைப்பதே இல்லையாம்.

வேலை அனைவருக்கும் இருப்பது தான், அதற்காக சராசரி மனிதனுக்கு இருக்கும் ஆசைகளும் இருக்க வேண்டும்தானே.

இதே மகன் திருமணம் நிச்சயமான புதிதில் இருந்ததை நினைத்துப் பார்த்தார்.

அப்பொழுதும் வெளிப்படையாகக் காட்டியிருக்காவிட்டாலும் எவ்வளவு சந்தோஷமாகச் சஞ்சனாவைத் தினமும் தானே போனில் அழைத்துப் பேசினான். ஏன், நேரிலும் கூட அவ்வப்பொழுது சென்று பார்த்துக் கொண்டுதானே இருந்தான்.

அவனுடைய தங்கை நிகிலா கூடக் கிண்டல் செய்து கொண்டே இருப்பாளே.

இவனும் அவளுக்கு எப்படியெல்லாம் பதிலடி கொடுத்தான்.

சரிதான், நாளை உன்னையும் பார்க்கத்தானே போகிறேன். முதலில் நீ வீட்டில் நாங்கள் பார்த்துத் திருமணம் செய்து வைக்கும்வரை காத்திருப்பாயோ என்னவோ என்றெல்லாம் கேலி பேசிச் சிரித்தானே.

அப்படிப்பட்டவன் இன்று இப்படி மாறியிருக்கிறான் என்றால்...

நிச்சயம் ஏதோ இருக்கிறது.

ஆனால் அது என்னவென்று ஒன்றுமே புரியவில்லையே.

ஓ! இப்பொழுதே மருமகளாகி விட்டாளாக்கும் என்று மனதிற்குள் ஏளனமாக நினைத்தவன், "அதுக்கு நான் என்ன பண்ண முடியும்?" என்று முயன்று வரவழைத்த சாதாரணக் குரலில் கேட்டான்.

அப்படிக் கேட்ட மகனை ஆச்சரியத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டு பார்த்தார் கலைவாணி.

ஏன் இப்படிப் பேசுகிறானென்று புரியாமல் விழித்தார்.

திருமணம் முடிவாகி விட்டதுமே இந்தக் காலத்துத் தலைமுறைகள் போனில் எப்படியெல்லாம் பேசிக் கொள்கிறார்கள்! ஏன் நேரிலும் கூட.

அதை வேண்டுமானால் சற்று அதிகப்படியென்று கூடச் சொல்லலாம்.

ஆனால் இப்பொழுது மகன் செய்வது...

ஒரு சமயம் இந்தத் திருமணத்தில் அவனுக்கு விருப்பமில்லையோ?

ஏனோ அந்த எண்ணமே அவரை உலுக்கி விட்டிருந்தது.

பயத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டு அதை மகனிடமும் கேட்டார்.

ஆனால் பதிலுக்கு மகனோ, "இன்னும் பத்து நாள்ல கல்யாணத்த வெச்சுக்கிட்டு இப்படியொரு சந்தேகமா?" என்று சிரித்தான்.

அப்பாடா என்று மனதிற்குள் மகனறியாமல் நிம்மதிப் பெருமூச்சு விட்டார் கலைவாணி.

சரிதான், ஆனால் இப்படிப் பாராமுகமாக இருப்பதற்கு என்ன காரணம்?

அந்தப் பெண் சஞ்சனா, இவனுடைய மொபைலுக்கு அழைத்தால் வேலையில் பிஸி, திரும்பவும் அழைக்கிறேனென்று வைத்து விடுவதாம்.

ஆனால் மீண்டும் அழைப்பதே இல்லையாம்.

வேலை அனைவருக்கும் இருப்பது தான், அதற்காக சராசரி மனிதனுக்கு இருக்கும் ஆசைகளும் இருக்க வேண்டும்தானே.

இதே மகன் திருமணம் நிச்சயமான புதிதில் இருந்ததை நினைத்துப் பார்த்தார்.

அப்பொழுதும் வெளிப்படையாகக் காட்டியிருக்கா விட்டாலும் எவ்வளவு சந்தோஷமாகச் சஞ்சனாவைத் தினமும் தானே போனில் அழைத்துப் பேசினான். ஏன், நேரிலும் கூட அவ்வப்பொழுது சென்று பார்த்துக் கொண்டுதானே இருந்தான்.

அவனுடைய தங்கை நிகிலா கூடக் கிண்டல் செய்து கொண்டே இருப்பாளே.

இவனும் அவளுக்கு எப்படியெல்லாம் பதிலடி கொடுத்தான்.

சரிதான், நாளை உன்னையும் பார்க்கத்தானே போகிறேன். முதலில் நீ வீட்டில் நாங்கள் பார்த்துத் திருமணம் செய்து வைக்கும்வரை காத்திருப்பாயோ என்னவோ என்றெல்லாம் கேலி பேசிச் சிரித்தானே.

அப்படிப்பட்டவன் இன்று இப்படி மாறியிருக்கிறான் என்றால்...

நிச்சயம் ஏதோ இருக்கிறது.

ஆனால் அது என்னவென்று ஒன்றுமே புரியவில்லையே.

இவனிடம் அவ்வளவு எளிதில் ஒன்றைத் தெரிந்து கொண்டுவிட முடியுமா என்ன?

எப்படியோ இன்னும் அதிகமாக முகத்தைத் திருப்பிக் கொள்ளாமல் இந்த அளவிற்காவது இருக்கிறானே என்று சந்தோஷப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

இனி அவர்களுக்குள் என்னவோ என்று தான் மட்டும் தனது வருங்கால மருமகளான சஞ்சனாவைப் பார்க்கக் கிளம்பி விட்டிருந்தார் கலைவாணி. கூடவே அவளுடைய தந்தையையும்.

கலைவாணி - தேவேந்திரன் தம்பதிக்கு இரண்டு பெண்கள், ஒரு ஆண் என மொத்தம் மூன்று பிள்ளைகள்.

அதில் மூத்த பெண்ணுக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பு திருமணம் முடிந்திருக்க, அடுத்ததாக இருக்கும் சுரேந்திரனுக்குத்தான் இப்பொழுது திருமணம் முடிவாகி இருந்தது.

அதாவது இரண்டு மாதங்களுக்கு முன்பு. அதோடு இப்பொழுது திருமணத்திற்கு இன்னும் பத்து நாட்களே இருந்தன.

அடுத்ததாக அனைவருக்கும் கடைசிப் பெண் நிகிலா. அவள் இந்த வருடம்தான் கல்லூரி முதலாமாண்டில் அடியெடுத்து வைத்திருந்தாள்.

குடும்பத் தலைவரான தேவேந்திரன் சொந்தமாக ஹோட்டல் வைத்து நடத்தி வருகிறார்.

அதனுடைய கிளைகள் பல இடங்களில் இயங்கி வந்தன.

அதிலிருந்து வரும் வருமானம் பிரமாதம் என்று சொல்லுமளவிற்கு இல்லாவிட்டாலும், மோசமென்று சொல்வதற்கில்லை.



அந்த அளவிற்கு அந்த வருமானம் குடும்பச் செலவுகள் அனைத்திற்கும் நன்றாகவே ஈடு கொடுத்தது.

ஆனால் இப்பொழுது பிரச்சனையே அதுவல்ல.

அவருடைய மகன் அதாவது அந்த வீட்டின் ஒரே ஆண் பிள்ளை சுரேந்திரன் உணவகங்களை இன்னும் நாகரிகமாக, சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் நவீனமயமாக்கிக் கொண்டு செல்ல வேண்டுமென்றான்.

அது மட்டுமல்லாமல் அதற்கான முயற்சியில் இறங்கியும் இருந்தான்.

சிட்டியின் மையத்திலிருக்கும் இரண்டு உணவகங்களை அவன் நினைத்ததைப் போல மாற்றியும் இருந்தான்.

அதன் பலனாக வியாபாரமும் கூட முன்பைவிட இப்பொழுது இரண்டு மடங்கு அதிகமாகியிருந்தது. அதே போல லாபமும்.

நீ உன் கையிலிருந்து பெரிய அளவில் செலவு செய்த பணத்தைத்தான் இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக் கொண்டிருக்கிறாய், இதிலென்ன பெரிய அதிசயம் இருக்கிறது என்ற தனது தந்தையின் பேச்சைக் கேட்ட சுரேந்திரனுக்கோ அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை.

என்னதான் சுகாதாரமான முறையிலேயே தயாரிக்கப்பட்டாலும் அதை வைத்துப் பரிமாறும் இடமும் அவ்வாறு இருந்தால் தான் அந்த உணவிற்கும் மதிப்பு.

அப்பொழுது தான் பணத்தைவிடச் சுகாதாரம் தான் முக்கியமென்று எதிர்பார்க்கும் நல்ல வாடிக்கையாளர்கள் பெருகுவார்கள்.

நம்முடையது தான் ருசியிலும் சிறந்ததாயிற்றே.

உணவகத்தை நல்ல முறையில் சுகாதாரமாகவும், நவீன முறையிலும் மாற்றப் போவது ஒரு முறை தானே! அதற்குப் பிறகு மீண்டும் மீண்டுமா செலவு செய்து கொண்டிருக்கப் போகிறோம்?

ஏன், அதற்குப் பிறகு வருமானம் நல்ல முறையில் பெருகும்போது நாம் போட்ட முதலைக் கூடத் திருப்பி எடுத்துக் கொண்டு விடலாமே,

என்றெல்லாம் எடுத்துச் சொல்லித் தனது தந்தைக்கும் தற்போதைய வியாபார யுக்தியைப் புரிய வைக்க முயற்சி செய்தான் சுரேந்திரன்.

ஆனால் அதற்கு அவனுடைய தந்தை தேவேந்திரனோ, மகன் சொல்வதிலிருக்கும் நியாயத்தை எடுத்துக் கொள்ளாமல் அப்படியானால் நீ தொழிலைப் பற்றி எனக்கே சொல்லித் தருகிறாயா என்று திருப்பிக் கேட்டார்.

பார்க்கிறவரை பார்த்துவிட்டுக் கடைசியாகத் தான் ஒரு முடிவுக்கு வந்து விட்டிருந்தார் தேவேந்திரன்.

நகரத்தில் மொத்தம் ஆறு இடங்களில் அவருக்கு உணவகங்கள் இருந்தன.

பல வருடங்களுக்கும் முன்பே தொடங்கப்பட்டது என்பதால் அனைத்து உணவகங்களுமே சொந்தக் கட்டடங்களில் தான் இயங்கிக் கொண்டிருந்தன. அதனால் இடம், வாடகையென்றெல்லாம் எந்தப் பிரச்சனையும் இருக்கவில்லை.

அந்த ஆறில் ஒரு பாதியை நான் நடத்திக் கொண்டு, மீதியை உன் பொறுப்பில், ஏன் - உன்னிடமே



ஒப்படைத்து விடுகிறேனென்று மகனை அழைத்துச் சொன்னார்.

சொன்னதோடு விட்டுவிடாமல் ஒரு மூன்று உணவகங்களை மகன் கையில் ஒப்படைத்து விட்டு, எந்தவொரு நவீன மயமாக்கலும் செய்யப்படாத மூன்றைத் தான் எடுத்துக் கொண்டார்.

ஆனால் சுரேந்திரனுக்கோ தந்தை கொடுப்பதை வாங்கிக் கொள்ளச் சிறிதும் விருப்பமிருக்கவில்லை. அவன் தானே சுயமாகச் சம்பாதித்துத் தொடங்க வேண்டுமென்று ஆசைப்பட்டான்.

ஆனால் அதற்குத் தேவேந்திரனோ, என்ன நேற்று வந்த உனக்குக் காலங்காலமாகத் தொழிலிலிருக்கும் என்னுடன் மோதப் பயமாக இருக்கிறதா என்று கேலியாகக் கேட்டார்.

அப்படிக் கேட்ட தனது தந்தையின் வார்த்தைகளில் தனக்குள் சிரித்துக் கொண்டான் சுரேந்திரன்.

அப்பொழுது தான் அந்த முடிவுக்கு வந்தான்.

தான் சுயமாகச் சம்பாதித்துத் தன் விருப்பம் போலத் தொழில் தொடங்கி நடத்துவது தனி, தந்தையின் விருப்பம் போல அவர் கொடுப்பதையும் தான் நல்ல முறையில் நிர்வகித்துச் செல்வதோடு, இப்பொழுது அதிலிருந்து வந்து கொண்டிருக்கும் வருமானத்தை விடவும், இன்னும் பல மடங்கு உயர்த்திக் காட்ட வேண்டுமென்ற முடிவுக்கும் மனதிற்குள் வந்திருந்தான்.

அழுத்தக்காரன். இந்த அளவிற்காவது இறங்கி வந்தானே என்று அவருக்கும் மனதிற்குள் ஒரு நிம்மதி. ஆனாலும் அவர் அதைத் துளியும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

மகனிடமும் நல்ல திறமை இருக்கிறது தான். அதற்காகப் பணத்தைக் கொண்டு போய்க் கண்டபடி வாரி இறைக்க வேண்டுமா என்ற ஆதங்கம் அவருக்கு.

சரி, அவ்வளவுதான். இதற்கு மேல் நாமும் எதையும் பேச வேண்டாமென்று தனது கையிலிருக்கும் உணவுகளை மட்டுமே எப்பொழுதும் போலக் கவனித்துக் கொள்ளத் தொடங்கி விட்டிருந்தார் தேவேந்திரன்.

## 2

''வாங்க அத்தை.''

வீட்டிற்குள் வந்த கலைவாணியை சந்தோஷமாக வரவேற்றாள் சஞ்சனா.

''வர்றேம்மா, அப்புறம் எப்படியிருக்கீங்க?''

''நாங்க நல்லார்க்கோம் அத்தை. அங்க எல்லாரும் எப்படியிருக்காங்க?''

''எல்லாரும் நலம்மா. அப்பா தூங்கிட்டிருக்காரா?''

''ஆமாம் அத்தை. இப்பதான் சாப்பிட வெச்சு மருந்து குடுத்தேன். தலைக்கும் குளிக்க வெச்சு விட்டதுக்கு அப்படியே தூங்கிட்டார்.''

இல்லாவிட்டால் மட்டும் எழுந்து நடமாடிக் கொண்டோ அல்லது அமர்ந்து கொண்டோவா இருந்திருக்கப் போகிறார் என்று மனதில் ஒரு வலியுடன் நினைக்கத் தோன்றியது.



''முன்ன இருந்ததுக்கு இப்பப் பரவாயில்லையாம்மா?''

ஆமாம் என்பதைப் போலத் தலையை ஆட்டி வைத்தாள் சஞ்சனா.

இல்லையென்று உண்மையைச் சொல்ல வந்த மனச்சாட்சியை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

தன் துன்பம் தன்னோடு போகட்டும். திருமணத்தை அருகில் வைத்துக்கொண்டு பாவம் இவரையும் பயப்படுத்த வேண்டாமென்று தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

''ஏம்மா ஒரு மாதிரியிருக்க?''

''இல்லையே அத்தை.'' என்றவள் அங்கிருந்த சேரைத் தனது கையிலிருந்த துணியால் தூசு தட்டி, ''உக்காருங்க அத்தை.'' என்றாள்.

''அப்புறம் நீ சாப்பிட்டயாம்மா?''

''ஆமாம் அத்தை. இப்பதான் இட்லி சாப்டுட்டு மதியத்துக்கு சாப்பாடு வெச்சு எடுத்து வெச்சுட்டு வந்தேன்,'' என்றவள், ''நீங்க வந்து சாப்புடுங்க,'' என்று அழைத்தாள்.

''இல்லமா, நான் ஆச்சு. அப்புறம் இங்க வா. இதுல இருக்கற எல்லாத்தையும் வெளிய எடுத்து வை. அப்பாவுக்குப் பிடிக்குமேன்னு வத்தக்குழம்பு செஞ்சுட்டு எடுத்துட்டு வந்தேன். அதயும் எடுத்து டேபிள் மேல வை.''

பாவம் அத்தை, அங்கிருந்து செய்து எடுத்து வந்ததற்காகவாவது தந்தை ஒரு இரண்டு வாய் சாப்பிட வேண்டுமே என்று மனதார நினைத்துக் கொண்டாள்.

''என்னமா, சொல்லு?''

''அவரு... அவரு நல்லார்க்காரா அத்தை?''

அவள் கேட்க வந்தது சுரேந்திரன் வரவில்லையா என்று தான். ஆனால் அவன் வராவிட்டால் இவரும் தான் அதற்கு என்ன பதில் சொல்வார் பாவம் என்று கேட்க வந்து விட்டுப் பிறகு மென்று விழுங்கினாள்.

"அவனுக்கு என்னமா? மூக்கு முட்டத் தின்னுட்டுத் தொழில் தொழில்னு ஓடிட்டிருக்கான். அதுலயும், அவங்கப்பா ஏதோ சொல்லியிருப்பார் போல. ரோஷக்காரனாச்சே..." என்று ஏதேதோ சொல்லிச் சமாளித்தார்.

"அச்சச்சோ! நான் சும்மா தான் கேட்டேன் அத்தை. அதோட கல்யாணத்துக்கான எல்லாப் பொறுப்புகளையும் நீங்களே எடுத்துச் செய்யறதுனால கல்யாண அலைச்சலும் இருக்குமே," என்றாள்.

"அலைச்சல்னு இல்ல, ஆனாலும் மாமா பத்திரிகை குடுக்கறதுக்காக வெளியூருக்குத் தான் போயிருக்கார்," என்றார் கலைவாணி.

"அப்புறம் சொல்றீங்க அத்தை, அப்ப இங்க தொழில முழுக்க முழுக்க அவருதான கவனிச்சாகணும்."

அப்படிச் சொன்ன சஞ்சனாவைப் பார்த்த கலைவாணிக்குமே ஒரே மாதிரிதான் ஆகி விட்டிருந்தது. கூடவே பாவமாகவும்.

"அது எல்லாம் சரிதாம்மா. ஆனா கல்யாணத்துக்கப்புறமும் இப்படியே இருக்காத. காதப் புடிச்சுத் திருகி உம் புருஷன உம் பின்னாடி சுத்த வை."

ஏனோ அவரது கேலியைச் சஞ்சனாவால் ரசிக்க முடியவில்லை.

ஆனாலும் அது வெளிப்படையாகத் தெரிந்து விடாத வண்ணம் சிரித்து வைத்தாள்.



அது கலைவாணியின் கவனத்திலும் படவே செய்தது.

"நீ பாவம் மனசப் போட்டு எதுக்கும் குழப்பிக்காதமா. அதது நடக்கற மாதிரி தான் நடக்கும். முதல்ல நீ உன் உடம்பக் கொஞ்சம் பாத்து வெச்சுக்கணும். முன்ன இருந்ததுக்கு இந்த ரெண்டு மாசத்துலயே எந்த அளவுக்கு மெலிஞ்சு போயிருக்க தெரியுமா?"

..................

"அப்பா கவலை இருக்கும் தான். அதுக்காக உன் ஆரோக்கியமும் முக்கியம்தான?" என்றவரிடம், ஆமாம் என்பதைப் போலத் தலையை ஆட்டி வைத்தாள்.

அன்று மதியம் மூன்று மணி வரை இருந்துவிட்டுப் பிறகு தனது மருமகளுக்கு ஆறுதல் சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டிருந்தார் கலைவாணி.

அவர் உடன் இருக்கும் வரை ஓரளவு நன்றாக உணர்ந்தவளுக்கு, அவர் கிளம்பிச் சென்றதும், மீண்டும் அந்த இனம் புரியாத பயமும் கவலையும் வந்து தன்னைப் பிடித்துக் கொண்டு விட்டதை மனதில் ஒரு வலியுடன் உணர்ந்தாள்.

என்னவோ உலகத்திலேயே தான் மட்டுமே தனியாக இருப்பதைப் போலவும், தனக்கென்று யாருமே இல்லாததைப் போலவும் வழக்கம் போல அந்த எண்ணம் தோன்றி அவளுடைய நிம்மதியை இழக்கச் செய்து கொண்டிருந்தது.

இப்பொழுது மட்டும் சுரேந்திரனின் தோள்களில் சாய்ந்து கொள்ள முடிந்தால் மனதிற்கு எவ்வளவு இதமாக இருக்குமென்று நினைக்கத் தோன்றியது. அதற்கு மேல் அவன் தானே ஆறுதல் வார்த்தைகளும் வேறு சொன்னால்...

ஏதோ பேராசைப்படுவதைப் போல ஒரு எண்ணம் தோன்றி, இருக்கிற மிச்ச வலுவையும் இழக்கச் செய்து விட்டிருக்க, அதற்கு மேல் ஒன்றுமே செய்யத் தோன்றாமல், அப்படியே சுவரில் சாய்ந்து அமர்ந்து விட்டிருந்தாள் சஞ்சனா.

தந்தையின் முனகல் சத்தம் நடப்பை மீண்டும் புரிய வைக்க, ஓடிச் சென்று என்னவென்று பார்த்தாள்.

''அப்பா!''

..........

''அப்பா! சொல்லுங்கப்பா.''

தந்தையின் முனகல் தான் அதிகமாகியிருந்ததே தவிர அவரிடமிருந்து எந்தவொரு பதிலும் வராது போயிருக்க, பயத்துடன் அவரைப் பார்த்தபடி அப்படியே நின்று விட்டிருந்தாள் சஞ்சனா.

சில வினாடிகளில் அவர் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்க, டம்ளரில் எடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாகப் புகட்டினாள்.

சில வாய் குடித்ததும், அவர் போதுமென்பதைப் போல ஜாடை காட்ட, துணியால் வாயைத் துடைத்து விட்டு தலையணையை வாகாக நகர்த்திப் படுக்க வைத்தாள்.

சரி, இனி சென்று வேலையைப் பார்க்கலாமென்று திரும்பப் போனவள், தந்தையின் அழைப்பில் நின்று மீண்டும் அவரைப் பார்த்தாள்.

''என்னப்பா, சொல்லுங்க.''

''இன்னொரு போர்வைய...''



''இதோ ஒரு நிமிஷம்பா,'' என்றவள், உள்ளறைக்குச் சென்று இன்னுமொரு போர்வையை எடுத்து வந்து தந்தைக்குப் போர்த்தி விட்டாள்.

''உன் அத்த....''

''நீங்க நல்லாத் தூங்கிட்டிருந்ததால உங்களத் தொந்தரவு பண்ண வேண்டாம்னு அவங்க அப்பவே கிளம்பிட்டாங்கப்பா.''

''அவரு... சுரே...''

''அவர் வர்லப்பா. போன்ல தான் பேசினார்,'' என்று பாதி உண்மையையும் மீதிப் பொய்யையும் சொல்லி, தந்தையின் முகத்திலிருக்கும் அந்தக் கொஞ்ச நஞ்ச நிம்மதியும் தொலைந்து போய் விடாதவாறு பார்த்துக் கொண்டாள்.

''பாவம்... அவருக்குக் கல்யாண வேலைகள்...''

''ஆமாம்பா, அப்படின்னுதான் சொன்னார். உங்களையும் கேட்டதா சொல்லச் சொன்னார்.''

மனம் வலிக்க வலிக்க மேலும் பொய் சொன்னாள் சஞ்சனா.

ஒரேயடியாக இவ்வளவு பேசி விட்டிருந்த தந்தையைச் சற்று ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

அப்படி நினைத்தது தான் தாமதம், அயர்வில் கண்களை மூடிக் கொண்டு விட்டிருந்த தந்தையை உடனே பாவமாகப் பார்த்தாள்.

அப்படியே சில வினாடிகள் நின்று பார்த்தவள் அவருடைய சீரான மூச்சின் ஒலியில் பாவம் தூங்கட்டுமென்று அங்கிருந்து நகர்ந்தாள்.

அனைத்தும் பவரான மருந்துகளென்று டாக்டர் சொன்னதுதான் நினைவிற்கு வந்தது.

வலி கூடச் சுத்தமாகத் தெரியாதென்றாரே! சரிதான் நோயின் வேதனை இல்லாமல் இருந்தால் அதுவே போதுமென்று நிம்மதியுடன் நினைத்துக் கொண்டாள்.

சஞ்சனா குடும்பத்திற்கு ஒரே பெண் வாரிசு. உடன் பிறந்தவர்களென்று யாரும் இல்லை.

அவளுடைய தாய் சிறு வயதிலேயே ஒரு விபத்தில் இறந்து போயிருக்க, தந்தையிடம் தான் வளர்ந்தாள்.

சஞ்சனாவின் தந்தையான ராகவனும் சுரேந்திரனின் தந்தையான தேவேந்திரனும் சிறு வயதிலிருந்தே நண்பர்கள்.

அந்த வகையில் இரண்டு குடும்பங்களுமே எப் பொழுதும் வந்து போய்க் கொண்டு மிகுந்த தோழமை யுடன் பழகிக் கொண்டு வந்தன.

சஞ்சனா எப்பொழுதும் சுட்டிப் பெண் என்பதோடு, பழகுவதற்கும் நல்ல குணங்களைக் கொண்ட இனிமை யான பெண்ணும் கூட.

அவளைப் பிடிக்காதவர்கள் மிகக் குறைவு. அப்படி யிருக்கும்போது தேவேந்திரன் குடும்பத்திற்குச் சொல் லவா வேண்டும்?

பெண்ணின் அழகிற்கும், குணத்திற்கும் நீதான் எங் கள் வீட்டு மருமகளென்று சஞ்சனாவின் காது படவே நிறைய முறை சொல்லியிருக்கிறார்கள்.

அப்படியிருக்கும் போது படிப்பிற்காக இடையில் ஒரு ஐந்து வருடங்கள் வெளியூரில் இருக்கும் கல்லூரிக்குச்



சென்று படிப்பை முடித்துவிட்டு இப்பொழுது ஒரு ஆறு மாதங்களாகத் தான் தந்தையுடன் இருக்கிறாள்.

சஞ்சனாவைப் பொறுத்தவரை இன்னும் இன்னும் என்று படித்துக் கொண்டே இருக்க வேண்டும் போல படிப்பில் ஒரு வெறி.

விட்டிருந்தால் மீண்டும் கூடப் படிக்கத் தொடங்கி யிருப்பாள்.

ஆனால் அதற்கு வழியில்லாமல் அவளுடைய தந்தை யான ராகவனின் உடல் நிலை அவளை ஒட்டு மொத்த மாகத் திசை திருப்பி விட்டிருந்தது.

முன்பிருந்தே அவருக்கும் பிரச்சனை இருக்கவே செய்ததென்றாலும், அவரளவிற்குச் சமாளித்துக் கொண்டு நடமாட அவரால் முடிந்திருந்தது.

தந்தையின் நோயை அறிந்துகொண்ட சஞ்சனாவும், இப்படியென்று தெரிந்திருந்தால் நான் வெளியூருக்குப் படிக்கவே சென்றிருக்க மாட்டேனே என்று ஒரே அழுகை.

அதிலும் இங்கு சிட்டியில் இல்லாத கல்லூரிகளா? இப்படிச் செய்து விட்டிருக்கிறேனே என்று ஒரே புலம்பல்.

தான் மட்டும் படிப்பதற்காக வெளியூர் சென்றிருக் காமல் தந்தையுடனேயே இருந்திருந்தால் தந்தைக்கு நோய் இந்த அளவிற்கு முற்றியிருக்காதே என்ற கவ லையே நாளுக்கு நாள் அவளை மிகுந்த வேதனைக் குள்ளாக்கிக் கொண்டிருந்தது.

மிகவும் மென்மையான குணம் கொண்டவள் என்ப தால் நாளடைவில் அதுவே பெரிய குற்ற மனப் பான்மையாகவும் மாறியிருந்தது.

ஆனால் அவளுடைய தந்தையோ நீ இந்த அளவிற்குக் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. இப்பொழுது நீ என்னை இந்த அளவிற்குப் பார்த்துக் கொள்கிறாயே, அதுவே போதும். அதோடு யாருக்கும் தெரியாமல் இருந்ததால் தான் நானும் நோய் பற்றிய பயமோ, கவலையோ இல்லாமல் இத்தனை வருடங்களும் என்னளவில் சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் இருந்திருக்கிறேனென்று மகளையும் சமாதானப்படுத்தினார்.

வேண்டுமானால் நீ எனக்கு ஒரு உதவி மட்டும் செய்து கொடு. எனக்காக என் உயிர் பிரிவதற்கு முன்னால் உன்னை மாலையும் கழுத்துமாகப் பார்க்க ஆசைப்படுகிறேன். அதை நிறைவேற்றி வை என்றார்.

தேவேந்திரன் வீட்டினரும் என்னிடம் கேட்டுக் கொண்டே தான் இருக்கிறார்கள். நீ மட்டும் சரியென்று ஒரு வார்த்தை சொல். உன்னை சந்தோஷமாக அரவணைத்துச் செல்ல அவர்கள் அனைவருமே தயாராக இருக்கிறார்கள் என்றார்.

சஞ்சனாவிற்குமே ஆரம்பத்திலிருந்தே சுரேந்திரன் என்றால் மிகவும் பிடிக்கும்.

அதே சமயம் தேவையற்ற கற்பனைகளுக்கும் அவள் என்றுமே இடம் கொடுத்தாள் இல்லை. அதற்குப் பிறகு மேற்படிப்பிற்காக வெளியூரும் சென்று விட்டிருந்ததால், கடந்த ஐந்து வருடங்களாக அந்தக் குடும்பத்தினருடனான தொடர்பு மிகவும் குறைந்து போய் விட்டிருந்தது.

மீண்டும் அந்தக் குடும்பத்தினருடன் பழக ஆரம்பித்த போதுதான் அவர்கள் அனைவரும் இன்னும் அதே அன்புடன் தான் இருந்து வருகிறார்கள் என்பதைச் சஞ்சனாவால் புரிந்து கொள்ள முடிந்தது. ஏன் அவள்



இப்போதிருக்கும் மனநிலைக்கு அவர்களுடைய அந்த அன்பு மனதிற்கு எவ்வளவோ ஆறுதலாகவும் இருந்தது.

அதற்குப் பிறகு திருமண ஏற்பாடுகள் வெகு மும்முரமாக நடைபெற ஆரம்பித்திருந்தன.

திருமணத் தேதி முடிவான சமயத்தில் எல்லாம் கூட ராகவனும் ஓரளவு எழுந்து நடமாடிக் கொண்டு தான் இருந்தார்.

மகளின் திருமணப் பேச்சு அவரை எந்த அளவிற்கு எழுந்து நடமாடச் செய்திருக்கிறது என்று கூட அனைவரும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள்.

ஆனால் அதெல்லாம் சில நாட்கள் தான். மீண்டும் படுக்கையில் விழுந்திருந்தார்.

ஆனாலும் நல்ல முறையில் பேசிக் கொண்டும், அவரளவிற்கு நடமாடிக் கொண்டும் இருந்தவர், கடந்த பதினைந்து நாட்களாகத் தான் படுத்த படுக்கையாகி விட்டிருந்தார்.

இந்தக் கவலை ஒரு பக்கமிருக்க, நன்றாகப் பேசிக் கொண்டிருந்த சுரேந்திரன் ஏன் தன்னிடம் கடந்த ஒரு மாதமாகப் பாரா முகமாக நடந்து கொள்கிறாரென்று காரணம் புரியாமல் இன்னொரு பக்கம் மனதிற்குள் உருகி உருக்குலைந்து கொண்டிருந்தாள் சஞ்சனா.

## 3

இதோ இதோ என்று கண்ணாமூச்சி காட்டிக் கொண்டிருந்த திருமண நாளும் இனிதே விடிந்தது.

மணக் கோலத்தில் மணமகனான சுரேந்திரனின் அருகில் அமர வைக்கப்பட்டாள் சஞ்சனா.

ஆனால் அவளுடைய முகத்தில் தான் சந்தோஷம் பெயரளவிற்குக் கூட இருக்கவில்லை.

அவளுடைய தந்தையின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வந்ததுதான் அதற்குக் காரணம்.

தந்தை ஒருவருக்காக மட்டும் இருந்திருக்கா விட்டால் நிச்சயம் இப்பொழுது திருமணத்திற்குச் சம்மதித்திருக் கவே மாட்டேனே என்று மனதிற்குள் ஊமையாய் அழுதாள்.

அந்த அளவிற்குச் சுரேந்திரனின் கடுமையான முகம் அவளை எண்ண வைத்தது.

அதே போல மற்றவர்களுக்காக என்று கூட முகத்தை இயல்பாக வைத்துக் கொள்ள அவனும் முயலவில்லை என்றால் அவனுக்கும் இந்தத் திருமணத்தில் விருப்ப மில்லையென்று தானே அர்த்தமென்றும் நினைக்கத் தோன்றியது.

கடவுளே! என்னை ஏன் இப்படியெல்லாம் வதைக் கிறாய்? என்னால் முடியவில்லையே. அப்பா! என்னால் சத்தமாக முடியவில்லையே என்று சஞ்சனாவின் மென்மையான உள்ளம் கதறித் தீர்த்தது.

ஆனால் அவளுடைய அந்த மனப் போராட்டங் களைப் பற்றியெல்லாம் துளியும் அறியாதவனாக, ஏன் - அதைப் பற்றியெல்லாம் எனக்கென்ன என்பதைப் போல அதே கடுமையான முகத்துடன் சஞ்சனாவைத் தனது வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்டிருந்தான் சுரேந் திரன்.



முதலில் சுரேந்திரனின் பெற்றவர்கள் காலில் விழுந்து ஆசி பெற்றுக் கொண்ட மணமக்கள் பிறகு ராகவனின் ஆசி பெறுவதற்காகக் கிளம்பினார்கள்.

படுக்கையில் இருந்தபடியே சிரித்த முகத்துடன் மணமக்களை வாழ்த்தி விட்டுப் பிறகு அப்படியே சில வினாடிகள் தொடர்ந்து அவர்களைப் பார்த்துக் கொண் டும் இருந்தார் ராகவன்.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான். மீண்டும் சோர்வில் கண்களை மூடிக் கொண்டிருந்தார்.

சரிதான், இதற்கு மேல் நின்று அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாமென்று இருவரும் வெளியே வந்து விட்டிருந்தனர்.

இல்லை, நான் வர மாட்டேனென்று தந்தையிடம் சென்று விடத் துடித்த கால்களைச் சிரமப்பட்டுக் கட்டுப் படுத்திக் கொண்டு கணவனுடன் நடந்தாள்.

ஆனால் அவனுக்குத் தான் தன்னுடன் வருபவளைப் பற்றியோ, அவளுடைய மனம் படும் பாட்டைப் பற்றியோ துளியும் அக்கறை யில்லையே என்று விரக்தி யுடன் நினைக்கத் தோன்றியது.

''நீ கவலைப்படாம போய்ட்டு வாடாம்மா. உன் அப் பாவ உன்ன மாதிரியே நானும் கவனமாப் பாத்துக் கறேன்,'' என்று தந்தையுடைய சித்தி வந்து விடை கொடுக்க, கண்கள் கலங்கத் தலையை ஆட்டினாள்.

இரவின் தனிமையில் கணவனை எதிர்கொண்ட சஞ்சனாவிற்கு நெஞ்சு படீர் படீரென்று அடித்துக் கொள்ள, மிரட்சியுடன் விழித்தபடி அப்படியே நின்று விட்டிருந்தாள்.

கை, கால்களும் கூட அவளுடைய கட்டுப்பாட்டை மீறி நடுங்கத் தொடங்கி விட்டிருந்தன.

புலியை அதன் குகையிலேயே சந்திப்பதைப் போல...

கடவுளே! ஏன் இப்படியெல்லாம் நினைக்கத் தோன்றுகிறது.

உள்ளே வந்து நின்றிருந்த தன்னை உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் பார்த்த கணவனைத் தானும் பயத்துடன் பார்த்தாள்.

"உங்கிட்ட கொஞ்சம் பேசணும்."

கணவனின் அழுத்தமான குரலில், கடவுளே! ஏன் தன்னை இப்படிப் பார்க்கிறான், என்னவாக இருக்குமென்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பார்த்தாள் சஞ்சனா.

அடிபட்டுப் பட்டு நொந்து போன மனதால் நல்லதையே எண்ண முடிந்திருக்கவில்லை.

"என்ன காதுல விழுந்ததா?"

மீண்டும் கேட்ட கணவனின் கேள்வியில், "சொல்லுங்க," என்றவளின் குரல் அவளுக்கே கேட்கவில்லை.

"உங்கப்பாவுக்காக அவசரத்துல நடந்த கல்யாணம் தான்னாலும், அதுக்காக அத ஒரு காரணமா வெச்சுட்டு நீ உன் கடமைகள்ல இருந்து தப்பிச்சுட முடியாது."

ஏன் இப்படிச் சொல்கிறான்?

ஓ! எங்கே இந்தத் திடீர் கல்யாணத்தினால் அவனுடைய ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போய் விடுமோ என்று பயப்படுகிறானோ?



அப்படி நினைத்து விடவும் வழியில்லையே. இரண்டு மாதங்களுக்கும் முன்பே முடிவாகி, வழக்கம் போல அனைத்துத் திருமணங்களையும் போலத் தானே இதுவும் நடந்து முடிந்திருக்கிறது.

சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் இவன் தான் தன் இஷ்டத்திற்கு மற்றவர்களுடைய உணர்ச்சிகளைப் பற்றித் துளிகூட யோசித்துப் பார்க்காமல் நடந்து கொள்கிறான்.

எது எப்படியோ, திருமணம் செய்து இழுத்துக் கொண்டு வந்தாயிற்று. இனி மற்ற அனைத்தையும் கூட நிறைவேற்றிக் கொள்ளத் தொடங்கி விட வேண்டியது தானே.

"ஆனா இந்தச் சடங்கு சம்பிரதாயத்துல எல்லாம் எனக்கு நம்பிக்கையில்ல. பெரியவங்களுக்காகப் பாக்க வேண்டியிருக்கு. இல்லன்னா இன்னைக்கு உங்க வீட்லயே அதாவது அங்கிள் கிட்டயே கூட உன்ன நான் விட்டுட்டு வந்திருப்பேன்."

தனக்காகப் பார்க்கிறானே, அப்படியானால் இவன் இன்னும் பழைய சுரேந்திரனே தானோ?

ஆனால் அந்தச் சில நிமிட நிம்மதிக்குக் கூட அவன் விட்டாலல்லவா?

"அதுக்காக எப்பவுமே இப்படித்தான்னு நினைச்சுக்காத. இன்னைக்கு ஒரு நாள் மட்டும் தான். ரெண்டு நாளாவே எல்லாரும் சேந்து உன்ன ஃப்ரீயா இருக்க விடாம ஒரு வழி பண்ணிட்டாங்கன்னு நினைக்கறேன். அதனால போய் நிம்மதியாப் படுத்துத் தூங்கு."

மனதிற்குள் நிம்மதிப் பெருமூச்சு விட்டவள், மீண்டும் கணவன் ஏதோ சொல்ல வர அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''அங்கிள் பாவம் ஒரே பொண்ணுன்னு செல்லம் குடுத்து வளத்துட்டார். ஆனா இங்க உன் இஷ்டத்துக் கெல்லாம் கண்டபடி ஆட முடியாது. இந்தக் குடும் பத்துக்குன்னு ஒரு பேர் இருக்கு. அத மனசுல வெச்சு ஒழுக்கமா நடந்துக்கோ.''

சொல்வதையெல்லாம் சொல்லிவிட்டுக் கணவன் அவன் பாட்டிற்குச் சென்று கட்டிலின் ஒரு பக்கத்தில் படுத்து விட்டிருக்க, சஞ்சனா தான் சாட்டையால் அடி வாங்கியதைப் போல, அவனுடைய வார்த்தைகளால் துடித்துப் போய் விட்டிருந்தாள்.

என்னவெல்லாம் சொல்லி விட்டான்.

அதுவும் எவ்வளவு சுலபமாக.

ஏற்கெனவே நொந்து போய்க் கிடப்பவளை மேலும் வதைக்கக் கூடாது என்ற எண்ணம் கூட இல்லையே.

கண்டபடி ஆடக் கூடாதாமே. ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டுமாமே. அப்படியானால் இதற்கு முன்பு தான் அந்த மாதிரியெல்லாம் நடந்து கொண்டதாகச் சொல்கிறான் என்று தானே அர்த்தம்.

படுத்த சில நிமிடங்களிலேயே நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்து விட்டிருந்த கணவனை விரக்தியுடன் பார்த்துச் சிரித்துக் கொண்டாள் சஞ்சனா.

மற்றவர்களுடைய நிம்மதியைக் கெடுத்து விட்டு, இவன் மட்டும் படுத்ததும் எவ்வளவு நிச்சிந்தையாகத் தூங்குகிறான் என்றிருந்தது.

ஏதேதோ எண்ணங்களில் மனம் மேலும் பாரமாகி விட்டிருக்க, சரிதான், அவனுக்கேனும் அந்த பாக்கியம் கிடைத்திருக்கிறதே. அதுவே போதுமென்று கட்டிலின் மறுபக்கத்தை நோக்கி நடந்தாள்.



அதிகப்படியான ஆபரணங்களையெல்லாம் கழற்றி வைத்தவள், தானும் கட்டிலில் ஏறிப் படுத்துக் கொண்டாள்.

ஆனால் தூக்கம் அருகில் வந்தாலல்லவா?

எதையெதையோ எண்ணிக் கலங்கித் தீர்த்தவள், அதிகாலை நேரத்தில் தான் தூங்கவே ஆரம்பித்திருந்தாள்.

# 4

**கா**லையில் சஞ்சனா படுக்கையை விட்டு எழுந்த போது, அறையெங்கும் வெளிச்சம் பரவ ஆரம்பித்திருந்தது.

சில மணி நேரங்களின் ஆழ்ந்த தூக்கத்தினாலோ என்னவோ, உடலிற்கும் மனதிற்கும் சற்று வலு வந்து விட்டிருந்ததைப் போல உணர்ந்தாள்.

கணவன் எப்பொழுது எழுந்து சென்றிருப்பானென்று யோசித்துக் கொண்டே, வேகமாகச் சென்று காலைக் கடன்களை முடித்துக் குளித்து விட்டு ஃப்ரெஷ்ஷாக வெளியே வந்தாள்.

''வாடாம்மா.''

சமையலறைக்கு வந்திருந்த தன்னை அத்தை அழைக்க, புன்னகையுடன் அருகில் சென்றாள்.

''காபி எடுத்துக்கோடாம்மா.''

''அவரு...'' என்று தயக்கத்துடன் கேட்டுக் கொண்டே தனது அத்தை நீட்டிய ட்ரேயிலிருந்து ஒரு கப்பை எடுத்துக் கொண்டாள்.

''சுரேன் காலைல நேரத்துலயே எங்கயோ கிளம்பிப் போனாம்மா. இன்னும் கொஞ்ச நேரத்துல அப்பாவும் மகனும் சாப்பிட வந்து உக்காந்துடுவாங்க. அப்படியே உங்கிட்டப் பேசிட்டே நான் வேலையப் பாக்கறேன். நீ சேர்ல உக்காந்து குடி,'' என்று அடுப்பருகில் சென்றார்.

தானும் வேகமாகக் காபியைக் குடித்து விட்டு வந்து சமையலில் தனது அத்தைக்கு உதவி செய்தாள் சஞ்சனா.

''நிகிலா எங்க அத்தை?''

''அவ இன்னும் தூங்கறாம்மா. கல்யாண அசதியெல்லாம் போகத் தூங்கணும். அதனால காலைல பத்து மணியில்லாம எழுந்து வர மாட்டேன். அதுக்கு முன்னாடி நைட் தூங்கப் போகும்போதே சொல்லிட்டுப் போய்ட்டாமா.

''சிரிக்கற. வேணும்னா நம்ம ரெண்டு பேரும் போய் எழுப்பி விட்டுடலாமா?''

''அச்சச்சோ! பாவம் அத்தை. நல்லாத் தூங்கி எழுந்து வரட்டும்.''

''அது சரி, என்னமா?''

''அகிலாக்கா...''

''இப்பதாம்மா ஏதோ ஜோலின்னு கிளம்பிப் போனாங்க. மதியம் வர்றோம்னு உங்கிட்ட சொல்லச் சொல்லிட்டு தான் போனா.''

''ஓ. நீங்க போய் உக்காருங்க அத்தை. வேலையெல்லாத்தையும் நான் பாத்துக்கறேன்.''

''அது சரி. வேணும்னா நீ போய் உக்காரு. உனக்கு நான் ப்ளேட்ல போட்டுட்டு வந்து குடுக்கறேன்,'' என்றவர், ''அப்பாவுக்குப் பேசினயாம்மா?'' என்று கேட்டார்.

''ஆமா அத்தை. இப்பப் பேசிட்டு தான் வந்தேன். வழக்கம் போல மருந்து மயக்கத்துல அப்பப்பப் பேசறதும் உடனே தூங்கிப் போறதுமா இருக்காராம். சின்னப் பாட்டி சொன்னாங்க,'' என்றாள்.

''பாவம், நாம இன்னும் வேற டாக்டர்கிட்ட அப்பாவ அழைச்சுட்டுப் போய்ப் பார்க்கலாமாம்மா?''

''குணமாக சான்ஸ் இருக்குதுன்னா பாக்கலாம் தான் அத்தை...'' என்றவளுக்கும் ஏற்கெனவே நான்கைந்து மருத்துவர்களிடம் அழைத்துச் சென்று பார்த்ததும் அவர்கள் கையை விரித்து விட்டிருந்ததும் தான் நினைவிற்கு வந்தது.

அப்படித் தொடர்ந்து பல மருத்துவர்களைப் போய்ப் பார்க்கத் தொடங்கிய பிறகு தான் தந்தையின் உடல் நிலை மேலும் சீர்கெட்டுப் போனதோ என்றும்.

''சிகரெட், விஸ்கின்னு எல்லாப் பழக்கங்களுமே அப்பா கிட்ட இருந்துட்டே இருந்ததும் கூட ஒரு காரணம் தான் சஞ்சனா. நாங்களும் அப்பப்ப சொல்லத்தான் செஞ்சோம்...''

தான் மட்டும் உடனிருந்து பார்த்துச் சொல்லிக் கொண்டே இருந்திருந்தால்...

எப்பொழுதும் போலத் தந்தையின் இந்த நிலைக்குத் தான்தான் காரணமென்ற குற்ற மனப்பான்மையில் மீண்டும் கண்கள் கலங்கி விட்டிருந்தன சஞ்சனாவிற்கு.

அதை உணர்ந்த கலைவாணியோ தனது மருமகளை சமாதானப்படுத்தினார்.

''நீ இருந்து பாத்திருந்தாலும் கூட உன்னாலயு பெருசா எதையும் பண்ணியிருக்க முடியாதுமா. அதோ

மத்தவங்க அவருக்கு எடுத்துச் சொல்றத உங்கப்பாவுமே எப்பவும் விரும்ப மாட்டாரே,'' என்றார்.

..........

''எனக்கென்னவோ உங்கப்பாவுக்கு நுரையீரல்ல இந்த நோய் இருக்கறது ரொம்ப வருஷங்களாவே அவருக்கும் தெரிஞ்சிருக்கும்னு தான் தோணுது,'' என்றவரின் வார்த்தைகளில் மேலும் அதிகமாகச் சஞ்சனாவின் கண்கள் கலங்கத் தொடங்கி விட்டிருந்தன.

''அச்சச்சோ! நான் ஒரு பைத்தியம். பாவம், ஏற்கெனவே கவலைப்பட்டுட்டிருக்கற உன்ன மேலமேல கஷ்டப்படுத்தறேன்,'' என்று தன்னையே நொந்து கொண்டார் கலைவாணி.

சிறிது நேரத்தில் ஆண்கள் இருவரும் டிபன் சாப்பிட வர, தனது அத்தைக்குத் தானே அனைத்தையும் அருகிலிருந்து எடுத்துக் கொடுத்து உதவி செய்தாள் சஞ்சனா.

தனது மாமனாரிடம் அவர் கேட்டதற்குப் பதில் சொன்னவள், ''இப்பதான் அப்பாவப் போய்ப் பார்த்துட்டு வந்தேன்,'' என்றவரை அவர் மேலும் என்ன சொல்லப் போகிறாரோ என்பதைப் போலப் பார்த்தாள்.

''அப்படியே தாம்மா இருக்கார். என்னப் பாத்ததும் கொஞ்சம் சிரிச்சான்...'' சில வினாடிகள் எடுத்துத் தன்னைச் சமாளித்துக் கொண்டு பேசிய தேவேந்திரனையே கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் சஞ்சனா.

''எதுவுமே நம்ம கைல இல்லமா. நீ தான் மனச விட்டுடக் கூடாது. உனக்குன்னு நாங்க எல்லாருமே இருக்கோம். நீ தனியா நின்னு கஷ்டப்படக் கூடாதுன்னு...''



ஏனோ மனம் மிகவும் பாரமாகி விட, தாங்கிக் கொள்ள முடியாமல் அழத் தொடங்கி விட்டிருந்தாள் சஞ்சனா.

''அச்சச்சோ! என்னங்க நீங்க?'' என்ற தனது கணவனைப் பார்த்த கலைவாணி, சஞ்சனாவைச் சமாதானப்படுத்த முயன்றார்.

அவளும் சில வினாடிகளில் தன்னைச் சமாளித்துக் கொண்டு நிமிர, ''சரிப்பா. அப்ப நான் முதல்ல கிளம்பறேன்,'' என்று சாப்பிட்டு முடித்து எழுந்திருந்தான் சுரேந்திரன். தொடர்ந்து மாமனாரும் சமாதானப்படுத்த மற்றவர்களை விடத் தனது கணவன் ஆறுதலாக இரண்டு வார்த்தைகள் சொல்ல மாட்டானா என்று ஏங்கினாள் சஞ்சனா.

மருமகளின் பார்வையில் கலைவாணிக்கும் மகன் மேல் கோபமாக வந்தது.

பாவம், ஏற்கெனவே நொந்து போய்க் கிடப்பவளிடம் அப்படித்தான் இவனும் சற்று பாசத்துடனும் பரிவுடனும் நடந்து கொண்டால் என்னவென்று எரிச்சலாகவும்.

மதியம் வந்த சஞ்சனாவின் பெரிய நாத்தனார் அகிலா மீண்டும் மாலையே ஊருக்குக் கிளம்பியாக வேண்டியிருந்ததால், அவள் அவளுடைய கணவன் அதாவது அந்த வீட்டு மாப்பிள்ளை, கலைவாணி, சஞ்சனா என அனைவரும் ராகவனைப் பார்த்துவிட்டு வரலாமென்று கிளம்பிச் சென்றனர்.

முன் இருந்ததை விடவும் கூட மோசமாகி விட்டிருந்த தந்தையின் உடல் நிலையில் நடுங்கிப் போனாள் சஞ்சனா.

அந்த அளவிற்கு அவரால் பெற்ற மகளைக் கூட அடையாளம் கண்டுகொள்ள முடிந்திருக்கவில்லை.

மருந்தின் மயக்கம், சிறிது நேரம் போனால் சரியாகி விடுமென்று அனைவரும் சேர்ந்து அவளுக்கு ஆறுதல் சொல்லி உடன் அழைத்துக் கொண்டு வந்து விட்டிருந்தனர்.

ஏனோ எப்பொழுதுமே இல்லாத வகையாக அன்று சஞ்சனாவின் மனம் மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

சற்று நேரம் படுத்துக் கொண்டிருக்கட்டுமா என்று கேட்டுக் கொண்டு தன் அறைக்குப் போனவள் தான், அப்படியே படுக்கையில் விழுந்து கதறித் தீர்த்தாள்.

ஒன்றுமே முடியாமல் அப்படியே படுத்துக் கொண்டவள், யாரோ அழைக்கும் குரலில் மீண்டும் எழுந்து வந்திருந்தாள்.

தன்னிடம் விடைபெற்றுக் கொண்டதோடு ஆறுதல் வார்த்தைகளும் சொல்லிவிட்டு அகிலாவின் குடும்பம் கிளம்ப அவர்களுடைய கார் புறப்பட்டுச் சென்றதும் அனைவரும் வீட்டிற்குள் வந்தனர்.

# 5

உள்ளே வந்த தன்னை அத்தை அழைக்க அருகில் சென்றாள் சஞ்சனா.

"இங்க வா. உக்காந்து முதல்ல இத சாப்புடு," என்று அவர் கொடுத்த டிபன் ப்ளேட்டை வாங்கிக் கொண்டாள்.

சும்மா வாங்கி வெச்சுட்டா மட்டும் போதாது. சாப்பிடவும் செய்யணும் என்றவரின் வார்த்தைகளில் சாப்பிடவும் முயன்றாள் சஞ்சனா.



ஆனால் மதிய உணவையே நேரங்கழித்துச் சாப்பிட்டிருந்ததில் வயிறு நிறைந்திருப்பதைப் போலிருக்க, ''ப்ளீஸ் அத்தை, காபி மட்டும் போதும்,'' என்று விட்டிருந்தாள்.

''அண்ணி,'' என்று அழைத்துக் கொண்டே தனது சிறிய நாத்தனார் வர, ''என்ன நிகிலா?'' என்று கேட்டாள்.

''நீங்க அங்கிளப் பார்க்கப் போயிருந்தப்ப, உங்க மொபைலுக்கு அண்ணா கூப்புட்டிருந்தார்.''

''ஓ, நான் மொபைல எடுக்காமலே போய்ட்டேன். என்ன சொன்னார்மா?''

''என்னன்னு சொல்லல அண்ணி. சரி, திரும்பவும் உங்ககூடப் பேசிக்கறேன்னு சொல்லிட்டார்.''

என்னவாக இருக்குமென்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே, கணவனிடமிருந்து தனது மொபைலுக்கு அழைப்பு வர, அட்டெண்ட் செய்து காதில் வைத்தாள்.

ஏதோ ஒரு வேகத்தில் சட்டென்று கிளம்பிச் சென்று விட்டிருந்த சுரேந்திரனுக்கு அன்று காலையிலிருந்து எந்த வேலையுமே ஓடியிருக்கவில்லை.

மனைவியின் அழுகை தான் மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்து கொண்டே இருந்தது.

ஒரு ஆறுதல் வார்த்தை கூடச் சொல்லாமல் அப்படி வந்து விட்டோமே என்று அவனுக்குமே ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

மனைவியின் மேல் தனக்கிருக்கும் கோபம் ஆதங்கமெல்லாம் தனி, அதைக் காட்டுவதற்கான நேரம் இது வல்ல என்று தோன்றத் தொடங்கி விட்டிருக்க, உடனே அவளை அழைத்துப் பேச வேண்டும் போலவும் மனம் துடித்தது.

அதிலும் பாவம் மனைவி இப்பொழுதிருக்கும் மனநிலையில் ஆறுதலாக நடந்து கொள்ளாவிட்டாலும் கூடப் பரவாயில்லை, காலையில் கிளம்பி வந்தது போலெல்லாம் இனிமேல் நடந்து கொள்ளவே கூடாது என்று நினைத்துக் கொண்டான்.

நேரம் ஆக ஆக மனைவியிடம் பேசியே ஆக வேண்டும் போலத் தீவிரமாகத் தோன்றத் தொடங்கி விட்டிருக்க, இப்பொழுது இரண்டாவது முறையாகவும் கூட அழைத்து விட்டிருந்தான்.

கணவனுடன் சில வினாடிகள் பேசிவிட்டு மொபைலை வைத்திருந்த சஞ்சனாவும் மனதிற்குள் இப்பொழுது எவ்வளவோ இதமாக உணர்ந்தாள். அதனாலோ என்னவோ அன்று இரவு கணவனை எதிர்கொள்ள நேர்ந்தது முதல் நாளைப் போலச் சிரமமானதாக இருக்கவில்லை.

ஆனாலும் அந்தப் படபடப்பும், இனம் புரிந்து கொள்ள முடியாத ஒருவிதப் பயமும் அப்படியே தான் இருந்தன.

கணவனுக்காகப் பால் டம்ளருடன் உள்ளே வந்தவளுக்கு நேற்று இரவு கொண்டு வந்த பாலைக் காலையில் எடுத்துக் கீழே கொட்டி விட்டுச் சென்றது தான் நினைவிற்கு வந்தது.

தான் உள்ளே வந்ததும் சென்று கதவைத் தாழிட்ட கணவனின் செய்கையில் கால்கள் இரண்டும் தரையிலேயே வேரோடி விட்டாற் போல அப்படியே நின்று விட்டிருந்தாள்.

அப்படியே பின்னால் வந்து தனது தோள்களைத் தொட்ட கணவனின் ஸ்பரிசத்தில் உடல் சிலிர்த்துப் போனாள்.



எதுவும் பேசாமல் அப்படியே தனது தோளில் அணைத்தபடியே மனைவியை அழைத்து வந்த சுரேந்திரன் அவளைக் கட்டிலில் அமர வைத்துத் தானும் அருகில் அமர்ந்து கொண்டான்.

கணவனின் தொடுகையும் அருகாமையும் சஞ்சனாவின் பூவுடலை நடுங்கச் செய்ய, அதைச் சுரேந்திரனாலும் புரிந்து கொள்ள முடிந்தது.

அப்படியே மிருதுவாகத் தனது முகவாயைத் தொட்டுத் தூக்கிய கணவனின் பார்வையைத் தானும் சந்தித்தாள் சஞ்சனா.

''அங்கிளுக்குப் பரவாயில்லையா?'' என்று கேட்ட கணவனுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரிந்திருக்கவில்லை.

................

''என்னமா?''

''தெரியல... ஒரு அளவு...''

''கவலப்படாதமா, எதுவும் ஆகாது...''

எனக்கு ரொம்ப பயமா இருக்கு என்று தொண்டை வரை வந்து விட்டிருந்த வார்த்தைகள் அதற்கு மேல் வரத் தயங்கின.

''சாப்டியா?''

''ம்.''

''என்ன சாப்புட்ட?''

''இட்லி.''

முதலில் சற்று சிரமமாக இருந்தாலும், போகப் போகக் கணவனுடன் பேசுவது எளிதாகி விட்டிருந்தது சஞ்சனாவிற்கு.

ஏன், கவலைகள் அனைத்தும் மறந்து போய், மனதிற்கு சற்று இதமாக இருப்பதைப் போலக் கூட உணர்ந்தாள்.

கணவன் அவன் பாட்டிற்கு சூழ்நிலைக்குச் சம்பந்தமில்லாத, பேசுவதற்கு இலகுவான விஷயங்களைத் தேடி எடுத்துப் பேசிக் கொண்டே போக, இப்பொழுது மேலும் சற்று இதமாகவும் சந்தோஷமாகவும் கூட உணர்ந்தாள் சஞ்சனா.

ஒரு கட்டத்தில் வாய்விட்டுச் சிரிக்கவும் கூடச் செய்தாள்.

ஏனோ தன் பழைய சுரேந்திரனாகக் கணவனைக் கண்டவளுக்கு, தானும் அவனுடன் சரிக்குச் சரி பேசினால் என்னவென்று கூடத் தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

போகப் போக அப்படிப் பேசவும் செய்தாள்.

பேச்சு சுவாரஸ்யத்தில் மேலும் நெருங்கி வந்து விட்டிருந்த மனைவியைச் சுரேந்திரன் விழுங்குவதைப் போலப் பார்க்க, அந்தப் பார்வையில் குப்பென்று முகம் சிவந்து போனாள் சஞ்சனா.

''சஞ்சு...''

கணவன் அழைக்க, மெல்ல நிமிர்ந்தாள்.

இரத்தமெனச் சிவந்து விட்டிருந்த மனைவியின் முகத்தைச் சுரேந்திரன் தனது கைகளில் ஏந்திக் கொள்ள, உடல் சிலிர்த்துத் தானும் கணவனின் கரங்களைப் பிடித்துக் கொண்டாள்.

மனைவியின் அந்த நிலை அவனையும் என்னவோ செய்ய, மேலும் அவளை நெருங்கியிருந்தான் சுரேந்திரன்.



''சஞ்சு.''

........

கணவனின் கரங்கள் இப்பொழுது கழுத்திற்கு இறங்கியிருக்க, ஒரு வித மயக்கத்தில் அப்படியே அவனுடைய மார்பில் சாய்ந்து கொண்டாள்.

நெஞ்சிலுள்ள பாரமெல்லாம் இறங்கி, மனமும் உடலும் லேசாகி வானத்தில் பறப்பதைப் போலிருக்க, அந்தக் கிறக்கம் தந்த மயக்கத்தில் அவள் மேலும் வாகாகக் கணவனின் மார்பில் முகம் புதைத்து அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

இந்த நிலையே நீண்டு கொண்டே போனால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று மனம் ஏங்கத் தொடங்கியிருக்க, அதற்கு மேல் அவளுக்கு எதுவுமே நினைவில் இருக்கவில்லை.

கணவனின் மென்மையான அணைப்பிற்குள் தன்னை மறந்து தொய்ந்து போய் விட்டிருந்தாள்.

நல்ல தூக்கத்தில் திடீரெனக் கண் விழித்துப் பார்த்தவளுக்கு எங்கும் இருட்டு தான் புலப்பட்டது.

தொடர்ந்து அதற்கு மேல் எதையும் யோசிக்க அவளுடைய கணவன் விட்டிருக்கவில்லை.

மனைவியை மேலும் அருகில் இழுத்துக் கொள்ள, அவள் தானும் கணவனின் உடலோடு உடலாகப் பின்னிக் கொண்டிருந்தாள்.

மீண்டும் அதிகாலையில் கண் விழித்தபோது கணவன் அருகில் இல்லாததைக் கண்டாள் சஞ்சனா.

சரிதான் வந்து விடுவார்...

அதற்கு மேல் எதையும் யோசிக்க முடியாத அளவிற்கு மீண்டும் அவளுடைய கண்கள் தூக்கத்தில் தானாகவே மூடிக் கொண்டன.

யாரோ வந்து தட்டி எழுப்புவதைப் போலிருக்க தூக்கத்தில் தன்னையறியாமலேயே அவர்களுடைய கையைத் தட்டி விட்டாள் சஞ்சனா.

''சஞ்சனா...''

..........

''இங்க பாருமா...''

கடவுளே! ஏன் இப்படி எழுப்புகிறார்கள்?

சில வினாடிகளில் ஓரளவு தூக்கம் தெளிந்து விட்டிருக்க, எழுந்து அமர்ந்திருந்தாள்.

கணவன் அருகில் நின்று கொண்டிருப்பது தெரிய, ''என்ன சுரேன்?'' என்று கேட்டாள்.

இரவின் நெருக்கம் அவளை அப்படி அழைக்க வைத்திருந்தது.

''சஞ்சு...''

ஏன், கணவன் ஏன் ஒரு மாதிரியாகப் பார்க்கிறான்?

''யாருக்கு என்ன...''

''அப்பா...''

''சுரேன், அப்பாவுக்கு என்...''

வேகமாக எழுந்ததில் கீழே விழப்போன மனைவியைத் தானே தனது கைகளில் தாங்கிக் கொண்டான் சுரேந்திரன்.

''சுரேன், என்ன... சொல்லுங்களேன்...'' என்று கணவனின் கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டே கேட்டாள் சஞ்சனா.



''சஞ்சு, அங்கிள்...''

''அப்பாவுக்கு... சொல்லுங்க, என்னாச்சு?'' என்று கணவனின் சட்டையைப் பிடித்துக் குலுக்கினாள் சஞ்சனா.

''அங்கிள் போய்ட்டாருமா.''

அதைச் சொல்லி முடிப்பதற்குள் சுரேந்திரனின் கண்களும் கலங்கி விட்டிருந்தன.

''ஐயோ... அப்பா... இல்ல இல்ல...'' என்று மிரட்சியுடன் பார்த்த மனைவியைச் சுரேந்திரன் நெருங்க, இல்ல... நான் நம்ப மாட்டேன்... நம்பவே மாட்டேனென்று... இரண்டடி பின்னால் நகர்ந்திருந்தாள் சஞ்சனா.

# 6

ஆயிற்று.

அன்றோடு சஞ்சனாவின் தந்தை இறந்து பத்து நாட்களுக்கும் மேல் முடிந்து போய் விட்டிருந்தன.

எதையுமே உணர்ந்து கொள்ள முடியாத அளவிற்கு இருந்த சஞ்சனாவும் இப்பொழுது சில நாட்களாகக் கொஞ்சம் கொஞ்சமாக இயல்பு நிலைக்குத் திரும்பத் தொடங்கி விட்டிருந்தாள்.

அதற்கு மற்றவர்களுடைய அக்கறையும், கவனிப்பும் எந்த அளவிற்குத் தேவைப்பட்டிருக்கிறது என்பதையும் மனதிற்குள் நன்றியுடன் நினைத்துப் பார்த்தாள்.

முக்கியமாகக் கணவனின் ஆறுதலும் அரவணைப்பும் தான் தன்னை இந்த அளவிற்கு மீண்டெழச் செய்ததோ என்றும்.

மேலும் திருமணமென்று ஆகாமல் தான் மட்டும் தனித்திருந்தால் இந்தப் பெரும் துயரை இந்த அள விற்கு எதிர் கொண்டிருக்க முடியுமா என்று நினைத்துப் பார்த்தவளுக்கு, நிச்சயம் முடிந்திருக்காது என்றே தோன்றியது.

மற்ற சொந்தங்கள் எல்லாரையும் விடத் தனது புகுந்த வீட்டுச் சொந்தங்கள் தன்னைப் பார்த்துக் கொண்ட விதம் அவளுடைய நெஞ்சை நெகிழச் செய்து விட்டிருந்தது.

''சஞ்சனா!''

''சொல்லுங்க அத்தை.''

''உன் வீட்டுக்காரர் எங்கமா?''

''அவர் காலைல நேரத்துலயே கிளம்பிப் போய்ட்டார் அத்தை.''

''டிபனுக்கு வருவானா?''

''கஷ்டம்னுதான் சொன்னார்.''

''சரி விடு. நம்ம ஹோட்டல்லயே சாப்புட்டுக்குவானா இருக்கும்,'' என்றவர், ''அப்ப வா, நாம சாப்பிடலாம்,'' என்று அழைத்தார்.

''இல்ல, அவரு...''

''என்னமா, சொல்லு.''

''இல்ல, அவரு நாம ரெண்டு பேரும் தனியாப் போயிட லாம்னு...''

''சரிதான். இதச் சொல்ல ஏன் இவ்வளவு தயங்கற?'' என்ற தனது அத்தையைப் பார்த்தாள் சஞ்சனா.

''அவனுக்கு ஹோட்டலுக்குப் பக்கத்துல பாத்துப் போய்ட்டா தினமும் தொழிலப் பாக்கறதுக்கு சவுகர்ய மாக இருக்கும்னு சொல்லிட்டிருந்தான்.''



............

''அவன் ரொம்ப நாளாவே சொல்லிட்டு தான் இருக் காம்மா. முதல்ல தான் அப்படித் தனியாப் போய்ட்டா தன்னைப் பாத்துக்குவானோ மாட்டோனோன்னு கொஞ்சம் தயக்கமா இருந்தது. ஆனா இப்ப தான் நீ இருக்கியே.''

''ஆனாலும் உங்கள எல்லாரையும் விட்டுட்டு எப்படி அத்தை...''

''வாரக் கடைசியானா வந்துடுங்கம்மா. அதோட நாங் களும் அப்பப்ப வந்துடுவோம். இதுல என்ன இருக்கு?''

அப்படிப் பார்த்தால் எந்தப் பிரச்சனையும் இல்லையோ?

திருமணத்திற்கு முன்பு தான் எப்பொழுதும் தனிமை யிலயே இருந்தாக வேண்டிய நிலையில் இருந்து வந்த வளுக்குச் சொந்தங்கள் அனைவருடனும் இருக்க வேண்டுமென்று ஆசையாக இருந்தது.

கடைசியில் இங்கும் இப்படியாகி விட்டதே என்று நினைத்தவள், சரிதான் அத்தை சொல்வதை வைத்துப் பார்த்தால் அப்படியொன்றும் தனிமையாக உணர வேண்டிய அவசியம் வராதென்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்.

தொடர்ந்து வந்த பதினைந்து நாட்களிலேயே அள வான ப்ளாட் ஒன்றை விலைக்கு வாங்கிக் கொண்டு சுரேந்திரனும் சஞ்சனாவும் அங்கு குடி போனார்கள்.

கணவனுடன் தனியாக இருப்பது போகப் போக ஒரு விதத்தில் பிடித்துக் கூடப் போனது சஞ்சனாவிற்கு.

தங்கள் இருவருக்கும் பிடித்தமான வகையில் ப்ளாட்டைப் பராமரிப்பதிலும், மூன்று நேரமும் கணவன் விரும்பும் வகையில் ஈடுபாட்டுடன் சமைப்பதிலும், மீதி

நேரங்களில் கணவனின் வருகைக்காக அவனுக்குப் பிடித்தமான வகையில் தன்னை அலங்கரித்துக் கொண்டு ஆவலுடன் காத்திருப்பதிலும் அவளுக்கு நாட்கள் போர டித்து விடாமல் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன.

சஞ்சனாவிற்கு மட்டுமல்ல, சுரேந்திரனுக்கும் கூட இந்தத் தனிக் குடித்தன வாசம் மிகவும் பிடித்துப் போனது.

தனது அழகான அன்பு மனைவியை உள்ளங்கையில் வைத்துத் தாங்கினான்.

தனது மனைவியைப் போலவே, அவனும் வீட்டிற்குச் செல்வதையும், வீட்டில் மனைவியுடன் இருக்கும் நேரத்தையும் ஆவலுடன் எதிர்பார்க்கலானான்.

அவர்கள் தனிக் குடித்தனம் வந்து மூன்று வாரங்கள் முடிந்து போய் விட்டிருந்தன.

மூன்று முறை அதாவது வார இறுதி நாட்களில் தவ றாமல் அவனுடைய பெற்றோரையும் தங்கையையும் பார்க்க மனைவியுடன் கிளம்பி விட்டிருந்தான் சுரேந்திரன்.

அவர்களும் இரண்டு முறை வந்து சென்றார்கள்.

தங்களுடைய திருமணத்திற்கு முன்பு ஒரு முறை மனைவியுடன் படித்த ஒருவன் வந்து ஏதேதோ சொல்லி விட்டுச் சென்றிருக்க, அதையெல்லாம் இப்பொழுது மனதிலிருந்து தூக்கி எறிந்திருந்தான் சுரேந்திரன்.

அதாவது அவற்றைச் சுத்தமாக மறந்து போய் விட்டிருந்தான்.

அதற்காக முன்பு அவனுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டு தனது மனைவியைச் சந்தேகப்பட்டான் என்று கிடையாது. இந்த மாதிரி ஒருவன் எதிர்பார்த்து வந்து



குற்றம் சொல்லும் அளவிற்கு ஏன் வெகுளித் தனமாக நடந்து கொண்டிருக்க வேண்டும் என்ற ஆதங்கம் தான் அவனுக்கு.

அதிலும் அவன் மிகவும் தீவிரமாக எண்ணிக் கொண்டு எதையெதையோ உளறிய விதம் சுரேந்திரனின் பொறு மையைச் சோதிப்பதாகவும் அமைந்து விட்டிருந்தது.

அதுவும் உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் அவன் தனது மனைவியைத் திருமணத்திற்கு முன் பிருந்தே மனதார விரும்பினான்.

அனைவரிடமும் படபடவென்று வெகுளித் தன மாகப் பேசும் குணம் கொண்டவள் என்றாலும், மறந்தும் கூடத் தப்பு வழி செல்ல மாட்டாள் என்ற நம்பிக்கையும் அவனுக்கு நிறைய இருந்தது.

எனது மனைவியைப் பற்றி எனக்குத் தெரியுமென்று தான் சாதாரணமாக எடுத்துக் கொண்டு போய் விடலாம் தான். ஆனால் தனது பெற்றவர்களும் அதை அப்படித் தான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்க முடியாதே.

இத்தனை நாளும் சிறு பிள்ளைத் தனமாக நடந்து கொண்டிருந்தாலும் கூட இனிமேல் அப்படியெல்லாம் இருக்கக் கூடாது என்னும் பொருளில் தான் அவன் முதலிரவன்று கூடக் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் ஏதேதோ சொன்னது.

அதற்கே பாவம் மனைவி இப்பொழுதிருக்கும் மன நிலையில் நாமும் இப்படியெல்லாம் பேச வேண்டியிருக் கிறதே என்று அவனுக்கும் ஒரு மாதிரியாகத் தான் இருந்தது.

# 7

காலிங் பெல் ஒலிக்க, ஓடிவந்து கதவைத் திறந்தாள் சஞ்சனா.

''வாவ் சுரேன்!'' என்று அவள் கணவனை சந்தோஷமாகப் பார்க்க, ''என்ன இவ்வளவு ஆச்சரியம்?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தான் சுரேந்திரன்.

''பின்ன வழக்கத்த விடவும் கால் மணி நேரம் முன்னாடியே வந்துட்டிங்களே!''

''என்ன பண்றது, உன் சமையல் வாசனை என்னக் கொக்கி போட்டு இழுக்குது.''

''அப்ப நான் இழுக்கலையா?''

..........

''சொல்லுங்க...''

ஷூவைக் கழற்றிக் கொண்டிருந்த கணவனுக்கு முன்பாகப் போய் நின்று கேட்டாள் சஞ்சனா.

''என்ன லஞ்ச், எடுத்து வை, வர்றேன்.''

''நான் கேக்கற கேள்விக்கு முதல்ல பதில் சொல்லுங்க,'' என்று பேண்ட் சட்டையைக் கழற்றி வைத்து விட்டு வேஷ்டிக்கு மாறிக் கொண்டிருந்த கணவனுக்கு முன்பாகப் போய் நின்று மீண்டும் கேட்டாள்.

ஆனால் அப்பொழுதும் அவன் மனைவிக்குப் பதில் சொல்லாமல் பாத்ரூமிற்குள் சென்றிருக்க, கோபத்துடன் அவன் வெளியே வருவதற்காகக் காத்திருக்கலானாள்.



சில வினாடிகளில் வெளியே வந்திருந்த கணவனிடம், ''என்ன நான் கேக்கறது உங்க காதுலயே விழலையா?'' என்று சற்று அழுத்தத்துடன் கேட்டாள்.

''சாப்பாடு எடுத்து வெச்சாச்சா?''

எதுவும் பேசாமல் அந்த இடத்தை விட்டு நகரப் போன மனைவியின் கையைப் பிடித்துச் சுரேந்திரன் இழுக்க, அந்த வேகத்தில் அவனுடைய மார்பிலேயே விழுந்தாள் சஞ்சனா.

''ம்... என்ன கேட்ட?''

மெல்லிய குரலில் சரசத்துடன் கேட்ட கணவனைப் பலம் கொண்ட மட்டும் தள்ளி விட்டாள் சஞ்சனா.

ஆனால் அதற்கு அவன் சற்றேனும் அசைந்து கொடுத்தால் அல்லவா?

தன்னை அவனுடைய கைகளுக்குள் சிறைப்பிடித்து ''ம்'' என்று தனது முகத்தை நோக்கிக் குனிந்த கணவனை முறைத்தாள் அவள்.

''நான் எப்பவுமே செயல் வீரனாக்கும், எனக்கு வெறும் வாய்ப் பேச்சுப் பிடிக்கவே பிடிக்காது,'' என்று மேலும் நெருங்கியவனிடமிருந்து லாவகமாகத் தன்னை விடுவித்துக் கொண்டு ஓடியே வந்திருந்தாள்.

சில வினாடிகளில் சாப்பிட வந்த கணவனுக்குப் பரிமாறிய சஞ்சனா, பிறகு தானும் உடனமர்ந்து கொண்டாள்.

''தப்பிச்சுட்டதா நினைச்சுக்காத,'' என்ற கணவனை, சரி தான் பார்த்து விடலாம் என்பதைப் போலப் பார்த்தாள்.

''அப்ப சரி...'' என்று மேலும் ஏதோ சொல்ல வந்த கணவனிடம், ''உங்களக் கேட்டு ஒரு போன் வந்தது,'' என்றாள்.

''யாரு?''

''பேர் சொல்லலைங்க. சரிங்க, நான் ஸார்க்கே கூப்புட்டுப் பேசிக்கறேன்னு உடனே வெச்சுட்டாங்க.''

இதுவும் ஒரு பதிலா என்பதைப் போலப் பார்த்த கணவனிடம், ''நான் என்னங்க பண்றது? உடனே கட் பண்ணிட்டாங்க,'' என்றாள்.

அதற்குப் பிறகு இயல்பான விஷயங்களைப் பேசிக் கொண்டே இருவரும் உணவை முடித்தார்கள்.

அனைத்தையும் ஒதுக்கி வைத்துக் கொண்டிருந்த சஞ்சனா, கணவனிடம், ''சரி, போய் ஒரு குட்டித் தூக்கம் போடுங்க, பாக்கலாம்,'' என்றாள்.

''உனக்குக் கம்பெனி வேணும்னு சொல்லு.''

''எனக்கெதுக்கு கம்பெனி, எனக்கு மதியம் எவ்வளவு ட்ரை பண்ணினாலும் தூக்கமே வர்றதில்ல. அதனால தூங்கப் போறதயே விட்டுட்டேன்,'' என்றாள்.

''சரிதான், அப்ப வந்து எனக்குக் கம்பெனி குடு,'' என்று தனது கையைப் பிடித்திருந்த கணவனிடமிருந்து வெட்கத்துடன் கையை இழுத்துக் கொண்டாள் சஞ்சனா.

''அட...''

அதே நேரம் காலிங் பெல் ஒலிக்க, யாரென்று பார்ப்பதற்காகச் சென்றான் சுரேந்திரன்.

இவனா?

தனது மனைவியுடன் படித்தவனென்று அன்றும் வந்தானே.

எரிச்சலைத் தனக்குள் மறைத்துக் கொண்டபடி தான் நகர்ந்து கொண்டு அவனை வீட்டிற்குள் வரவேற்றான்.

அதே நேரம் ஹாலுக்கு வந்திருந்த மனைவி ஒரு சில வினாடிகளின் தயக்கத்திற்குப் பிறகு, ''வாங்க நித்யன்,'' என்று புன்னகையுடன் அவனை வரவேற்பதைக் கண்டான்.

அல்லது தனக்குத்தான் அப்படித் தோன்றுகிறதோ?

உள்ளே வந்தவன் உரிமையுடன் சோபாவில் சென்று அமர்ந்து கொள்ள, இப்பொழுது குற்ற மனப்பான்மையுடன் கணவனைப் பார்த்தாள் சஞ்சனா.

சுத்தமாக உணர்ச்சி துடைக்கப்பட்டு விட்டிருந்த கணவனின் முகத்தைப் பார்க்கவே பயமாகக் கூட இருந்தது.

''இவர் நித்யன், என் காலேஜ் மேட்.''

வந்தவனை அவள் தனது கணவனுக்கு அறிமுகப் படுத்த, ''என்ன இவ்வளவு சிம்பிளா முடிச்சுட்ட? இன்னும் கொஞ்சம் நல்லாப் புரிஞ்சுக்கற மாதிரி...'' என்று இழுத்தான் அவன்.

என்ன இப்படியெல்லாம் உளறுகிறானென்று சஞ்சனாவிற்கு மனதிற்குள் பயம் வந்து விட்டிருக்க, அந்த நித்யனிடம், ''அதான் எனக்கு ஏற்கெனவே தெரியுமே, விஷயத்துக்கு வரலாம்,'' என்றான் சுரேந்திரன்.

என்னது, ஏற்கெனவே தெரியுமாமா?

மனைவியின் முகத்தில் தெரிந்த அந்த அதிர்ச்சி சுரேந்திரனின் கண்களிலும் படத் தவறியிருக்கவில்லை.

''ம்,'' என்ற கணவனின் முகத்தில் எரிச்சலும், கோபமும் ஒருசேரத் தோன்றியிருக்க, செய்வதறியாது நின்று விட்டிருந்தாள் அவள்.

''ஒண்ணுமில்லேன்னா கிளம்ப வேண்டியதுதான?''

''ஓ ஸாரி ஸார். உங்களுக்கும் ஆயிரம் வேலையிருக்கும்,'' என்றவன் தனது கையிலிருந்த ப்ரீஃப்கேஸை அங்கிருந்த டீபாயின் மீது வைத்துத் திறந்து உள்ளிருந்து எதையோ எடுத்தான்.

மனைவியின் கண்களில் ஏன் இந்தப் பயம்?

அதற்குள் அந்த நித்யன் உள்ளிருந்து எடுத்த கவரைத் தனது மனைவியிடம் நீட்ட, என்னவென்பதைப் போலப் பார்த்தாள் அவள்.

''எல்லாம் உன் சம்பந்தப்பட்டதும் நீ கொடுத்ததும் தான். இனி எனக்குத் தேவைப்படாதே,'' என்றான்.

''உங்க கல்யாணத்துக்கு முன்னாடியே நான் வந்து ஸாரப் பாத்தேன்...''

கடவுளே! இது வேறா?

அதனால் தான் திருமணம் நிச்சயமான பிறகு தன்னிடம் அப்படிப் பாராமுகமாக நடந்து கொண்டானோ?

இந்த நித்யன் சாதாரணமாகவே நிறையப் பேசுவானே.

இனி எப்படியெல்லாம் இல்லாததையும் பொல்லாததையும் உருவேற்றிச் சொன்னானோ?

உடன் படிக்கிற காலத்தில் தான் தொல்லை செய்தானென்றால் இப்பொழுது எதற்காக வந்திருக்கிறான்?

நாமும் அப்பொழுதே இவனுடைய எண்ணம் புரிந்ததுமே முற்றிலுமாக விலகிக் கொண்டோமே.

ஏன், கடைசி வருடம் முழுவதுமே இவனிடம் சுத்தமாகப் பேசுவதையே கூட நிறுத்தி விட்டிருந்தோமே.

அப்பாடா! எப்படியோ தொலைந்தானென்று நிம்மதியாகவும் இருந்தோமே.



ஆனால் இப்பொழுது ஏன், எங்கிருந்து வந்து புதிதாக முளைத்திருக்கிறான்?

அதுவும் இது இரண்டாவது முறை என்றால்,

தான் அறியாதவாறு தன்னை உளவு பார்த்துக் கொண்டு இருக்கிறானோ?

சில வினாடிகள் கையை நீட்டிக் கொண்டிருந்தவன், சஞ்சனா வாங்கிக் கொள்ள மாட்டாள் என்பதை அறிந்து அங்கிருந்த டீபாயின் மீது வைத்தான்.

''மதிய நேரத்துல வந்து டிஸ்டர்ப் பண்ணினதுக்கு ஸாரி ஸார். பாவம், நீங்களும் சாப்டுட்டு ரெஸ்ட் எடுக்கலாம்னு இருந்திருப்பீங்க,'' என்று எழுந்திருந்தவன், ''அப்ப நான் கிளம்பறேன்,'' என்று பொதுவாகச் சொல்லிவிட்டு, வெளியே வரத் திரும்பினான்.

ஆனால் உடனே மீண்டும் நின்றவன், ''உன் சம்பந்தப்பட்டது இன்னும் கூட எங்கிட்ட நிறைய இருக்கும்னு நினைக்கறேன்,'' என்று சஞ்சனாவை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு வெளியேறினான்.

அந்த நித்யனின் வார்த்தைகளிலும், பார்வையிலும் கணவன் தன்னைப் பற்றி என்ன நினைப்பானென்று நடுங்கிப் போய் விட்டிருந்தாள் சஞ்சனா.

அந்த வினாடியே திரும்பிக் கணவனைப் பார்த்தவளுக்குச் சுத்தமாக உணர்ச்சி துடைக்கப்பட்டு விட்டிருந்த அவனுடைய முகத்திலிருந்து எதையும் கண்டு கொள்ள முடியவில்லை.

கணவன் உள் அறைக்குப் போவதற்காக நகர, தான் சென்று கதவைத் தாழிட்டு விட்டு வந்தாள்.

ஏனோ எதையுமே யோசிக்க முடியாது போய் விட்டிருக்க, தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டிருந்தாள்.

எவ்வளவு நேரம் அப்படி அமர்ந்திருந்தாளோ, கணவனிடம் சென்று தன்னிலையை விளக்கினால் என்ன என்னும் எண்ணம் தோன்றிவிட உடனே நிமிர்ந்தாள்.

அப்படி நிமிர்ந்தவளுக்கு டீபாயின் மேல் அவன் வைத்துவிட்டுச் சென்ற கவர் தென்பட, எரிச்சலுடன் அதைக் கையிலெடுத்தாள்.

ஏனோ அதைத் தொடவே அருவருப்பாக இருந்தது. இருந்தாலும் என்னதான் அப்படி எடுத்து வந்திருக்கிறானென்று பார்க்கலாமென்று திறந்தாள்.

அவனுடைய பிறந்த நாள், பொதுப் பண்டிகைகள் என ஒவ்வொன்றிற்கும் அவள் கொடுத்திருந்த வாழ்த்து அட்டைகள், கல்லூரியில் படிப்பு முடிந்து பிரியும்போது கடைசியாக அவன் தன்னிடம் வாங்கிய ஆட்டோகிராப் மற்றும் போட்டோக்கள் எனப் பார்க்கவே கோபமாக வந்தது.

படிக்கும் காலத்தில் தோழமையுடன் வெகுளித்தனமாகக் கொடுத்ததையெல்லாம் எந்த மாதிரி ஒரு வேலைக்குப் பயன்படுத்துகிறான். அப்படியானால் இவன் இன்று வரை திருந்தவே இல்லை...

அவனுக்குத் தான் எழுதிக் கொடுத்த ஆட்டோகிராபைப் பிரித்துப் படித்தாள் சஞ்சனா.

அதைப் படித்தவளுக்குத் தானா இப்படியெல்லாம் எழுதினோம் என்றிருந்தது.

தன்னுடன் படித்த அந்த நித்யன் படிப்பில் எப்பொழுதும் படுசுட்டி.



சஞ்சனா... அவளும் மிகவும் நன்றாகப் படிப்பவள் என்பதால் அவர்கள் இருவருக்கும் தான் வகுப்பில் எப்பொழுதுமே போட்டி நிலவும்.

வெற்றி வாய்ப்புகளும் எப்பொழுதும் இருவருக்குமே சரிசமமாக இருக்கும்.

அனைவரிடமும் போலவே அந்த நித்யனிடமும் இயல்பாகப் பேசிப் பழகிக் கொண்டிருந்த சஞ்சனாவிற்கு, திடீரென்று ஒரு நாள் உன்னைக் காதலிக்கிறேன், நீ யில்லாத ஒரு வாழ்க்கையை என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை என்றெல்லாம் அவன் வந்து உளறியதில் ஏகப்பட்ட அதிர்ச்சி.

அந்த மாதிரி ஒரு எண்ணத்தில் நான் உன்னிடம் எப்பொழுதும் பேசியிருக்கவில்லை. ஸாரி என்று அவளும் ஒற்றை வார்த்தையில் முடித்து விட்டிருந்தாள்.

அத்தோடு அவனும் ஒன்றும் ஒதுங்கிப் போய் விட்டிருக்கவில்லை என்பதோடு, அப்படிப் போய் விடுவானென்று சஞ்சனாவும் ஒன்றும் எதிர்பார்த்து விடவில்லை.

எதிர்பார்த்தது போலவே மீண்டும் சிலமுறை அவன் வந்து பிதற்றிய போதும் ஒரேயடியாக நின்று மறுத்து விட்டிருந்தாள்.

இதற்கு மேல் என்னைத் தொந்தரவு செய்தால் நான் மேலிடத்தில் புகார் செய்யவும் தயார் என்று மிரட்டினாள்.

மிகவும் ஏழ்மையான குடும்பத்திலிருந்து வந்திருந்த நித்யன் அந்த வார்த்தையில் யோசிக்க ஆரம்பித்து விட்டிருந்தானோ என்னவோ, அதற்கு மேல் அவசியத்திற்கு என்றுகூட அவன் சஞ்சனாவிடம் பேச முயன்றிருக்கவில்லை.

இதெல்லாம் நடந்தது படிப்பு முடிவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு.

அதற்குப் பிறகு நித்யனும் முன்பு போல - ஏன், தான் இருக்கும் திசையில் கூடத் திரும்பிப் பாராது - இருந்ததில் சஞ்சனாவிற்கும் நிம்மதி.

தொடர்ந்து வந்த ஒரு சில மாதங்களில் நடந்ததனைத்தையும் மறந்து கூடப் போய் விட்டிருந்தாள் சஞ்சனா.

ஏன், அவன் பிரச்சனை செய்த சமயத்திலும் கூட சஞ்சனா அதை மனதளவில் பெரிதாக எடுத்திருந்தாள் இல்லை.

அப்பொழுதே அவ்வளவாகக் கருத்தில் படாதது அவன் திரும்பித்தான் இருக்கும் திசைக்கே வந்திருக்காத போது ஏன் படுகிறது?

அதனால் படித்து முடிந்து பிரியும் பொழுது அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டது போலவே, அவனிடமும் விடை பெற்றுக் கொண்டதோடு, கேட்கிறானே என்று ஆட்டோகிராப் கூட எழுதிக் கொடுத்து விட்டு வந்திருந்தாள்.

எந்த ஒரு விஷயத்திலும் தவறே செய்யாதவர்களை விடவும் கூட தவறு செய்து அதைத் திருத்திக் கொண்டவர்கள் எப்பொழுதும் மிகவும் நல்ல விதமாக நடந்து கொள்வார்களே. அது போலத்தான் இப்பொழுது நித்யனும் இருக்கிறான் என்ற எண்ணத்தில் சற்று மனம் திறந்து கூட ஆட்டோகிராப் எழுதிக் கொடுத்திருந்தாள்.

அதிலும் மிகவும் சிரமப்பட்டுக் குற்றம் கண்டுபிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தேடினாலும் கூட தவறான பொருள் கொள்ளும்படி எதுவுமே இருக்கவில்லை என்பதும் படித்துப் பார்த்ததில் தெரிந்தது.



திடீரென்று நடப்பிற்கு வந்தவள் அவற்றையெல்லாம் எடுத்துப் பழையபடி கவருக்குள் போட்டுப் பார்க்க வேண்டுமென்று தோன்றினால் கணவனும் பார்க்கட்டுமென்ற எண்ணத்தில் அதே இடத்தில் வைத்தாள்.

ஏதோ அரவம் கேட்கத் திரும்பிப் பார்த்தவளுக்கு, வெளியே கிளம்பத் தயாராகக் கணவன் வந்து கொண்டிருந்தது தெரிந்தது.

அவன் ஹாலுக்கு வருவதற்குள்ளேயே அவனருகில் சென்றிருந்தவள், ''ஒரு நிமிஷம் உக்காருங்க, டீ எடுத்துட்டு வர்றேன்,'' என்றாள்.

''வேண்டாம்.''

ஒற்றை வார்த்தையில் பதில் வந்திருக்க, ஏன் இந்த அளவிற்குக் கோபப்பட்டுப் பதில் சொல்லுமளவிற்கு இப்பொழுது என்ன நடந்து விட்டதென்று யோசித்தவள் மீண்டும் வாயைத் திறப்பதற்குள் அவளுடைய கணவன் கிளம்பிச் சென்று வெகு நேரமாகி விட்டிருந்தது.

# 8

இரவு வீடு திரும்பியிருந்த கணவனை எப்பொழுதும் போலப் புன்னகையுடன் வரவேற்றாள் சஞ்சனா.

ஆனால் அவனிடம் தான் மருந்துக்குக் கூடப் புன்னகையோ அல்லது அதன் எதிரொலியோ எதுவும் இருக்கவில்லை.

''டிபன் சாப்பிடலாம், வாங்க.''

''சாப்டாச்சு.''

அப்படியொரு பதில் வருமென்று சஞ்சனா கன விலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஏனென்றால் அவன் எப்பொழுதுமே அது எங்கு சுற்றினாலும், எவ்வளவு நேரமானாலும் உணவிற்கு வீட்டிற்கு வந்துவிடும் பழக்கமுடையவன்.

''போன் பண்ணியிருக்கலாமே.''

........

''உங்ககிட்டதான்.''

''இதென்ன சின்ன விஷயந்தான. இதுக்கு ஏன் இவ்வளவு பதட்டப்படற? சிலர் பெரிய விஷயங்களையே சர்வ சாதாரணமா செஞ்சுட்டுக் கூலா இருக்காங்க.''

''நீங்க எத மனசுக்குள்ள வெச்சுட்டுப் பேசறீங்கன்னு புரியுது.''

''சந்தோஷம்.''

''ஆனா அப்படிப் புரிஞ்சுகிட்டதுல துளிகூட உண்மை எதுவுமில்ல.''

''ரொம்ப சந்தோஷம்.''

என்ன ஏளனம்!

''கொஞ்சம் என்னப் பாத்துப் பேசுங்க.''

''நான் தூங்கணும்.''

இப்பொழுது கணவனுக்கு முன்பாக வந்து நின்று அவனுடைய பாதையை மறைத்திருந்தாள் சஞ்சனா.

''என்ன சுரேன், ஏன் இப்படியெல்லாம் நடந்துக் கறீங்க?''

''தூங்கறதுல என்ன தப்புக் கண்டுபிடிச்ச?''

''நான் கேக்கறது இன்னைக்கு ஏன் இப்படி வித்தி யாசமா நடந்துக்கறீங்கன்னு தான்.''

...........

''ப்ளீஸ்... சொல்லிட்டுப் போங்க.''

...........

''நான் தூங்கணும்.''

பட்டும் படாமல் கணவனிடமிருந்து வந்த பதிலில் இப்பொழுது சஞ்சனாவிற்கும் கோபம் வந்திருந்தது.

''போதும், நில்லுங்க.''

''என்ன, கோபம் வருதா?''

''பின்ன வராதா?''

''ஓ! பரவாயில்லையே...''

''ப்ளீஸ் சுரேன், நான் சொல்றதையும் கொஞ்சம் கேளுங் களேன்...''

''எதுக்குக் கேக்கணும்?''

...........

கண்களில் வலியுடன் கணவனைப் பார்த்தாள் சஞ்சனா.

''உம்மேல ஒரு பர்ஸன்ட் கூடத் தப்பில்லாம ஒருத்தன் இந்த அளவுக்குத் தைரியமா வந்துட்டுப் போக முடியுமா?''

''அப்ப எம்மேல தப்பிருக்குன்னு முடிவே பண்ணிட் டிங்க?''

''அதுல என்ன சந்தேகம்?''

அப்படிச் சொன்ன கணவனை விரக்தியுடன் பார்த்துச் சிரித்தாள்.

''உங்கள நான் எவ்வளவோ பெரிசா நினைச்சுட்டிருந் தேன். ஆனா இப்பதான் நீங்களும் ஒரு சராசரி ஆம்பள தான்னு புரியுது.''

''அது கூடப் பரவாயில்ல. நான் இளிச்சவாயனா இருக்க விரும்பல.''

என்ன ஏளனம்!

கண்கள் அதன் பாட்டிற்குக் கலங்கி விட்டிருக்க, அப்படியே வந்து விட்டிருந்தாள்.

எவனோ ஒருவன் வந்து மேலோட்டமாகச் சில வார்த் தைகள் சொல்லி விட்டுச் செல்வதே மனைவியின் நடத்தையைச் சந்தேகிக்கப் போதுமானதாமா?

தான் ஒரு பைத்தியம், சந்தேகிப்பது மட்டுமா... அவன் தான் முடிவே செய்து விட்டானே.

எவ்வளவு நேரம் அப்படி அமர்ந்து கொண்டிருந் தாளோ, அவள் மீண்டும் நடப்பிற்கு வந்தபோது இரவு வெகுநேரம் கடந்து விட்டிருந்ததை உணர்ந்தாள்.

சாப்பிட வேண்டுமென்ற நினைப்பே இல்லாமல், அப்படியே சென்று படுத்து விட்டிருந்தாள்.

மறுநாள் காலையிலும் இதே கதைதான் நடந்தது.

நேரங்கழித்துத் தூங்கியதாலோ என்னவோ, அவள் படுக்கையிலிருந்து விழித்து எழும்போதே, கணவன் வெளியே கிளம்பத் தயாராகி விட்டிருந்ததைக் கண்டாள்.

முதலில் காபியாவது கலக்கிக் கொடுக்கலாமென்று படுக்கையை விட்டு அவசரமாக எழுந்திருந்தவளுக்கு வெளிக்கதவு திறக்கப்படும் ஓசையும் அதைத் தொடர்ந்து கணவன் கிளம்பி விட்டிருந்ததும் தெரிந்தது.



அவ்வளவுதான். கண்கள் கலங்கி விட்டிருக்க, மீண்டும் அப்படியே படுக்கையில் விழுந்தாள்.

எழ வேண்டுமென்ற எண்ணம் இருக்கவே செய்தாலும், உடல் சுத்தமாக ஒத்துழைக்காது போக, கண்களை மூடிப் பேசாமல் படுத்துக் கொண்டாள். நேரம் தான் போய்க் கொண்டே இருந்தது.

ஏதேதோ எண்ண அலைகள் வந்து முட்டி மோதிய தில், வேகமாக எழுந்து அமர்ந்தாள்.

அதே வேகத்தில் ஹாலுக்கு வந்திருந்தவள் முதல் நாள் அவன் வைத்து விட்டுச் சென்றிருந்த கவரைப் பிரித்து டைரியை வெளியே எடுத்தாள்.

அதைப் புரட்டியதில் அவனுடைய மொபைல் எண் கிடைக்க, உடனே அதற்கு டயல் செய்தாள்.

சில வினாடிகளிலேயே அவன் அட்டெண்ட் செய்திருக்க, எரிச்சலைத் தனக்குள் மறைத்துக் கொண்டு பேசினாள்.

''நான் சஞ்சனா.''

எதிர்முனையிலிருந்து வந்த கேலிச் சிரிப்பில் நெஞ்சு கொதித்தது.

ஆனாலும் முயன்று, விஷயத்திற்கு வந்தாள்.

''ஏன் இந்த மாதிரியெல்லாம் பண்ற? இதனால எனக்கு எத்தன பிரச்சன தெரியுமா?'' என்று கேட்டாள்.

அதற்கு அவனோ, ''சும்மாதான். நான் மட்டும் எவ் வளவு கஷ்டப்பட்டேன். அதான்,'' என்றான்.

என்னது கஷ்டப்பட்டானா? எதற்காகக் கஷ்டப்பட் டான்? அதற்குத் தான் எந்த வகையில் காரணம்...?

''என்ன புரியலையா? மேலிடத்துல புகார் செய்ய றேன்னு எத்தன பேர வெச்சுக்கிட்டு என்ன அவமானப்

படுத்தின. படிப்பு பாதிச்சுடக் கூடாதுங்கற ஒரே காரணத் துக்காகத் தான் அப்பப் பல்லக் கடிச்சு என்னக் கண்ட்ரோல் பண்ணிக்கிட்டேன். ஆனா உன்னைப் பார்த்துப் பயந்துட்டு நான் பேசாம இருந்துட்டதா நீ நினைச்சுட்ட இல்ல?'' என்று உணர்ச்சி பொங்க அவன் கேட்க, சரிதான், அவன் செய்ததற்குத் தானும் அப்படிச் செய்ய வேண்டிய தாயிற்று, சரிக்குச் சரியாகப் போயிற்று என்று விட்டு விட்டுப் போக வேண்டியது தானே என்ற எண்ணம் தான் ஓடியது சஞ்சனாவிற்கு.

''அதெல்லாம் நடந்து முடிஞ்ச விஷயம். நீ மட்டும் பத்துப் பேருக்கு முன்னாடி என்ன ஏதேதோ சொல்லி மிரட்டல? ஒரு பொண்ணா என்னக் கூட நிறையப் பேர் தப்பா நினைச்சிருக்கலாமில்லையா? அதையும் நீ யோசிச்சுப் பாரு,'' என்றாள் சஞ்சனா.

ஆனால், ''அதெல்லாம் எனக்கு அனாவசியம்!'' என்று உடனே அவனிடமிருந்து பதில் வந்திருந்தது.

''அப்ப உன்னப் பத்தி யார் என்ன நினைச்சாங்களோ அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனா இப்ப உன்ன நிறையப் பேர் அப்படி நினைச்சு கேவலமாப் பாக்க ணும்னு நான் ஆசைப்பட்டறேன்,'' என்றான் அந்த நித்யன்.

கடவுளே! இப்படிக் கூட மனிதர்கள் இருப்பார்களா என்ற ஆச்சரியத்தில் வாயடைத்துப் போய் நின்று விட் டிருந்தாள் சஞ்சனா.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

''என்ன எதுக்குடா இவங்கிட்ட வெச்சுக்கிட்டோம்னு யோசிக்கற இல்ல?'' என்று கேட்ட அந்த நித்யனின் குரலில் ஏதோ தான் வலியப் போய்ச் சும்மா இருந்தவ



னிடம் பிரச்சனை செய்ததைப் போலல்லவா கேட்கிறான் என்றிருந்தது.

இப்பொழுது என்ன முயன்றும் சஞ்சனாவால் கோபத் தையும், எரிச்சலையும் குரலில் காட்டாது இருக்க முடிய வில்லை.

''சரி, கடைசியா என்னதான் எதிர்பார்க்கற?'' என்று கேட்டாள்.

''நீ சந்தோஷமா, நிம்மதியா இருக்கக் கூடாது. அதத்தான்.''

''டேய், நீ உம் மனசுல என்னடா நினைச்சுட்டிருக்க?''

கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது கத்தி விட்டிருந்தாள் சஞ்சனா.

''இப்ப எங்கிட்ட எதுக்குக் கோபப்பட்ற? அது இன்னும் பிரச்சனையா தான் முடியும். முதல்ல உம் புருஷனுக்குத் தான் உம்மேல நம்பிக்கையிருக்கணும். அப்படியில்லாம யார் வந்து என்ன சொன்னாலும், அத அப்படியே அவன் நம்பிக்கறான்னா நீ நடத்த சரியில்லாதவன்னு தான அர்த்தம். ஒருவேளை அது தான் உன்...''

பட்டென்று ரிஸீவரை வைத்திருந்தாள் சஞ்சனா.

நெஞ்சு கொதித்தது.

என்ன வார்த்தை கேட்டு விட்டான் பாவி!

இவனெல்லாம் ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவன் தானா?

படிக்கும் காலம் முழுவதிலுமே கூடத் தான் உண்டு தன் படிப்பு உண்டு என்று தானே இருந்தோம். அப்படி யிருந்தும் கூடத் தனக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம் பிரச்சனை வர வேண்டும்?

அது சரிதான். அப்படியே இருந்தாலும் கூடத் தன்னுடைய கணவனுக்கு அல்லவா தன் மேல் நம்பிக்கையிருக்க வேண்டும்.

அப்படியில்லாமல் யார் வந்து என்ன சொன்னாலும் அதை அப்படியே நம்பிக் கொள்கிறான் என்றால்...

இந்த நித்யனைப் போல இன்னும் ஊர் உலகத்தில் எத்தனை பேர் இருக்க மாட்டார்கள்.

ஒருவேளை மதிய உணவிற்குக் கணவன் வீட்டிற்கு வந்தால் என்று நினைத்தவள், உடனே நேரம் பார்த்தாள்.

மணி மூன்றுக்கு மேல் ஆகியிருந்தது தெரிந்தது.

தான் கடைசியாக உண்டது எப்பொழுதென்று நினைவு படுத்திப் பார்த்தாள். முதல் நாள் மதியமென்பது மெதுவாக நினைவிற்கு வந்தது.

ஒரு நாளிலேயே மனதளவில் இந்த அளவிற்கு விரக்தியாக உணர முடியுமா என்று ஆச்சரியமாக இருந்தது.

அன்று இரவும் வெகுநேரம் கழித்து வீட்டிற்கு வந்த கணவன், முதல் நாளைப் போலவே படுக்கைக்குச் சென்று விட்டிருக்க, செய்வதறியாது நின்று விட்டிருந்தாள் சஞ்சனா.

ஆனாலும் உடனே நடப்பிற்கு வந்து, கணவனைச் சாப்பிட அழைக்கச் சென்றாள்.

பலன்தான் பூஜ்யமாக இருந்தது.

மறுநாள் காலையிலும் அதே கதைதான். ஆனால் முதல் நாளைப் போல உடலிலும் மனதிலும் வலு இருக்கவில்லை. ஏன், படுக்கையை விட்டே கூட எழ முடிந்திருக்கவில்லை.



அன்று அந்த நித்யன் அவனாகவே அழைத்திருந்தான்.

முதல் நாளைப் போலவே ஏதேதோ அவசியமற்றுப் பேசி உயிரை வாங்கினான்.

பார்த்துவிட்டு போன் அழைப்பைத் துண்டித்து விட்டிருந்தாள் சஞ்சனா.

ஆனாலும் முதல் நாள் போலவே அன்றும் அந்த நித்யன் பேசியிருந்த வார்த்தைகள் அவளை யோசிக்க வைத்தன.

சில நிமிடங்கள் தான். அதற்கு மேல் ஒன்றும் முடியாமல் அழுகை தான் வந்தது.

ஒருவேளை வேண்டுமென்றே தான் கணவன் கோபத்தை இழுத்துப் பிடித்து வைத்திருக்கிறானோ?

அப்படித்தானே முதல் நாள் இரவன்று கூட முகத்தைத் திருப்பிக் கொண்டு பேசினான். உடனே மறுநாள் சரியாகி விடவில்லையா என்று நினைத்தவள் அதே போலத் தான் இப்பொழுதும் பழையபடி மாறி விடுவானென்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்.

ஆனாலும்...

தனது மொபைலுக்கு அழைப்பு வர, ஒருவேளை கணவனாக இருக்குமோ என்று ஆவலுடன் சென்று எடுத்துப் பார்த்தாள்.

''சொல்லுங்க அத்தை.''

சில வினாடிகள் பேசிவிட்டு போனை வைத்தவள், இன்னும் அரை மணி நேரத்தில் வரப்போகும் அத்தை மாமாவிற்காக முடியாவிட்டாலும் எழுந்து வந்து வீட்டை ஒதுக்கி வைத்தாள்.

சொன்னது போல அரை மணி நேரத்தில் வந்தவர் களை சந்தோஷமாக வரவேற்றாள்.

டிபன் செய்வதாக எவ்வளவு கேட்டுக் கொண்டும் திருமணம் ஒன்றிற்குச் செல்ல வேண்டுமென்று அவர்கள் மறுத்து விட்டிருந்ததால் காபி மட்டும் கலக்கிக் கொடுத்தாள்.

சிறிது நேரத்தில், ''சரி, நாங்க கிளம்பறோம்,'' என்று அவர்கள் எழுந்து விட்டிருக்க, ''கல்யாணத்த முடிச்சுட்டு வாங்க. நைட் இருந்துட்டுக் காலைல போலாம்,'' என்று மிகவும் உணர்ந்து அழைத்தாள்.

''இல்லமா, அங்க நிகிலா மட்டும் தனியா இருக்காளே.''

''வேணும்னா அவர்கிட்ட சொல்லிப் போய் அழைச் சுட்டு...''

''இல்லடாம்மா. அவளுக்குப் பரிட்சை என்னவோ வருதுன்னு சொல்லிட்டிருந்தா,'' என்றவர்,

''ஒரு நிமிஷம் வா,'' என்று மருமகளுடன் உள் ளறைக்கு வந்திருந்தார் கலைவாணி.

''என்ன அத்தை?''

''என்னமா, என்ன பிரச்சன?''

''பிரச்சனையா? அதெல்லாம் ஒண்ணு...''

''அசடு, நான் கேக்கறது உனக்கு உடம்புக்கு என்ன பண்றதுன்னு. பாக்கவே ஏன் ஒரு மாதிரியிருக்க?''

புரியாமல் பார்த்தவளின் வயிற்றைத் தொட்டவர், ''இதத்தான் கேக்கறேன். அப்படி ஏதாவது இருந்தாலும் சொல்லுமா. அகிலாவுக்குத் தான் இன்னும் எதையும் காணோம், உனக்காவது...''

''அச்சச்சோ! அதெல்லாம் ஒண்ணுமில்ல அத்...''

''என்னது, அச்சச்சோவா?'' என்று சிரித்தார்.



''சரிதான். ஆனா நீ உடம்ப நல்லாப் பாத்துக்கோ,'' என்றார்.

''இல்ல. அந்த தடியன் ஏதாவது சொன்னானா?''

கணவனைக் குறிப்பிட்டு அத்தை கேட்ட பாவனை யில் சிரிப்பு வந்துவிட, சில நாட்களுக்குப் பிறகு மனம் விட்டுச் சிரிக்கக் கூடச் செய்தாள்.

''என்னமா, அப்படியா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்ல அத்தை,'' என்றாள்.

அத்தையும், மாமாவும் கிளம்பியிருக்க, அவர்களை வழியனுப்பிவிட்டு வீட்டிற்குள் வந்தாள் சஞ்சனா.

கடவுளே! அப்படியானால்...

யோசித்துப் பார்த்ததில் தள்ளிப்போன நாள் கணக்கு மனதில் உறைத்தது.

காலையில் எழவே முடியாமல் போனது.

அப்படியே முயன்று எழுந்தாலும், தலை மட்டும் எங்கோ பறப்பது போல உணர்வதும்,

எதை எடுத்தாலும் சாப்பிடப் பிடிக்காமல் குமட்டிக் கொண்டு வருவதும்...

சரிதான்.

நாடி நரம்பெல்லாம் பரபரத்துச் சந்தோஷத்தில் நெஞ்சு நிறைந்து போனது சஞ்சனாவிற்கு.

இதை மட்டும் தான் கணவனிடம் சொன்னால்,

இரண்டு நாட்களாகத் தன்னைப் படுத்தி விட்டதற் காகக் கூட வருத்தப்படுவானோ?

ஆம். அப்படித்தான்.

இதற்கு மேலும் இந்த சந்தோஷமான செய்தியை அறிந்த பிறகும் கூடத் தன்னிடம் எப்படி அவனால் முகத்தைக் காட்ட முடியும்?

தனது தந்தை மட்டும் உயிருடன் இருந்திருந்தால் இப்பொழுது எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பார்...

சரிதான்... என்று முயன்று மனதை இயல்புக்குக் கொண்டு வந்திருந்தாள் சஞ்சனா.

தரையில் கால் பாவாமல் சந்தோஷத்தில் துள்ளிக் குதிக்க வேண்டும் போலிருந்தது.

குறுகுறுவென்று இருந்த வயிற்றை அவ்வப்பொழுது ஆசையுடன் தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.

எவ்வளவு சந்தோஷமான விஷயம்!

கணவனின் வரவுக்காக இனிப்புடன் ஆவலோடு காத்திருக்கலானாள் சஞ்சனா.

வந்து இதுவரை தான் நடந்து கொண்டதற்காக வருத்தப்படுவதோடு, தன்னைத் தலையிலும் தூக்கி வைத்துக் கொண்டாடுவானென்று எல்லையற்ற ஆவலுடனும், மகிழ்ச்சியுடனும் கணவனின் மீது மிகப் பெரிய நம்பிக்கை வைத்து விட்டிருந்தாள்.

அந்த நம்பிக்கை பொய்த்துத் தவிடு பொடியாகப் போவதைப், பாவம், அவள் அப்பொழுது அறிந்திருக்கவில்லை.

# 9

ஏனோ அன்று சுரேந்திரனுக்கு வேலையே சுத்தமாக ஓடியிருக்கவில்லை.



இரண்டு நாட்களிலேயே மனைவி ஆள் பாதியாகிப் போனதை மனதில் ஒரு வலியுடன் நினைத்துப் பார்த்தான்.

போதும். இதற்கு மேலும் தானும் நொந்து, அவளையும் நோகடிக்க வேண்டாமென்ற முடிவுக்கு மனதிற்குள் வந்து விட்டிருந்தான்.

என்னதான் மனைவி குற்றமற்றவள் என்ற எண்ணம் அவனுக்கும் இருக்கவே செய்தாலும், ஏனோ அந்த ராஸ்கல் வீட்டிற்கே வந்து பேசி விட்டுச் சென்றதை அவனால் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை.

அவனுடைய சட்டையைப் பிடித்து நாலு அறை கொடுக்க வேண்டுமென்கிற அளவிற்குக் கோபம் வந்திருந்தாலும் அவன் மேலும் கீழ்த்தரமான வழியில் இறங்கி விடுவானோ என்றும் யோசிக்க வேண்டியதாக இருந்தது.

இத்தனைக்கும் தன்னுடைய மனைவி இது போலப் பொறுக்கிகளிடமெல்லாம் ஒரு வார்த்தை கூடப் பேச்சு வைத்துக் கொள்ளாமல் இருந்திருந்தால் இப்பொழுது, இந்தப் பிரச்சனையே வந்திருக்காதே என்றும்.

எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னுடைய பெற்றவர்களுக்கு மட்டும் இந்த விஷயம் தெரிந்தால், ஏனோ அதற்கு மேல் எதைப் பற்றியும் அவனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

முக்கியமாகத் தனது மனைவியை மற்றவர்கள் தவறாக எண்ணிப் பேசுவதை...

இப்படி எதையெதைப் பற்றியெல்லாமோ யோசித்த சுரேந்திரன், ஒருவேளை தனது மனைவியின் மீது ஒரு சிறு தவறு கூட இல்லாதிருந்தால் என்ற கோணத்தில் மட்டும் யோசிக்கத் தவறியிருந்தான்.

அப்படி யோசித்திருந்தால் ஒருவேளை பின்னாளில் அவன் அனுபவிக்க நேர்ந்த அந்தப் பெருந்துன்பத்தைத் தவிர்த்திருக்கலாமோ என்னவோ.

தனது மொபைலுக்கு அழைப்பு வர, அட்டெண்ட் செய்து பேசினான் சுரேந்திரன்.

''சொல்லுங்கம்மா.''

சில நிமிடங்கள் பேசிவிட்டுப் போனை வைத்தவனுக்கு ஏளனத்தில் உதடு வளைந்தது.

ஓ, இனி இது வேறா என்று எரிச்சலாகவும்.

சரிதான், தனது தாய் கவனித்து விட்டுக் கேட்க வேண்டுமென்பதற்காகவே முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு இருந்திருப்பாளாக இருக்கும்.

அப்படியில்லாவிட்டால் தான் ஏதோ மிகப் பெரிய குற்றத்தைச் செய்து விட்டாற் போல எதற்காகத் தன்னைத் தாய் அழைத்து என்னவென்று விசாரிக்கப் போகிறார்.

ஏனோ அதுவரை இருந்த மனநிலை மாறிவிட, மீண்டும் அந்த இடத்தில் பழைய எரிச்சலும் கோபமும் வந்து குடிகொண்டு விட்டிருந்தன சுரேந்திரனுக்கு.

வீட்டிற்குள் வந்த கணவனை ஆவலுடன் பார்த்தாள் சஞ்சனா.

கடந்த சில நாட்களைப் போல வந்ததும் படுக்கைக்குப் போகாமல் வழக்கம் போலக் கணவன் குளிக்கச் சென்றதே மனதிற்குச் சற்று நிம்மதியாக இருந்தது.

அப்படியானால் இன்று தன்னிடம் முகம் கொடுத்தும் பேசுவானோ?

குளித்துவிட்டு வெளியே வரப்போகும் கணவனிடம் பேசுவதற்காக அப்படியே படுக்கையில் அமர்ந்து விட்டிருந்தாள்.



பத்து நிமிடங்களில் வெளியே வந்தவனுக்கு மனைவி தன்னிடம் பேசுவதற்காகக் காத்திருப்பது தெரிந்தது.

ஆனாலும் கண்டு கொள்ளாமல் நகர்ந்தான்.

அப்படிச் சென்ற கணவனைப் பின் தொடர்ந்த சஞ்சனா, ''சாப்பிடலாம், வாங்க,'' என்று அழைத்தாள்.

...........

''உங்களத்தான்.''

''நீயே கொட்டிக்கோ.''

கணவனின் அந்த ஏளனம் சுரீரென்று மனதைத் தைப்பதை உணர்ந்தாள்.

''எங்கூட நல்லவிதமாப் பேசவே மாட்டிங்களா சுரேன்?'' என்று உயிரைக் கண்களில் தேக்கிக் கொண்டு கேட்டாள்.

ஆனால் அதையெல்லாம் அவன் கவனித்தால் அல்லவா? தன்னுடைய வேலையிலேயே அவன் கவனமாக இருந்தான்.

''ப்ளீஸ் பேசுங்க.''

.............

கணவனின் உதாசீனத்தில், அம்மா என்னால முடியலையே என்று மனதிற்குள் ஊமையாய் அழுதாள்.

''உங்ககிட்ட தான்...''

''எதுக்கு உயிர வாங்கற?''

எரிச்சலும் கோபமும் ஒரு சேரக் கலந்து வெளியே வந்த கணவனின் வார்த்தைகளில், ''தயவு செஞ்சு வந்து சாப்பிடுங்க சுரேன்,'' என்று அழைத்தாள்.

''வேண்டாம்.''

''ஏன்?''

''சாப்டாச்சு.''

''நான் உங்களுக்காக வீட்ல சாப்பிடாமக் காத்துட்டிருப் பேங்கறதக் கூட ஏன் சில நாளா மறந்து போயிட்றீங்க?''

''நானொன்றும் காத்திருக்கச் சொல்லலையே.''

''ஆனா என்னால உங்கள விட்டுட்டுத் தனியா சாப்பிட முடியல சுரேன்.''

''அப்ப சாப்பிடாத.''

''கடவுளே! என்ன ஏன் இப்படியெல்லாம் கொல்றீங்க?''

''உன்ன விடவா?''

''எம் மனசறிஞ்சு நான் எந்தத் தப்பும் பண்ணினதே இல்ல சுரேன். என்னை நம்புங்க.''

''நிச்சயமா நம்பறேன், நீயும் நம்பற மாதிரி ஏதாவது சொல்லும்போது.''

தன்னுடைய தாய் பார்த்து விட்டுச் சென்று விசாரிக்கு மளவிற்கு உர்ரென்று முகத்தை வைத்துக் கொண்டிருந் திருக்கிறாளே என்ற கோபம் சுரேந்திரனுக்கு.

இரண்டு நாட்களாக எதுவுமே சாப்பிட்டிருக்காததில் கண்களை இருட்டிக் கொண்டு வந்துவிட, அப்படியே சுவரைப் பிடித்துக் கொண்டு நின்றாள் சஞ்சனா.

''அம்மா போன் பண்ணியிருந்தாங்க.''

''ஓ, என்ன விஷயம்?''

''அடடா, என்ன நடிப்பு!''

கணவனின் ஏளனத்தில் அந்த நேரத்திலும் சிரிப்பு தான் வந்தது சஞ்சனாவிற்கு.

''சொல்லுங்க. என்ன விஷயம்?''



''அது உனக்குத் தான தெரியும்?'' என்றவன்,

''சொல்லு. ஏன் இப்படியெல்லாம் கேவலமா நடந் துக்கற?'' என்று கேட்டான்.

..........

''எனக்குக் குடும்பத்துக்குள்ள நடக்கற விஷயம் வெளிய போறது பிடிக்காதுன்னு உனக்குத் தெரியாது...?''

''நான் அத்தைகிட்ட எதுவுமே சொல்லலையே.''

''சரிதான். நம்பிக்கறேன்.''

''உண்மையத்தான் சொல்றேன் சுரேன்.''

''போதும். வாய மூடு.''

''ஏன் இப்படியெல்லாம் பேசறீங்க?''

''கொஞ்சம் முகத்துல விழிக்காம எங்காவது போயி டேன். நானாவது நிம்மதியா இருக்க ட்ரை பண்றேன்.''

கண்கள் அதன் பாட்டிற்குக் கலங்கி விட்டிருக்க, அப் படியே சுவரில் சாய்ந்து நின்று கண்களை மூடிக் கொண்டாள்.

கணவனின் வார்த்தை அம்புகளோடு கால் வயிறும் சேர்ந்து கொள்ள, கை கால்கள் நடுங்கின.

''சுரேன், நான் உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லணும், தயவு செஞ்சு...''

கணவனின் கண்களில் ஏன் இத்தனை கோபமும் எரிச்சலும்...?

அந்த மௌனத்தையே சம்மதமாக ஏற்று அந்த சந்தோஷமான விஷயத்தைச் சொல்வதற்காக வாயைத் திறந்தாள்.

"சுரேன்..."

..............

"சுரேன்..."

..............

"சுரேன், நீங்க அப்பா ஆகப் போறீங்க."

"இனி இது வேற ஒரு கேடா?"

கணவனிடமிருந்து அப்படியொரு பதில் வருமென்று அவள் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

கத்தி கொண்டு நெஞ்சிலேயே செருகினாற் போலத் துடித்துப் போனாள்.

ஏன் இப்படி...

"இது தான் முதல் அனுபவமா, இல்ல..."

அதுதான் அவள் கணவனுடன் கடைசியாகப் பேசியது.

கண்களை இருட்டிக் கொண்டு வர அப்படியே சுவரைப் பிடித்துக் கொண்டு திரும்பினாள்.

"ஒரு நிமிஷம்," என்ற கணவனின் குரலில் மீண்டும் நின்றாள்.

"அம்மா அப்பாவுக்கு எந்தக் கேவலமும் தெரியாது. அதெல்லாம் தெரிஞ்சா அவங்க தாங்கிக்க மாட்டாங்க. வேற வழியில்லாம சகிச்சுக்கிட்டுப் போகணும்னு எனக்குத்தான் தலவிதி..."

இன்னும் என்னவெல்லாம் சொன்னானோ, அதற்கு மேல் எதுவுமே சஞ்சனாவின் காதுகளுக்குள் சென்றிருக்க வில்லை.

அப்படியே வந்து படுக்கையில் விழுந்தவள் தான், காலையில் கண் விழித்த போது தன்னருகில் படுத்



திருந்த கணவன் நன்கு தூங்கிக் கொண்டிருந்தது தெரிந்தது.

என்னவெல்லாம் சொல்லி விட்டான்! அம்மம்மா!

தன்னால் அனைவருக்குமே பிரச்சனையோ?

பாவம் கணவன், இனியும் தன்னால் சிரமப்பட்டு விடாமல் நிம்மதியாக இருக்கட்டும்.

மெதுவாகச் சத்தம் செய்யாமல் எழுந்து வெளியே வந்தவள், கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

நேரம் ஐந்தாகப் போவது தெரிந்தது.

நேராகப் போய்க் குளித்து உடை மாற்றிக் கொண்டு வந்தவள் கட்டுப்பாட்டை இழந்து தடுமாறிய கால்களால் முயன்று எட்டு எடுத்து வைத்து நடந்தாள்.

நினைத்ததைச் செயல்படுத்த முதலில் உடலுக்குத் தெம்பு வேண்டுமே என்று நினைத்தவள் நேராகச் சமையலறைக்குச் சென்று ஒரு பெரிய டம்ளர் நிறையப் பாலை எடுத்து அதில் ஹார்லிக்ஸ் கலந்து குடித்தாள்.

குமட்டிக் கொண்டு வந்தது.

ஆனாலும் நடப்பிலிருந்த தீவிரம் மற்ற உடல் உபாதைகளைப் பின்னுக்குத் தள்ளி விட்டிருந்தது.

இரவில் ஒரு நேரத்தில் எழுந்து எழுதியிருந்த கடிதத்தை மீண்டுமொருமுறை படித்துப் பார்த்துவிட்டு அங்கிருந்த டி.வி. ஸ்டேண்டின் மேல் பார்த்ததும் கண்களில் படும் விதமாக வைத்தாள்.

தான் செய்வது தவறோ என்று மனம் உறுத்த கடந்த மூன்று நாட்களையும் ஒருமுறை வேகமாக மனதிற்குள் உருப் போட்டாள்.

எங்கிருந்து அவ்வளவு வேகம் வந்ததோ, கொஞ்சம் பணம், அவசரத்திற்குத் தேவையான துணிகள், படித்த சர்ட்டிபிகேட்ஸ் மற்றும் முக்கியமாக வேண்டிய ஒருசில பொருட்களுடன் வீட்டை விட்டுக் கிளம்பியே விட்டிருந் தாள் சஞ்சனா.

# 10

வீட்டை விட்டுக் கிளம்பிய சஞ்சனா சென்றடைந்த இடம் அவளுடன் கல்லூரியில் படித்த உயிர்த் தோழி யின் வீடு.

கல்லூரியில் மட்டுமல்ல, பள்ளிக் காலத்திலிருந்தே அந்த அஞ்சலி, சஞ்சனா இருவரும் இணை பிரியாத் தோழிகள்.

அந்தத் தோழியுடன் அவள் படிக்கும் கல்லூரியி லேயே படிக்க வேண்டுமென்று தான் சஞ்சனா தானும் வெளியூரில் போய்ப் படித்ததே.

சரியாகச் சொன்ன நேரத்திற்கு வந்து விட்டிருந்த தோழியை ஏற்கெனவே காருடன் வந்து ரயில்வே ஸ்டேஷ னில் காத்திருந்த அஞ்சலி பிக் அப் செய்து கொண்டாள்.

இப்படி எதிர்பாராத விதமாகத் தோழியைச் சந்திக்க நேர்ந்தது மனதிற்கு சந்தோஷத்தைக் கொடுத்தாலும் என்ன பிரச்சனை, ஏன் இப்படித் திடீரென்று கிளம்பி வந்திருக்கிறாளென்ற எண்ணம் அவளை யோசிக்கவும் வைத்தது.



சற்று தொலைவில் வந்து கொண்டிருந்த தோழியை நோக்கிப் போனாள் அஞ்சலி.

''வா சஞ்சு,'' என்று தோழியின் கையிலிருந்த பேக்கை வாங்கிக் கொண்டவள், அவளுடைய தோற்றத்தில் இதென்ன இவ்வளவு மெலிவென்று திடுக்கிட்டுப் போனாள்.

ஆனாலும் அதைத் தனக்குள் மறைத்துக் கொண்ட வளுக்கு, ஏதோ பிரச்னை என்பது மட்டும் தெளிவாகப் புரிந்தது.

சரிதான், அதைச் சற்று மறந்திருக்கட்டுமென்று தோழி யைப் புதிய சூழ்நிலைக்குக் கொண்டு வர முயன்றாள்.

சஞ்சனாவின் திருமணம், அவளுடைய தந்தையின் மறைவு என இரண்டிற்குமே அஞ்சலி தானும் போய் வந்திருந்தாள்.

ஏன், சிறு சிறு விஷயங்களைக் கூடப் பகிர்ந்து கொள்ளு மளவிற்கு இருவருமே இணை பிரியாத் தோழிகள்.

சற்று யோசித்த அஞ்சலிக்கும் நல்லவேளையாகப் பிரச்சனையென்றதும் வேறு எங்கும் சென்று விடாமல் தன் நினைவு வந்து கிளம்பி வந்தாளே என்றிருந்தது.

''காரக் கொஞ்சம் தள்ளிப் பார்க் பண்ணிட்டு வந்தேன்,'' என்றவள், ''இல்ல, நீ இங்க நிக்கறியா, நான் போய் எடுத்துட்டு வர்றேன்,'' என்றாள்.

''இல்லில்ல, ரெண்டு பேரும் நடந்தே போயிட்லாம்,'' என்றாள் சஞ்சனா.

தோழியைப் பொறுத்தவரை அவள் அனைவரிடமும் விட்டுக் கொடுத்துச் சிரித்த முகத்துடன் பழகும் இனி மையான பெண்ணாயிற்றே என்று அஞ்சலியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

சரிதான், எதுவானாலும் அவளே சொல்லட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாமென்று நினைத்துக் கொண்டாள். கடைசிக்கு சற்றுத் தேறும் வரை நாமாக எதையும் கேட்கக் கூடாதென்றும்.

வீட்டிற்கு வந்ததும் சஞ்சனாவிற்கெனத் தனியாக ஒத்துக்கப்பட்டிருந்த மாடி அறைக்கு அவளை அழைத்துச் சென்றாள் அஞ்சலி.

''ஹீட்டர் போட்டு விட்டிருக்கேன் சஞ்சு. போய்க் குளிச்சுட்டு வந்துடேன்.''

''சரி.''

''இரு. அதுக்கு முன்னாடி லைட்டா சாப்பிட ஏதாவது எடுத்துட்டு வர்றேன்.''

''வேண்டாம்.''

''இல்ல, கொஞ்சமா...''

''வேண்டாம் ப்ளீஸ்.''

''சரிதான். அப்ப ஏதாவது குடி,'' என்ற அஞ்சலி தோழியின் பதிலுக்குக் காத்திருக்காமல், ''இதோ வர்றேன்,'' என்று கீழே இறங்கி வந்திருந்தாள்.

சில நிமிடங்களில் ஒரு பெரிய டம்ளர் நிறைய பூஸ்ட்டுடன் வந்திருந்தவள், ''முதல்ல குடி,'' என்று டம்ளரைத் தோழியின் கைகளில் திணித்திருந்தாள்.

அவள் குடித்து முடிக்கும் வரை காத்திருந்து டம்ளரை வாங்கிக் கொண்டவள், ''சரிப்பா, குளி. நான் அப்புறமா வர்றேன்,'' என்றாள்.

சிரிக்காமல் ஒருவார்த்தை கூடப் பேசத் தெரியாதவள் இந்த அளவிற்கு மாறி விட்டிருக்கிறாளென்றால்...

சரிதான், எதுவானாலும் அவளே சொல்லத்தானே போகிறாளென்று அப்போதைக்கு ஒன்றும் கேட்காமல் கீழே இறங்கி வந்திருந்தாள்.

குளிப்பதற்காகக் குளியலறைக்குள் வந்திருந்தவளுக்கு, அந்தத் தனிமையில் ஓவென்று கதறி அழ வேண்டும் போலிருந்தது.

தன்னுடலில் பாதியை வெட்டி வைத்துவிட்டு வந்து விட்டாற்போல ஏன் இந்த அளவிற்கு உடலும் மனமும் துடிக்கிறது!

ஆனாலும் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு குளித்து முடித்துவிட்டு வெளியே வந்தாள்.

எதையெதையோ எண்ணி உள்ளுக்குள் மனம் துடித்தாலும் முயன்று மனதை நடப்பிற்குக் கொண்டு வந்து இனிமேல் தான் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி யோசித்தாள்.

இடைப்பட்ட சில மாதங்கள் தன் வாழ்வில் வரவே இல்லையென்று எண்ணிக் கொண்டு விடலாமென்ற முடிவுக்கு மனதிற்குள் வந்திருந்தாள்.

மிகுந்த மனக்கட்டுப்பாடு உடையவள் என்பதால் நடந்ததை மறந்திருக்க முயற்சி செய்து அதில் ஓரளவு வெற்றியும் கண்டாள்.

ஓரளவிற்கு மட்டும் தான்.

இரவின் தனிமையில் மட்டும் நடந்ததெல்லாம் மனதிற்குள் ஓடிக்கொண்டே இருக்கும். என்ன முயன்றும் அதை மட்டும் அவளால் தடுக்க முடிந்திருக்கவே இல்லை.

அதைத் தொடர்ந்து தான் ஏதோ மிகப் பெரிய தவறைச் செய்து விட்டதைப் போலவும் மனதளவில் மிகவும் துடித்துப் போவாள்.

சஞ்சனா தோழியின் வீட்டிற்குக் கிளம்பி வந்தும் கூட பத்து நாட்கள் முடிந்து போய் விட்டிருந்தன.

வந்த புதிதில் இருந்ததைப் போல இல்லாமல் இப்பொழுது அவளால் ஓரளவு இயல்பாக அனைவரிடமும் பேசவும் சிரிக்கவும் கூட முடிந்தது.

எதையும் தூண்டித் துருவாமல் அஞ்சலியின் வீட்டிலிருக்கும் அனைவரும் இதமாக நடந்து கொண்டதும் கூட அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

தொடர்ந்து சில நாட்களாக யோசித்ததின் பலனாகத் தொடர்ந்து மேலே படிப்பதற்கான முயற்சியில் இறங்கியிருந்தாள்.

நிறையப் படிக்க வேண்டுமென்று அவளுக்குள் ஊறியிருந்த வெறி தேவையற்ற மனக் குழப்பங்களை ஒதுக்கி வைப்பதற்கு மிகவும் உறுதுணையாக அமைந்தது.

நேரடியாகப் படிப்பதற்குச் செலவு நிறைய ஆகுமென்பதால், தொலைதூரக் கல்வி முறையைத் தேர்ந்தெடுத்திருந்தாள்.

தோழியின் வீட்டிலேயே தொடர்ந்து தங்கிக் கொண்டிருக்க முடியாதென்பதால், வெளியில் ஏதாவதொரு நல்ல மகளிர் விடுதியில் சென்று தங்கிவிட முடிவு செய்தாள்.

பணத் தேவைகளைச் சமாளிக்கும் பொருட்டு அவை அனைத்திற்கும் முன்பாக தோழியின் உதவியோடு படிப்புக்கேற்ற ஒரு நல்ல வேலையைத் தேடிக் கொண்டாள்.

தோழியின் துணையிருந்ததால் சஞ்சனாவிற்கும் அவள் நினைத்ததெல்லாம் எளிதாக நடந்தன.

முடிவு செய்தது போல மகளிர் விடுதிக்கும் சென்று விட்டிருந்தவள் தொலைதூரக் கல்வியில் சேர்ந்து படிக்கவும் தொடங்கி விட்டிருந்தாள்.



பகல் முழுக்க வேலை, இரவில் தூக்கம் போக மீதி நேரம் படிப்பு என இப்பொழுது தேவையற்ற மனக் குழப்பங்களிலிருந்து பெருமளவு விடுபட்டிருந்தாள் சஞ்சனா.

ஆனாலும் இரவின் தனிமையில் கணவனுடைய நினைவு வரும்போது மட்டும் துடித்துப் போவாள்.

தான் நினைத்துக் கொள்வது போல அவனும் தன்னை நினைத்துக் கொள்வானா, இல்லை... ஒரு வழியாகத் தொலைந்தாளே, அது போதுமென்று நிம்மதியுடன் இருப்பானா?

அதிலென்ன சந்தேகம்?

நிச்சயம் நிம்மதியாக - ஏன் சந்தோஷமாகக் கூட இருப்பான்.

அந்த எண்ணமே நெஞ்சைக் கசக்கிப் பிழிய, தாங்கிக் கொள்ள முடியாமல் கதறி விட்டிருந்தாள் சஞ்சனா.

ஆனாலும் சரிதான், அவனாவது நிம்மதியாக இருந்தால் அதுவே போதுமென்று மனதார நினைத்துக் கொள்வாள்.

எது எப்படியானாலும் தான் எழுதி வைத்து விட்டு வந்த கடிதம் நன்கு வேலை செய்யத் தொடங்கியிருக்கும் என்றும்.

தான் எழுதியிருந்த கடிதத்தை எப்பொழுதும் போல ஒரு முறை மனதிற்குள் உருப் போட்டுப் பார்த்தாள்.

அன்றைய நினைவில் மீண்டும் கண்கள் கலங்கின.

தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள் என்றுதான் கடிதத்தையே தொடங்கியிருந்தாள்.

நான் உங்களை விட்டுப் பிரிந்து செல்வதென்று முடிவு செய்து விட்டேன்.

நிச்சயம் சாக மாட்டேன். ஆனால் என்னைத் தேட முயன்றால் அதையும் செய்யத் தயங்க மாட்டேன் என்பதையும் மறந்துவிட வேண்டாம்.

என்னால் யாரும் சிறிதளவு துன்பப்பட நேர்ந்தாலும் கூட அதை என்னால் தாங்கிக் கொள்ளவே முடியாது.

வேற்றிடம் என்று போய் உரிமையுடன் நிற்க எனக்கு யாரும் இல்லாததும் கூட ஒரு காரணம் தான்.

இனிமேல் அனைவரும் சந்தோஷத்துடன், முக்கிய மாக நிம்மதியுடன் இருங்கள்.

என்னைக் கேட்டால் வாழ்கின்ற வாழ்க்கை மிகவும் உன்னதமானதென்று சொல்லுவேன்.

மற்றவர்களின் சந்தோஷத்திற்காகவும் நிம்மதிக்காக வும் நாம் எந்த அளவிற்குச் சிரமப்பட நேர்ந்தாலும் சரி தான். ஆனால் அப்படி இல்லாமல் அதற்கு எதிர்ப்பதமாக அமைந்து விட்டபோது?

அத்தையையும், மாமாவையும் நினைக்கும் போது தான் மனதிற்குப் பாரமாக இருக்கிறது.

நான் ஏதோ மிகப் பெரிய தவறு செய்வதைப் போலக் கஷ்டமாகவும்.

என்னுடைய மோசமான நடத்தையை எடுத்துச் சொல்லி அவர்களைத் தேற்ற முயற்சி செய்யுங்கள். அதற்குப் பிறகு அவர்கள் நான் எடுத்த முடிவிற்கு சந்தோஷப்படக் கூடச் செய்வார்கள்.

இத்துடன் என் கையெழுத்திட்ட ஒரு முழு வெள்ளைத் தாளையும் வைத்திருக்கிறேன். நீங்கள் வேறு திருமணம் செய்து கொள்ள இதை விடுதலைக் கடிதமாகவும் பயன் படுத்திக் கொள்ளலாம்.



இடையில் சற்றும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவிற்கு ஏதேதோ நடந்து முடிந்து விட்டன. என்ன செய்வது. நீங்களே சொன்னது போல விதி அப்படி யிருந்தால்.

இன்னுமொரு முறை நினைவு படுத்துவதற்காக மன்னித்து விடுங்கள். என்னைத் தேட முயன்றால் என்னுயிரை மாய்த்துக் கொள்ளவும் தயங்க மாட்டேன் என்று கடிதத்தை முடித்திருந்தாள் சஞ்சனா.

தொடர்கதையாக அனைத்தையும் நினைத்துப் பார்த்தவள் தாங்கிக் கொள்ள முடியாது மீண்டும் கதறி விட்டிருந்தாள்.

அப்பா! என்னையும் ஏன் நீங்கள் உங்களுடனேயே அழைத்துக் கொள்ளக் கூடாதென்று ஆயிரத்து ஓராவது முறையாகத் தந்தையிடமும் முறையிட்டுக் கேட்டு விட்டிருந்தாள்.

உடனே யாருமின்றி அழுது கொண்டே தான் இருக்க வேண்டுமென்று கடவுள் தன்னைப் படைத்து விட்ட பிறகு விடுதலை மட்டும் அவ்வளவு எளிதாகக் கிடைத்து விடுமா என்று அந்த நேரத்திலும் சிரித்துக் கொண்டாள்.

திடீரென்று நினைவு வந்தவளாய் வயிற்றைத் தொட் டுப் பார்த்தாள் சஞ்சனா.

அதுதான் உனக்குத் துணையாகக் கொடுத்திருக் கிறேனே என்று அந்தக் கடவுளே கேட்காமல் கேட்பதைப் போலிருந்தது.

அன்று வரை உணராத விதமாக உடல் சிலிர்த்துப் போனாள்.

தனக்குள்ளும் ஓர் உயிர்.

அப்படியானால் தன்னுடைய வாழ்க்கைக்கும் ஒரு அர்த்தம் இருக்கிறது.

அதற்குப் பின் வந்த நாட்களில் தனது வயிற்றில் உதித்திருக்கும் சிசுவை மனதில் கொண்டு பிடிக்கா விட்டாலும் சற்று சத்தான உணவு வகைகளை எடுத்துக் கொள்ளத் தொடங்கியிருந்தாள்.

அனைத்திற்கும் முன்னதாக ஒரு மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்து கொள்ள வேண்டுமென் பதையும் மனதிற்குள் குறித்து வைத்துக் கொண்டாள்.

# 11

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் படுக்கையை விட்டே தாமதமாகத்தான் எழுந்தாள் சஞ்சனா.

பத்து மணிக்கு வருவதாக, அஞ்சலியிடம் ஏற்கனவே சொல்லியிருந்ததால் அதற்குப் பிறகு நேரத்தைக் கடத்தாமல் கிளம்பி விட்டிருந்தாள்.

''வா சஞ்சு.''

வாசலுக்கே வந்து தன்னை வரவேற்ற தோழியிடம் ''என்ன தவமா?'' என்று கேட்டாள்.

''பின்ன, உனக்காகத்தான்.''

''ஓ, எங்க அஞ்சு... ஆன்ட்டி, அங்கிள் எல்லாம்.''

''ஊருக்குப் போயிருக்காங்க. இனி நாளைக்குத் தா வருவாங்க.''



''அய்! வீட்ல நீ மட்டும் தானா?''

''அதான் நீ வந்துட்டயே.''

''அது சரிதான்.''

''சரி வா, சாப்புட்லாம்.''

''ஒரு தடவ சாப்டாச்சு அஞ்சு. உனக்காக வேணும்னா இன்னொரு தடவ...''

''இது என்னப்பா நியாயம். நான் இங்க உனக்காக சாப்புடாமக் காத்துட்டிருக்கேன்...''

''அஞ்சு...''

சீரியசாக அழைத்த தோழியின் முக பாவனையில் ''என்னமா?'' என்று கேட்டாள்.

''வா, சாப்டுட்டே பேசலாம்.''

இரண்டு ப்ளேட்களில் பரிமாறி ஒன்றைத் தோழிக்குக் கொடுத்துவிட்டு மற்றொன்றைத் தான் எடுத்துக் கொண்ட அஞ்சலி,

''சொல்லு சஞ்சு,'' என்றாள்.

''முதல்ல சாப்புடு.''

''அது சரிதான். ஆனா நீ ஏன் இப்படிக் கொறிக்கற? இன்னும் கொஞ்சம் கூட...''

தோழி சொல்லிக் கூட முடித்திருக்கவில்லை. ப்ளேட்டை வைத்துவிட்டு வேகமாக வாஷ்பேஸினுக்கு ஓடினாள் சஞ்சனா.

சென்றவள் குடலே வெளியே வந்துவிடும் போல வாந்தியெடுத்து விட்டு ஒரு வழியாக ஓய்ந்தாள்.

என்னவோ ஏதோவென்று பயந்து போய்த் தானும் அருகில் வந்திருந்தாள் அஞ்சலி.

மூச்சு வாங்க வேர்த்துப் பூத்திருந்த தோழியின் கையைப் பிடித்துக் கொண்டு, "என்னமா, உடம்புக்கு என்ன பண்ணுது?" என்று அக்கறையுடன் கேட்டாள்.

"சஞ்சு."

"ம் சொல்லு."

"டாக்டர்கிட்டப் போகணும்."

..............

புரியாமல் பார்த்த தோழியிடம், "லேடி டாக்டர் கிட்ட," என்றாள்.

சில வினாடிகள் தான். "ஏய் அப்படின்னா!" என்று சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தாள் அஞ்சலி.

"ஆமாம், அதுதான்."

"என்னமா இவ்வளவு சிம்பிளா சொல்ற, எவ்வளவு சந்தோஷமான விஷயம்..."

............

"எனக்கே சந்தோஷத்தக் கன்ட்ரோல் பண்ணிக்க முடியலையே சஞ்சு, உன் சுரேனுக்கு மட்டும் இது தெரிஞ்சா பிரச்சனை எல்லாம் கூட சரியாயிடுமே."

இதுதான் முதல் அனுபவமா?

ஏளனத்துடன் கணவன் கேட்டது அப்பொழுது போல காதுகளில் ஒலிக்க, அந்த வினாடியே கண்கள் கலங்கி விட்டிருந்தன சஞ்சனாவிற்கு.

உதட்டைக் கடித்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

தோழியின் அழுகையில் அதிர்ந்து போய் விட்டிருந்தாள் அஞ்சலி.



"சரி சஞ்சு, போகலாம்."

தோழிக்காக முயன்று தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்ட சஞ்சனா, சாப்பிடவும் முயன்றாள்.

அன்று மாலையே தோழிகள் இருவரும் மருத்துவரிடம் சென்று வந்திருந்தார்கள்.

இது இரண்டாவது மாதம். அனைத்தும் நன்றாக இருக்கிறது. எந்தப் பிரச்சனையுமில்லை. நான் கொடுக்கும் மருந்துகளோடு நல்ல சத்தான ஆகாரங்களை எடுத்துக் கொண்டால் அதுவே போதுமானது. மாதத்திற்கு ஒரு முறை பரிசோதனைக்கு மட்டும் தவறாமல் வந்து செல்ல வேண்டுமென்று தோழிகள் இருவரின் சந்தேகங்களையும் பயத்தையும் தெளிய வைத்து அனுப்பியிருந்தார் மருத்துவர்.

சஞ்சனா இயல்பாக இருக்க, அஞ்சலி தான் நல்ல சத்தான ஆகாரங்களுக்கு விடுதியில் என்ன செய்வாயென்று பயத்துடன் தோழியைக் கேள்வி மேல் கேள்வி கேட்டு ஒரு வழி செய்தாள்.

"அதெல்லாம் ஓரளவு கிடைக்கும் அஞ்சு. அதுக்கு மேல ப்ரூட்ஸ், டேட்ஸ், அது இதுன்னு என்னென்ன கிடைக்குமோ, எல்லாத்தையும் வாங்கி வெச்சுக்கிறேன். விடு," என்று எடுத்துச் சொல்லித் தோழியின் பயத்தைப் போக்க முயற்சி செய்தாள் சஞ்சனா.

"நிஜமா?"

"உன்னோட பயம் அவசியமில்லாததுமா. ஏன் சொல்றேன்னா எனக்கும் இந்தக் குழந்த ரொம்ப முக்கியம்," என்றாள்.

"என்ன அஞ்சு பாக்கற? போனாப் போகுது. இவளோட வாழ்க்கைக்கும் ஒரு அர்த்தம் இருந்துட்டுப் போகட்

இந்தக் குழந்தையக் குடுத்திருக்டும்னு தான் கடவுள் இந்தக் குழந்தையக் குடுத்திருக்கார். அதனால இத ரொம்பவும் அக்கறையோடவும், ஆரோக்கியத்தோடவும் பெத்து எடுப்பேன். கவலப்படாத."

மேலும் மேலும் நம்பிக்கையூட்டும் விதமாக அனைத்தையும் எடுத்துச் சொல்லி, தனக்குத் தேவையான சில முக்கியமான பொருட்களை வாங்கிக் கொண்டு தோழியை வீட்டுக்கு அனுப்பி விட்டு விடுதிக்கு வந்து சேர்ந்திருந்தாள் சஞ்சனா.

தன் வயிற்றில் வந்து உதித்த பாவத்திற்கு இந்தக் குழந்தையும் பாவம் தனிமையில் பிறந்து வளர வேண்டியிருக்கிறதே என்று தான் மனதிற்கு வேதனையாக இருந்தது.

விவரம் தெரியாத வயதிலேயே தாய் இறந்து விட்டிருக்க, தந்தையிடம் அவசியத்திற்குச் சில வார்த்தைகள் என்பதற்கு மேல் சஞ்சனா சிறு வயதிலிருந்து உணர்ந்தது கொடும் தனிமையையே.

அவளை அறியாமலேயே மனதிற்குள் இருந்து வந்த அந்தப் பயமும் ஏக்கமும் தான் அவளைக் கல்லூரிப் படிப்பிற்கு விடுதியைத் தேர்ந்தெடுக்க வைத்திருந்ததென்று கூடச் சொல்லலாம்.

ஆனால் தனிமையில் குழந்தையைப் பெற்றெடுப்பதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல என்பதைப் போகப்போகத்தான் சஞ்சனாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஏன் இதைவிடச் சிரமமானதென்று கூட உலகத்தில் ஒன்று இருக்க முடியுமா என்னுமளவிற்கு மனதளவிலும், உடலளவிலும் சிரமப்பட்டுப் போனாள்.



அதற்கும் அப்பொழுது தான் நான்கு மாதங்கள் முடிவடைந்திருந்தன.

ஏன் இப்படியிருக்கிறது, எதற்காக அப்படி வருகிறதென்று எத்தனையெத்தனையோ சந்தேகங்கள்.

ஒருவேளை வயிற்றிலிருக்கும் குழந்தைக்குத் தான் ஏதாவது ஆகி விட்டதோ என்னும் பயத்தில் நடுங்கிப் போனாள்.

அடிக்கடி தோழியைத் தொந்தரவு செய்து கொண்டிருந்தால் அவள் சந்தோஷமாகச் செய்வாள் தான் என்றாலும் அவளுடைய பெற்றவர்களுக்கும் அப்படித் தானென்று சொல்ல முடியாதே என்று தானே தனியாக மருத்துவரை அவ்வப்பொழுது சென்று பார்த்துத் தனது சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்தாள்.

ஆனால் மாதப் பரிசோதனைக்கு மட்டும் அஞ்சலி வருத்தப்படுவாளே என்று அவளையும் உடனழைத்துச் சென்றாள்.

வாந்தி மசக்கையென்று வழக்கமாக அனைவருக்கும் வருவது தான் சஞ்சனாவிற்கும் இருந்ததென்றாலும் தனிமையில் அனுபவிக்க நேர்ந்ததாலோ அல்லது இயற்கையிலேயே அவளுக்கு அவையனைத்துமே அதிகமாகத்தான் இருந்ததோ, விடுதியில் உடனிருக்கும் அறைத் தோழிகளே வந்து என்ன ஏதென்று விசாரிக்குமளவிற்கு மிகவும் சிரமப்பட்டுப் போனாள்.

ஐந்தாவது மாதம் தொடங்கியிருக்க, வயிறு வெளிப்படையாகத் தெரியவும் ஆரம்பித்திருந்தது.

அதனால் அவள் மற்றொரு பெரிய பிரச்சனையையும் சந்திக்க நேர்ந்தது.

அவளுடைய அந்த நிலை விடுதி வார்டனுக்குத் தெரிந்து போய்விட அடுத்த சில நிமிடங்களிலேயே அவள் விடுதியை விட்டு வெளியேறவும் நேர்ந்தது.

அந்த விடுதிக்கு வந்த நாளிலிருந்து அன்று வரை சஞ்சனாவை அறிந்திருந்த வார்டனுக்கும் அவள் நல்ல பெண் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை தான் என்றாலும், விடுதிக்கென்று இருந்த சில கட்டுதிட்டங்கள் அவளை அந்த வாரமே விடுதியிலிருந்து வெளியேறச் செய்திருந்தன.

தோழி அஞ்சலியின் உதவியால் அவளுடைய வீட்டிற்கு அருகிலேயே இரண்டு அறைகள் கொண்ட பாதுகாப்பான ஒரு சிறிய வீட்டை வாடகைக்குப் பிடித்துச் சஞ்சனா அங்கு குடி வந்திருந்தாள்.

மீண்டும் தனிமைப் பயம் வந்து வாட்டத் தொடங்கி விட்டிருந்தாலும் அங்கு ஒரு விதத்தில் நிம்மதியாகவும் உணர்ந்தாள்.

யாருக்காகவும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய கட்டாயமில்லாமல் உடல் ஒத்துழைக்காமல் போகும்போது தன் இஷ்டத்திற்குப் பேசாமல் கண்களை மூடிப் படுத்துக் கொண்டு விட முடிந்தது.

முடியும்போது எழுந்து எளிமையாக அதே சமயம் சத்துள்ளதாகவும் சமைத்துக் கொண்டாள்.

இவை அனைத்திற்கும் இடையில் வேலைக்கும் சென்று வந்து கொண்டிருந்தாள்.

அதே போலத் தொலைதூரக் கல்விப் படிப்பும் கூட ஓரளவு போய்க் கொண்டு தான் இருந்தது. ஓரளவு பரிட்சைக்கு இன்னும் பல நாட்கள் இருந்ததால் முடியும்போது மட்டும் எடுத்துச் சிறிது நேரம் படித்து விட்டு வைத்தாள்.




இந்த சமயத்தில் இது சாப்பிடப் பிடிக்குமாமே, அது உடலுக்கு நல்லதாமே என்று அஞ்சலி பார்த்துப் பார்த்து ருசியாகச் செய்யப்பட்ட உணவு வகைகளை எடுத்து வந்து தோழியை உண்ணச் செய்ததோடு, அப்படியே மணிக் கணக்கில் அமர்ந்து பேசி விட்டுச் செல்வதும் வழக்கமாயிற்று.

சிறு வயதிலிருந்தே இருவரும் நல்ல தோழிகள் என்பதால் தேடிப்பிடிக்க வேண்டிய அவசியமில்லாமல் சுவாரஸ்யமாகப் பேசுவதற்கும் விஷயங்கள் நிறைய இருந்தன.

ஆனால் சஞ்சனாவால் தான் முன்பு போல மனதார இயல்பாகப் பேச முடிந்திருக்கவில்லை.

அஞ்சலி பாவம் பயந்து போய் விடக் கூடாதே என்று அவளுக்காகத் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முயற்சி செய்து அதில் ஓரளவு வெற்றியும் கண்டாள்.

அது அஞ்சலிக்கும் புரியவே செய்தது.

பாவம், இந்த மாதிரி சமயத்தில் சொந்தங்களுக்காக முக்கியமாகக் கணவனின் அரவணைப்பிற்காகவும் அவனுடைய ஆறுதல் வார்த்தைகளுக்காகவும் மனம் ஏங்குமே என்று தோழிக்காக மனதிற்குள் பரிதாபப் பட்டுக் கொள்ள மட்டும் தான் அவளால் முடிந்தது.

அவள் எண்ணிக் கொண்டது போலத்தான் நடக்கவும் செய்தது.

ஐந்தாவது மாதம் முடிந்து ஆறாவது மாதமும் தொடங்கி விட்டிருந்தது சஞ்சனாவிற்கு.

அன்று இரவு நல்ல தூக்கத்தில் இருந்தபோது வயிற்றில் ஏதோ அசைந்தது போலிருக்க, திடீரென்று விழித்துக் கொண்டு விட்டிருந்தாள்.

சில வினாடிகள் தான். அதே போல மற்றொரு முறையும், சந்தேகமே இல்லை. வயிற்றுக்குள் குழந்தையின் அசைவு தான்.

அதற்கு மேல் தூக்கம் பிடிக்காமல் போய்விட எழுந்து அமர்ந்து விட்டிருந்தாள்.

பரபரப்பு, பயம், சந்தோஷம் என எதுவென்று சரியாக விளக்கிச் சொல்ல முடியாத மனநிலையுடன் குழந்தைக்கு வலித்து விடுமோ என்னுமளவிற்கு மென்மையாக வயிற்றைத் தடவிக் கொடுத்தாள்.

உடனே அதை யாரிடமாவது பகிர்ந்து கொள்ள வேண்டும் போலத் தீவிரமாகத் தோன்றிய உணர்வில் சற்று சிரமப்பட்டுத் தான் போனாள்.

வழக்கம் போலக் கணவனுடைய நினைவு தான் வந்தது சஞ்சனாவிற்கு.

உயிரும் சதையுமாகத் தனக்குள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கும் இந்த உயிர் அவன் கொடுத்ததல்லவா?

எப்பொழுதும் போல இந்த ஒரு விஷயத்தில் மட்டும் கடவுளின் மேல் அவளுக்குக் கோபம் தான் வந்தது.

தன்னுடனான அந்த இனிமையான நாட்களைக் கூடக் கணவன் இன்னும் நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறானோ என்னவோ?

ஆனால் அதன் பயனாகத் தனக்குள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டிருக்கும் இந்த உயிர்.

அதற்காகத் தினம் தினம் தான் அனுபவித்துக் கொண்டிருக்கும் இந்த வேதனை.



இதை வேதனையென்று சொல்லிவிட முடியாது தான். சுகமான வலியென்று வேண்டுமானால் சொல்லலாம்.

ஏன் இதைத்... தாய்மையை அனுபவிக்க நேர்ந்த பெண்களுக்கே கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்று கூட.

எல்லாம் சரிதான். ஆனால் இதற்குக் காரணமான கணவன் தனிமையில் தான் படும் சிரமத்தைச் சற்றேனும் அறிவானா?

கணவன் மட்டும் இந்நேரம் தன் அருகில் இருந்தால்,

அவனுடைய மார்பில் இதமாகச் சாய்ந்து கொள்ள முடிந்தால்,

அவனுடைய மென்மையான அணைப்பிற்குள் இருந்து தன் மனப் பாரங்களையெல்லாம் சற்று இறக்கி வைக்க முடிந்தால்...

பிரிந்து வந்ததற்குப் பிறகு முதன் முறையாகத் தான் எடுத்து வந்திருந்த கணவனின் போட்டோவைப் போய் சூட்கேஸிலிருந்து எடுத்து வந்தாள்.

போட்டோவில் புன்னகையுடன் இருந்த கணவனை நேரிலேயே பார்ப்பதைப் போல உடல் சிலிர்த்துப் போனாள்.

இனம் கண்டு கொள்ள முடியாத அந்த உணர்வில் உடலும் உள்ளமும் பரபரக்க, போட்டோவில் இருக்கும் கணவனின் முகத்தை எங்கே அதற்கு வலித்து விடுமோ என்னுமளவிற்கு மெதுவாகத் தடவிக் கொடுத்தாள்.

ஏனோ அவனை நேரிலேயே பார்ப்பதைப் போன்ற உணர்வு தோன்றிவிட, அதற்கு மேல் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் சுரேன்... சுரேன்... என்று கணவனின் போட்டோவை மார்போடு இறுக அணைத்துக் கொண்டபடி கதறத் தொடங்கி விட்டிருந்தாள்.

என்னை ஏன் மணந்து கொண்டீர்கள் சுரேன்?

மனதளவில் சந்தோஷமாக இருந்திருக்கா விட்டாலும் என்னளவில் நிம்மதியாக இருந்தேனே.

அதிலும் சும்மாவே அன்புக்கு ஏங்கிக் கொண்டிருந்த எனக்கு ஏன் திகட்டத் திகட்ட சந்தோஷத்தைக் கொடுத்து விட்டு, இப்பொழுது போதும், உனக்கு இவ்வளவு கொடுத்ததே அதிகமென்று தனிமைச் சிறையில் தள்ளி விட்டு வேடிக்கை பார்க்கிறீர்களென்று கதறித் தீர்த்தாள்.

உங்களுக்கு வேண்டுமானால் நான் அவசியமற்றவளாக ஏன் பத்தோடு பதினொன்றாகக் கூட இருக்கலாம். ஆனால் எனக்கு நீங்கள் அப்படியில்லை சுரேன்.

நீங்கள் என் உயிரோடும் உணர்வோடும் இரண்டறக் கலந்து போய் விட்டீர்கள் சுரேன்.

வாழ்க்கை இந்த அளவிற்கு அர்த்தமும், சந்தோஷமும் நிறைந்தது என்பதைக்கூட உங்களின் மூலமாகத் தான் சுரேன் தெரிந்து கொண்டேன்.

குழந்தையின் கையில் பொம்மையைக் கொடுத்து விட்டு அது ஆசையுடன் விளையாடத் தொடங்கும் போது தட்டிப் பிடுங்கிக் கொண்டது போல என்னை ஏன் சில நாட்கள் சொர்க்க வாழ்வில் திளைக்கச் செய்து விட்டுப் பிறகு பழையபடி தனிமைச் சிறையில் தள்ளி விட்டீர்கள் சுரேன்?

கணவனை நேரிலேயே பார்ப்பதைப் போலத் தனது மனதிலிருக்கும் ஆதங்கங்களையெல்லாம் கொட்டித் தீர்த்தாள் சஞ்சனா.

கண்களிலிருந்து கண்ணீர் அதன் பாட்டிற்கு வடிந்து கொண்டே இருக்க, கணவனின் போட்டோவை



மார்போடு இறுக அணைத்துக் கொண்டபடியே தூங்கியும் போய் விட்டிருந்தாள். அதனாலோ என்னவோ பல நாட்களுக்குப் பிறகு மீண்டும் தூக்கத்திற்கிடையே ஏதேதோ கனவுகள் வந்து துன்புறுத்திய போதும் கூட, கணவனின் அணைப்பிற்குள் பாதுகாப்பாக இருப்பதைப் போல நிம்மதியாக உறங்கினாள்.

# 12

ஏனோ அதற்குப் பிறகு கணவனின் நினைவுகள் அடிக்கடி வந்து சஞ்சனாவைத் தொந்தரவு செய்யலாயின.

கூடவே அத்தையின் அதாவது அவனுடைய தாயின் நினைவும்.

விசேஷமா என்று கடைசியாக அவர் தன்னிடம் ஆவலாகக் கேட்டது தான் நினைவிற்கு வந்தது.

இப்பொழுது தான் இருக்கும் நிலை மட்டும் அவருக்குத் தெரிந்தால்?

திடீரென்று ஏதோ நினைவு தோன்றியதில் திகைத்துப் போய் விட்டிருந்தாள்.

ஒருவேளை ஓடிப் போனவளைப் பற்றி ஏன் இனியும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று அவர் மகனை இரண்டாவது திருமணத்திற்கு வற்புறுத்திக் கொண்டிருந்தால்?

ஏனோ தனது அத்தை அந்த மாதிரியெல்லாம் நிச்சயம் செய்ய மாட்டார் என்று தான் சஞ்சனாவிற்கும் தோன்றியது.

அதோடு அதற்குத் தனது கணவனும் சம்மதிக்க வேண்டுமே என்றும்.

ஏன் சம்மதிக்காமல்...

ஓடிப்போன நடத்தை கெட்டவளைப் பற்றி நினைத்துக் கொண்டே காலத்தைத் தள்ளுமளவிற்கு அவனும் ஒன்றும் தன்மானம் இல்லாதவன் அல்லவே.

அப்படியானால்...

அவ்வளவுதானா? அனைத்துமே முடிந்து போய் விட்டதா?

இருக்காது என்று ஒரு மனம் சொல்ல, பின்னே தேடினால் உயிரை விட்டு விடுவேனென்று எழுதி வைத்து விட்டு வந்தவளுக்காகப் பார்த்துக் காத்துக் கொண்டிருப்பார்களாக்கும் என்று இன்னொரு மனம் கேட்டது.

பாவம், நல்ல பெண்ணென்று தன்னை மருமகளாக்கிக் கொண்டவர்களுக்குத் தான் செய்வது எந்த வகையில் நியாயமாகும் என்றும்.

எதுவானாலும் அவர்களிடமும் தான் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வந்திருக்க வேண்டுமோ என்றும்.

எல்லாம் சரிதான். ஆனால் அதைத் தனது கணவன் விரும்பவில்லையே!

தன்னுடைய கேவலமான நடத்தையைப் பற்றியெல்லாம் அவனுடைய பெற்றவர்களுக்குத் தெரிய வேண்டாம் என்றானே.

எனக்குத்தான் இவற்றையெல்லாம் சகித்துக் கொண்டு போக வேண்டுமென்று தலைவிதி என்றுகூட.

சற்றே இளகத் தொடங்கியிருந்த மனதைப் பழையபடி கல்லாக்கிக் கொண்டாள் சஞ்சனா.



பட்டாலும் புத்தி வராத ஜென்மம் என்பார்களே, அதற்குத் தான் சரியான உதாரணமோ என்று கூட விரக்தியுடன் சிரித்துக் கொண்டாள்,

அதற்குப் பிறகு தேவையற்ற எண்ணங்களுக்குச் சஞ்சனா துளியும் இடம் கொடுத்தாள் இல்லை.

அப்படிக் கொடுத்துவிட்டுக் கஷ்டப்படுவதற்கு மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு போய் விடுவது - அது மிகவும் சிரமமே என்றாலும் - எவ்வளவோ மேல் என்ற முடிவுக்கு வந்து அதன்படி நடக்கவும் தொடங்கி விட்டிருந்தாள்.

மேலும் இரண்டு மாதங்கள் சென்றிருந்தன.

இப்பொழுது சஞ்சனாவுடைய சூல் எட்டு மாதங்களைக் கடந்திருந்தது.

தாயின் கவலைகளைப் பற்றியெல்லாம் சிறிதும் அறியாமல் குழந்தை நாளுக்கு நாள் வயிற்றுக்குள் ஆரோக்கியமாக வளர்ந்து கொண்டே வந்தது.

இடையில் சந்தோஷமான விஷயமொன்றும் நடந்தது.

சஞ்சனாவின் தோழியான அஞ்சலிக்குத் திருமணம் நிச்சயமாகி விட்டிருந்தது.

திருமணத்திற்கு இன்னும் மூன்று மாதங்கள் இருந்தாலும், அப்பொழுதிருந்தே திருமணக் களை கட்டத் தொடங்கி விட்டிருந்தது.

அஞ்சலிக்குத் தேவையான துணி நகைகளையெல்லாம் வாங்குவதற்கு அவளுடைய விருப்பத்தின் பேரில் தானும் உடன் சென்றாள் சஞ்சனா.

தனக்காக எவ்வளவோ செய்திருக்கும் தோழிக்காக அவளும் தன்னால் ஆனதை ஆசையுடன் செய்தாள்.

அவளுடைய வருங்காலக் கணவனின் போட்டோவைக் கொண்டு வந்து காட்டிய போது அஞ்சலியின் முகத்தில் தெரிந்த வெட்கத்தில், கேலி பேசிய அவளை ஒருவழி செய்து விட்டிருந்தாள் சஞ்சனா.

தன்னால் இந்த அளவு சிரிக்க முடியும் என்பதைகூட அப்பொழுதுதான் தெரிந்து கொண்டாள்.

வழக்கம்போலச் சஞ்சனாவுடன் அவளுடைய அந்த மாத உடல் பரிசோதனைக்கு வந்திருந்தாள் அஞ்சலி.

இப்பொழுது ஒரு மாதமாக அவளுடைய பரிசோதனை மாதத்திற்கு இரண்டு முறை ஆகி விட்டிருந்தது.

எட்டு மாதங்கள் முடிவடைந்திருந்த நிலையில், முன்னைப் போல ஓடியாடி வேலை செய்ய முடியாமல் சிரமமாக உணர்ந்தாள் சஞ்சனா.

அதோடு பிரசவத்திற்கு இன்னும் மூன்று வாரங்களே இருப்பதால் எப்பொழுது வேண்டுமானாலும் பிரசவ வலியை எதிர்பார்க்கலாமென்று மருத்துவரும் சொல்லி விட்டிருந்ததில், தனிமையில் எப்படி அனைத்தையும் சமாளிக்கப் போகிறோமென்று மனதிற்குள் மிகவும் பயந்து போயிருந்தாள்.

ஆனால் அவள் அதைத் துளியும் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

ஏற்கெனவே தனக்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் தோழியையும் அவளுடைய திருமண வேலைகளைப் பார்க்க விடாமல் செய்து விடக் கூடாதென்று முயன்று தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டாள்.

தனக்கென்று அப்பொழுது இருக்கும் ஒரே துணையான அஞ்சலியிடமும் எதையும் பகிர்ந்து கொள்ள முடியாது போனதில் மிகவும் தனிமையாக உணர்ந்தாள்.



அதனால் இப்பொழுதெல்லாம் கணவனின் போட்டோவை அருகில் வைத்துக் கொண்டபடி தான் தூங்கப் படுக்கைக்கே சென்றாள்.

ஆனால் தூக்கத்திற்கும் அவளைப் பிடித்தாலல்லவா?

அவ்வப்பொழுது மட்டும் வந்து நானும் இருக்கிறேனென்று சொல்லிவிட்டுப் போனது.

மருத்துவரிடம் கேட்டதற்கு, பிரசவ நாள் நெருங்கும் சமயம் அப்படித்தான் இருக்குமென்று சொல்லி விட்டிருந்தார்.

மேலும் ஒரு வாரமும் கூட சென்றிருந்தது.

இரவில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தவள் திடீரென்று யாரோ சாட்டையால் இடுப்பில் அடித்தது போன்ற வலியில் தூக்கம் கலைந்து விழித்திருந்தாள்.

அது என்ன வலி?

இல்லை, வெறும் பிரமையோ?

இப்பொழுது சில நாட்களாக எந்நேரமும் வலியைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பதால் அப்படித் தோன்றியிருக்குமோ?

ஆனாலும் அவளையறியாமலேயே மிரட்சியுடன் எழுந்து அமர்ந்து விட்டிருந்தாள்.

ஒருவேளை அது பிள்ளை வலியோ என்று நினைத்தவள் உடனே அப்படியிருக்காது என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

குழந்தை காலால் எட்டி உதைத்திருக்குமாக இருக்கும், அதுதான் இப்பொழுதெல்லாம் தனது சேஷ்டைகளை அதிகமாகக் காட்ட ஆரம்பித்திருக்கிறதே என்று புன்னகையுடன் மீண்டும் படுத்துக் கொண்டாள்.

எல்லாம் சரிதான். ஆனால் இன்றில்லா விட்டாலும் இனி எப்படியும் இரண்டு வாரங்களுக்குள் பிள்ளை வலியை எதிர்கொண்டு தானே ஆக வேண்டும்.

அந்த எண்ணம் தோன்றியதற்குப் பிறகு தூக்கம் முழுமையாகக் கலைந்து போய் விட்டிருந்தது.

எப்பொழுது குழந்தையைப் பார்ப்போம், கையிலெடுத் துக் கொஞ்சுவோம் என்ற ஆவல் எப்பொழுதும் போல அவளைப் பரபரக்கச் செய்தது.

சிறிது நேரம் தான் சென்றிருக்கும்.

சற்று முன்னர் வந்தது போலவே மீண்டும் தோன்றிய அந்த வலியில், அது பிரசவ வலிதான் என்பது சந்தேகத் திற்கு இடமில்லாமல் தெளிவானது.

கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

இரவு மணி இரண்டு.

கடவுளே! இந்த நேரத்தில் என்ன செய்ய முடியுமென்ற பயத்தில் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ள போகப்போக வலி அதிகமானதோடு வலி வரும் நேர இடைவெளியும் குறைந்து கொண்டே வந்தது.

ஐந்து மணி வரை எப்படியோ தாக்குப் பிடித்தவள் அதற்குப் பிறகு மொபைலை எடுத்து அஞ்சலியை அழைத்து விட்டிருந்தாள்.

அடுத்த பத்து நிமிடங்களுக்குள் அவளும் காருடன் வந்திருக்க, அதற்குள் தனக்குத் தெரிந்த அளவிற்கு அனைத்தையும் எடுத்து வைத்துக் கொண்டு தயாராக இருந்தாள் சஞ்சனா.

அஞ்சலியின் மாமா பெண்ணுக்குத் திருமணமென்று அவளுடைய பெற்றவர்கள் முதல் நாளே ஊருக்குக்



கிளம்பிச் சென்றிருக்க, அஞ்சலி தானே காரை எடுத்துக் கொண்டு வந்திருந்தாள்.

இதை எதிர்பார்த்துத் தான் அஞ்சலி அந்தப் பய ணத்தைத் தவிர்த்து விட்டிருந்ததும். அது எவ்வளவு பயனுள்ளதாக முடிந்திருக்கிறதென்று மனதிற்குள் கடவுளுக்கு நன்றி சொல்லிக் கொண்டாள்.

தோழியின் அமைதியான கதறலைப் பார்த்துப் பயந்து கூடப் போய் விட்டிருந்தாள் அஞ்சலி.

இருவருமே அனுபவம் இல்லாதவர்கள் என்பதால், சரியாக எதைச் செய்ய வேண்டுமென்று ஒன்றுமே தெரிந் திருக்கவில்லை.

ஆனால் அவை எல்லாவற்றிற்கும் முன்னதாகத் தோழியை முதலில் மருத்துவமனைக்குக் கொண்டு போய்ச் சேர்த்து விட வேண்டுமென்று சஞ்சனாவுடன் காரை ஸ்டார்ட் செய்திருந்தாள்.

வழியிலேயே சஞ்சனாவைப் பார்த்துக் கொண்டிருக் கும் மருத்துவருக்கும் மொபைலில் அழைத்து, தாங்கள் வந்து கொண்டிருப்பதைத் தெரிவித்து விட்டிருந்தார்கள்.

அதில் கையெழுத்து, இதில் பிரச்சனை என்றெல்லாம் பிரசவ சமயத்தில் எதுவும் வந்து விடக் கூடாதென்று ஏற்கெனவே மருத்துவரிடம் தனது தோழியின் நிலை பற்றி அனைத்தையும் எடுத்துச் சொல்லி விட்டிருந்தாள் அஞ்சலி.

அதுவும் இப்பொழுது எவ்வளவு பயனுள்ளதாக அமைந்து விட்டிருக்கிறதென்று நினைத்துக் கொண்டாள்.

தாங்கள் மருத்துவமனையைச் சென்று அடைவதற்குள் ளேயே தயாராக வந்து காத்திருந்த சஞ்சனாவின் டாக்டர்

வந்து அவளை அழைத்துக் கொள்ள, அப்பாடா என்று மனதிற்குள் நிம்மதியுடன் நினைத்துக் கொண்டாள் அஞ்சலி.

வலியைத் தாங்கிக் கொள்ள முடியாமல் கலங்கிய கண்களுடன் தன்னிடம் சொல்லிக் கொண்டு சென்ற தோழியை என்ன சொல்லி ஆறுதல் படுத்துவதென்று அதில் அனுபவமில்லாத அஞ்சலிக்கும் தெரிந்திருக்கவில்லை.

ஆனாலும் ஆறுதல் சொல்லித்தான் அனுப்பினாள். நாம் என்ன ஆறுதல் வார்த்தைகள் சொல்லி என்ன, முக்கியமான சொந்தங்கள் அருகில் இல்லாத போது என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது அஞ்சலிக்கு.

அது தான் வலியின் உச்சமென்று நினைத்துக் கொண்டே உள்ளே சென்ற சஞ்சனாவிற்கு, அந்த வலியெல்லாம் ஒன்றுமே இல்லை என்பது அதற்குப் பிறகுதான் புரிந்தது.

வலியைக் குறைத்துக் காட்டுவதற்காகப் புன்னகையுடன் தன்னிடம் டாக்டர் பேசியதெல்லாம் அவளுடைய காதுகள் வரை கூடச் சென்றிருக்கவில்லை. பிறகு எங்கே பதில் சொல்வது?

அந்த அளவிற்கு வலியில் துடித்துப் போய் விட்டிருந்தாள்.

பிள்ளை வலி இவ்வளவு கடுமையானதாக இருக்குமென்று அவள் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

அடுத்த இரண்டு மணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு சஞ்சனாவின் செல்வன் பூமிக்கு வந்திருந்தான்.

ஆம், அவள் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்திருந்தாள்.



தனது குழந்தையின் அழுகை அமுத கீதமாய் ஒலிக்க, அதை அளவு கடந்த ஆவலுடனும், சந்தோஷத்துடனும் பார்த்தாள் சஞ்சனா.

# 13

மூன்றாம் நாள் குழந்தையுடன் வீடு வந்து சேர்ந்திருந்தாள்.

சுகப்பிரசவத்திற்குச் செலவு குறைவாகத்தான் ஆனதென்றாலும் அன்று வரை வேலைக்குப் போய் அவள் சேர்த்திருந்த பணம் முழுவதும் செலவாகி விட்டிருந்தது.

இனி குறைந்தது மூன்று மாதங்களுக்கேனும் வேலைக்குச் செல்ல முடியாதென்பதால் கையிலிருக்கும் நான்கு வளையல்களில் இரண்டை விற்று அடுத்த சில மாதங்களுக்கான மளிகை மற்றும் இதரப் பொருட்களை வாங்கிக் கொண்டு மீதிப் பணத்தைக் கையில் இருப்பு வைத்துக் கொண்டாள்.

மலையாகத் தெரிந்த பணப் பிரச்சனையும் தீர்ந்து போயிருக்க, அதற்குப் பிறகு தனது நேரமனைத்தையும் குழந்தையின் அருகிலேயே செலவிட்டாள்.

குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு அதைப் பார்த்துக் கொண்டே இருந்ததில் மணிக்கணக்கில் நேரம் போவது கூடத் தெரியாது போயிற்று.

அந்த அளவிற்குக் குழந்தையின் அழகில் சொக்கிப் போய் விட்டிருந்தாள் சஞ்சனா.

நல்ல சந்தன நிறத்தில், தலை கொள்ளா முடியுடனும், குட்டி குட்டியான கை கால்களுடனும் பெரும்பான்மை நேரம் தூக்கத்திலும், மீதி நேரம் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டுமிருந்த குழந்தையைப் பார்த்துக் கொண்டே இருந்ததில் பசி தூக்கம் கூடத் தோன்ற வில்லை.

திடீரென்று பெற்றவளின் கண் தான் குழந்தைக்குப் படுமென்று யாரோ சொல்லக் கேட்டது நினைவுக்கு வந்ததில் மிகவும் பயந்து போய் விட்டிருந்தாள்.

அதற்குப் பிறகு அவசியத்திற்குக் குழந்தையைக் கையிலெடுக்கக் கூடத் தயக்கம் வந்து விட்டிருந்தது.

ஆனால் அதெல்லாம் சில நாட்கள் தான். அதற்குப் பிறகு மீண்டும் குழந்தையின் அழுகை சிரிப்பு, ஏன் ஒரு சிறிய அசைவிற்கும் கூட ஆயிரமாயிரம் கற்பனைகள் செய்து ரசிக்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

இதையெல்லாம் பார்க்க அதனுடைய தந்தைக்குக் கொடுத்து வைக்கவில்லையே என்று எப்பொழுதும் போல மனதிற்குக் கஷ்டமாக இருக்கும். கூடவே அத னுடைய தாத்தா பாட்டிக்கும்.

அந்த மாதிரி சமயங்களில் மட்டும் தான் ஏதோ மிகப் பெரிய தவறைச் செய்து கொண்டிருப்பதைப் போல மன மும் பாரமாகி விடும்.

ஒரு விஷயம் மட்டும் சஞ்சனாவை மிகுந்த வியப்பில் ஆழ்த்தியிருந்தது.

குழந்தையின் மார்பில் அதனுடைய தந்தையைப் போலவே, ஏன்... துல்லியமாக அதே இடத்தில் இருந்த மச்சம் தான் அது.



அதைப் பற்றி சற்று யோசிக்கத் தொடங்கினாலும் கூட கண்கள் அதன் பாட்டிற்குக் கலங்கி விடுவதும் வழக்கமாகி விட்டிருந்தது.

ஒரு மாதம் சென்றிருந்தது.

இப்பொழுதெல்லாம் பசி தூக்கம் என்று குழந்தை எதற் காக அழுகிறதென்பதை ஓரளவு புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டிருந்தாள். கூடவே பயமின்றிக் கையாளவும்.

அதற்குள் நான்கு முறை குழந்தையை எடுத்துக் கொண்டு மருத்துவரிடம் சென்று வந்திருந்தாள்.

அஞ்சலி தானும் குறைந்தது வாரத்திற்கு நான்கு முறை யேனும் வந்து தாய் சேயைப் பார்த்து விட்டுச் சென்று கொண்டிருந்தாள்.

அப்படி வரும் போதெல்லாம் குழந்தையை ஆசையுடன் மடியில் தூக்கி வைத்துக் கொள்வதோடு அப்படியே மணிக் கணக்கில் ஏதேதோ பேசிக் கொண்டு அமர்ந்து விடுவதும் கூட வழக்கமாகி விட்டிருந்தது.

ஆனால் இப்பொழுது சில நாட்களாக அஞ்சலியும் கல்யாண வேலையில் மும்முரமாகி விட்டிருந்ததால் வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே வந்து சென்றாள்.

என்னதான் உயிர்த்தோழி என்றாலும் ஒரு விஷயத்தைச் சஞ்சனாவிடம் மறைத்து விட்டிருந்தாள் அஞ்சலி.

தனது வருங்காலக் கணவன் சஞ்சனாவின் பெரிய நாத்தனாருடைய கணவனுக்குச் சொந்த அத்தை மகன் என்பது தான் அது.

. அதைச் சொன்னால் சஞ்சனா நிச்சயம் திருமணத் திற்கு வர மாட்டாள் என்பது தெரிந்து அதை மட்டும் தனது தோழியிடம் மறைத்து விட்டிருந்தாள் அஞ்சலி.

மறைத்து விட்டாள் என்பதை விடச் சொல்லாமல் விட்டு விட்டாள் என்பது மிகவும் சரியான வார்த்தை.

கடவுளின் புண்ணியத்தில் தான் நினைப்பது நடக்க வேண்டுமென்று மனதார நினைத்துக் கொண்டாள் அஞ்சலி.

அதனால் சஞ்சனாவைத் திருமணத்திற்கு வர வைத்துவிடும் முயற்சியில் அப்பொழுதிருந்தே இறங்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

குழந்தையின் சாக்கில் எங்கே திருமணத்திற்கு வராமல் விட்டு விடுவாளோ என்ற பயத்தில் நீ கட்டாயம் வர வேண்டும். இல்லையென்றால் தாலியே கட்டிக் கொள்ள மாட்டேனென்று மீண்டும் மீண்டும் சொல்லி சஞ்சனா தனது திருமணத்திற்கு வருவதை உறுதி செய்து கொண்டாள்.

அஞ்சலி அந்த அளவிற்குச் சொல்லியிருந்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால் குழந்தையைக் கையோடு தூக்கிக் கொண்டு - அது சிரமமே என்றாலும் கூடத் - தானும் தோழியின் திருமணத்திற்குச் சென்று தான் ஆக வேண்டுமென்ற முடிவுக்கு சஞ்சனாவும் ஏற்கெனவே வந்து விட்டிருந்தாள்.

திருமணத்திற்கு இன்னும் மூன்று நாட்களே இருந்த நிலையில் சஞ்சனாவைச் சந்திக்க வந்திருந்தாள் அஞ்சலி.

"வா அஞ்சு, புதுப் பொண்ணு இப்படி ஊர் சுத்தலாமா?" என்று வரவேற்றாள் சஞ்சனா.

"எல்லாம் நேரம்டி. பாவமே, தைச்சு வந்த துணியக் கல்யாணத்துக்குப் போட்டுட்டு வர்றதுக்கு மேடம் கிட்டக் குடுத்துட்டுப் போகலாம்னு வந்தா நீ என்னயே கேள்வி கேக்கறியா?" என்று பொய்க்கோபத்துடன் கேட்டாள் அஞ்சலி.



"அது சரிதான். இந்த ராஜ தரிசனமெல்லாம் இன்னும் மூணு நாளைக்கு மட்டும் தான! அதுக்கப்புறம் நான் நினைச்சாலும் உன்னக் கைல புடிக்க முடியுமா?" என்று கேட்டாள் சஞ்சனா.

"அது என்னவோ சரிதான். என்னடா செல்லம்," என்று குழந்தையைத் தூக்கிக் கொஞ்சிய அஞ்சலி, "சஞ்சு, இப்பப் பாப்பா நல்லா ஊறிடுச்சு இல்ல?" என்று சந்தோஷமாகக் கேட்டாள்.

"அது சரிதான்மா," என்று சொன்ன சஞ்சனாவிடம், "ஆனா, நீ ஆள் பாதியாயிட்டயே?" என்று கேட்டாள்.

"எல்லாம் இவனாலதான்!" என்று தனது செல்வனைக் கைகாட்டிச் சொன்ன சஞ்சனா, "நான் நல்லாத் தூங்கியே எவ்வளவு நாளாச்சு தெரியுமா? எப்ப தூக்கம் கலைஞ்சு எழுந்துடுவானோ, பசிக்கு அழுவானோன்னு மனசுக்குள்ள அடிச்சுக்கும் அஞ்சு," என்று சற்று பயத்துடன் சொன்ன தோழியைப் பார்த்தாள் அஞ்சலி.

எல்லாம் சில நாள் தான் தோழியே. அதுக்கப்புறம் உன்னோட எல்லாப் பிரச்சனையும் சரியாயிடும் என்று மனதிற்குள் சொல்லிச் சிரித்துக் கொண்டாள்.

இதோ இதோ என்று ஆசையுடன் சஞ்சனா எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவளுடைய தோழி அஞ்சலியின் திருமண நாளும் அன்று இனிதே விடிந்தது.

திருமணத்திற்குச் செல்வதற்காக அன்று காலையிலேயே தனக்கும் குழந்தைக்குமாக அனைத்தையும் தயாராக எடுத்து வைத்து விட்டிருந்தாள்.

அன்றைய நாளில் தான் சற்றும் எதிர்பார்க்காத சம்பவங்களெல்லாம் நடக்கப் போகிறது என்பதை அவள் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

தனியாக வந்து விட்டதற்குப் பிறகு அவள் எங்குமே முக்கியமாக விசேஷங்களுக்குச் சென்றதில்லை என்பதால் திருமணத்திற்குச் செல்வதை நினைத்து மனதிற்குள் மிகவும் தயக்கமாகவும் இருந்தது.

ஆனாலும் அஞ்சலிக்காக அது எவ்வளவு சிரமமானதென்றாலும் கூடப் போய்த்தான் ஆக வேண்டுமென்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

திருமண மண்டபம் வீட்டிற்கு மிக அருகில் தான் என்பதால் தோழி தனக்காக அனுப்புவதாகச் சொன்ன காரை மறுத்து விட்டுத் தான் எப்பொழுதும் செல்லும் கால் டேக்ஸியையே வரவழைத்திருந்தாள்.

அன்று காலையிலிருந்தும் கூட என்ன திருமணத்திற்கு வருவதற்குத் தயாராகி விட்டாயா என்று இரண்டு முறை அழைத்துக் கேட்டு விட்டிருந்த தோழியின் செய்கையில் சற்று முன்னதாகவே கூடக் கிளம்பி விட்டிருந்தாள் சஞ்சனா.

அவள் மண்டபத்திற்கு வந்து சேர்ந்திருந்த போது, அவ்வளவாக யாரும் வந்திருக்கவில்லை.

அது மிகப்பெரிய மண்டபம் என்பதோடு திருமணத்திற்கும் இரண்டு பக்கங்களில் இருந்துமே நிறையப் பேரை அழைத்திருந்ததால் இனிமேல் தான் அனைவரும் வருவார்களாக இருக்குமென்று நினைத்துக் கொண்டே, குழந்தைக்குப் பசியாற்ற வசதியாக இருக்கட்டுமென்று தோழி தனக்காக ஒதுக்கிக் கொடுத்திருந்த அறைக்கு முதலில் வந்தாள்.



குழந்தையின் பொருட்கள் அனைத்தும் அடங்கிய பையை அந்த அறையில் வைத்துப் பூட்டிவிட்டு சாவியைக் கையிலெடுத்துக் கொண்டு குழந்தையுடன் வெளியே அதாவது மணவறைக்கு முன்பாக இருந்த வரிசையில் சென்று அமர்ந்து விட்டிருந்தாள்.

அப்பொழுது தான் ஒவ்வொருவராக வந்து கொண்டிருப்பது தெரிய மணமக்களும் இன்னும் மணவறைக்கு வந்திருக்காததைக் கண்டாள்.

குழந்தை நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்க, அதை மார்போடு அணைத்தவாறு வைத்துக் கொண்டாள்.

விசேஷம் முடியும் வரை இப்படியே தூங்கிக் கொண்டே இருந்து விட்டானென்றால் பரவாயில்லையென்று நினைத்துக் கொண்டாள் சஞ்சனா.

ஒரு அரை மணி நேரம் சென்றிருக்க பாதி மண்டபம் நிறைந்திருந்தது.

குழந்தை நன்றாகத் தூங்கிக் கொண்டே இருக்க, நிம்மதியுடன் சஞ்சனா தானும் அப்படியே அமர்ந்து விட்டிருந்தாள்.

# 14

''அம்மா.''

அகிலா அழைக்க என்னவென்று கேட்டார் கலைவாணி.

''சஞ்சனா...''

ஏதோ சொல்ல வந்துவிட்டுப் பாதியில் நிறுத்தி விட்டிருந்த மகளிடம், "என்னமா என்ன?" என்று ஆவலுடன் கேட்டார்.

"இல்ல சஞ்சனா மேல உங்களுக்குக் கோபம் நிறைய இருக்கும். இல்லையாம்மா?"

"பின்ன இருக்காதா?" என்று பட்டென்று கேட்ட தாயைச் செய்வதறியாது பார்த்தாள் அகிலா.

"ஆனா அதுக்கு எனக்குத் தகுதி இருக்கான்னே தெரியலையேம்மா!" என்று மீண்டும் சொன்னவரை இப்பொழுது புரியாமல் பார்த்தாள்.

"ஆமாம்மா. பாவம் அந்தத் தங்கம் வேற யாரயாவது கல்யாணம் பண்ணிக்கிட்டு நிம்மதியா இருந்திருக்கும். ஆனா அதுக்கு விடாம பெரிய தப்பு பண்ணிட்டேன்னு நினைக்கும் போதுதான் மனசுக்கு ரொம்ப வேதனையா இருக்குமா."

............

"கல்யாணத்தப்ப யாருக்கு வந்த வினையோன்னு சுரேந்திரன் இருந்தப்பவே நாங்களும் கொஞ்சம் சுதாரிச்சிருக்கணும்னு நினைக்கறேன். இப்ப எல்லாமே தல முழுகிப் போயிடுச்சே."

என்ன, தனது தாய் புதிதாக எதையெதையோ சொல்கிறாரென்று அகிலாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

"சுரேனையும் எங்களால வெளிப்படையா எதையும் கேக்க முடியல. ஏன் மனசுக்குள்ள அவன் இப்பப் பட்டுட்டிருக்கற வேதனையக் கண் கொண்டு பாக்கக் கூட முடியல. அந்த அளவுக்குத் தான் ரொம்பப் பெரிய



தப்பப் பண்ணிட்டோமேன்னு மனசுக்குள்ள மருகிட்டிருக்காம்மா...

"அதெல்லாம் சரி, நீ ஏன் சஞ்சனாவப் பத்திக் கேட்ட? ஏன் அவளப் பத்தி ஏதாவது தெரிஞ்சதா?"

தாயின் முகத்தில் தெரிந்த ஆவலிலும் ஆசையிலும் அப்படியே உண்மையைச் சொல்லி விட்டிருந்தாள் அகிலா.

"ஆமாம்மா."

"என்னமா சொல்ற?"

"ஆமாம்மா. இப்ப நாம கிளம்பிட்டிருக்கறோமே கல்யாணத்துக்கு, அங்க அந்த மண்டபத்துல வெச்சே நாம சஞ்சனாவப் பாக்கலாம்."

"அப்படியா?"

"அது மட்டுமில்லமா, உங்களோட பேரனையும் சேத்தே பாக்கலாம்."

"ராமா, என்னமா நீ சொல்றதெல்லாம் உண்..."

"நூறு சதவிகிதம் உண்மைதாம்மா."

மகள் சொன்னதைக் கேட்டதற்குப் பிறகு கலைவாணிக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை.

செய்வதறியாத ஆச்சரியத்துடன் அப்படியே நின்றுவிட்டிருந்தார். "கடவுளே! எப்படியோ கண் திறந்தாயே," என்று கண்ணீர் மல்கத் தனக்குத் தானே சொல்லிக் கொண்டார்.

நடந்து முடிந்ததைப் பற்றியெல்லாம் இனிமேல் நினைக்கவே கூடாது. இனி வரப் போகும் நாட்களிலாவது அனைவரும் - முக்கியமாக மகனும் மருமகளும் - சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று மனதார வேண்டிக் கொண்டார்.

ஆனால் மகன்...

அவன் இன்னும் கூட மனதிற்குள் எதையாவது வைத்துக் கொண்டிருந்தால்?

நிச்சயம் மாட்டான்.

பாவம், தவறு செய்து விட்டதை உணர்ந்து தினம் தினம் அவன் மனதிற்குள் படும் துன்பம் தான் கண்கூடாகவே தெரிகிறதே.

"சுரேனுக்கும், சஞ்சுவுக்கும் என்ன பிரச்சனைன்னு உங்களுக்கு, அதாவது சுரேன் ஏதாவது உங்ககிட்ட சொன்னானாமா?"

"அதுசரி, அப்புறம் உலகம் தலைகீழாயிடாது? சுரேன் மத்தவங்ககிட்டே மனசு விட்டுப் பேசறவனா இருந்தா இப்பப் பிரச்சனை இந்த அளவுக்குப் போயிருக்காதேம்மா."

............

"சஞ்சு எங்க இருக்காளோ எப்பிடி இருக்காளோன்னு ஒரு தடவ மட்டும் நான் ரொம்பவும் முடியாம அழுதப்ப, வைரக் கல்லக் கண்ணாடிக் கல்லா நினைச்சு நான் எப்படியெப்படியோ நடத்துக்கிட்டேனுங்கற மாதிரி ஏதோ சொல்ல வந்தான். ஆனா பெரிய ரோஷக்காரனாச்சே! அதுக்கு மேல வாய் விடாம கிளம்பிப் போய்ட்டான்.

"எது எப்படியோ அந்தத் தங்கத்து மேல மட்டும் எந்தத் தப்பும் இருக்கவே இருக்காதுமா."

"அத வேற நீங்க சொல்லணுமாம்மா? சஞ்சுவால அதிர்ந்து கூட ஒரு வார்த்தை பேச முடியாதே! சின்ன வயசுலிருந்தே பாத்துட்டுத் தான இருக்கோம்," என்றாள் அகிலா.



கலைவாணிக்கு உடல் மனம் எல்லாமே பரபரத்தது. ஆனாலும் அவள் வீட்டை விட்டுக் கிளம்பிப் போனது தவறுதான்.

மருமகளைப் பார்க்கப் போவதே பெரிய சந்தோஷமென்னும் போது கூடவே பேரக் குழந்தையையும் பார்க்கப் போகிறார் என்றால் பிறகு சொல்லவும் வேண்டுமா?

எப்படியோ இனியாவது மகனுடைய துன்பங்களுக்கெல்லாம் ஒரு விடிவு கிடைத்தால் அதைவிட வேறு என்ன வேண்டுமென்று நினைக்கத் தோன்றியது.

ஏன், அவன் சிரித்ததைப் பார்த்துக் கூட வருடத்திற்கும் மேலாகி விட்டதே.

சரியாக அதாவது நேரத்திற்கு உண்ணாமல், அது மட்டுமா? நடுஜாமம் வரை கால் தேய நடந்து அதற்குப் பிறகு அந்த அசதியில் அல்லவா தூங்கவும் முயற்சி செய்கிறான் போலிருக்கிறது.

ஏன், இதையெல்லாம் தனக்குத் தெரிந்ததாகக் கலைவாணியும் மகனிடம் காட்டிக் கொள்ளவில்லையே.

மகனிடமே அப்படியென்னும் போது மற்றவர்களிடம் மூச்சுக் கூட விட்டிருக்கவில்லை.

தொழிலைப் பிரமாதமாகப் பார்த்துக் கொள்கிறான். வருமானமும் கூட இப்பொழுதெல்லாம் பல மடங்கு அதிகரித்து விட்டிருப்பதால் இனிமேல் அனைத்துக் கடைகளையும் மகனிடமே ஒப்படைத்து விடலாமென்று இருக்கிறேனென்று மட்டும் கணவன் ஒருமுறை சொன்னது நினைவிற்கு வந்தது.

ஆனாலும் என்ன, அவனளவில் துளியும் நிம்மதியில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறானே.

என்னதான் மிகவும் தன்மானம் பார்ப்பவனென்றாலும் இவ்வளவு நடந்திருந்தும் கூடத் தங்களிடம் ஒரு வார்த்தை சொல்லவில்லையே என்ற ஆதங்கம் தான் பெற்றவர்களுக்கு.

என்ன, அவனுடைய மனைவியைத் தவறாக யாரும் எதையும் எண்ணி விடக் கூடாது என்னுமளவிற்குச் சொன்னான். அவ்வளவே.

கடவுளே! மகனைப் பற்றி மட்டும் இவ்வளவு யோசிக்கிறோமே! மருமகள்...

பாவம்! அவன் தனிமையில் எத்தனையெத்தனை துன்பங்களைக் கடந்து குழந்தையைப் பெற்றெடுத்திருக்க வேண்டும்.

ரோஷத்தில் அவளும் மகனையுமல்லவா மீறி விட்டாள்.

அவளின் மீதும் எந்தத் தவறும் இல்லையென்றாலும் கூட இந்த மாதிரி ஒரு சமயத்திலும் கூட யாருடைய உதவியையும் நாடாமல் தனித்திருந்து சமாளித்துவிட அவளால் எப்படி முடிந்தது?

அதற்கு எவ்வளவு மனத் தைரியம் இருந்திருக்க வேண்டும்.

''கிளம்பலாமா?''

சுரேந்திரன் வர, ''சரிதான், நாங்க ரெண்டு பேரும் தயார்,'' என்று அகிலாவும், கலைவாணியும் வந்தனர்.

நிகிலாவை ஊரில் விட்டுவிட்டு மற்றவர்கள் மட்டும் இந்தத் திருமணத்திற்காக முதல் நாளே கிளம்பி வந்திருந்தார்கள்.

அவர்கள் இப்பொழுது வந்து தங்கியிருப்பதும் அகிலாவுடைய புகுந்த வீட்டுச் சொந்தங்களில் ஒருவருடைய வீடுதான்.



ஊரிலிருந்து அதிகாலையிலேயே வந்து சேர்ந்திருந்தவர்கள் இப்பொழுது திருமணத்திற்குக் கிளம்பியிருந்தார்கள்.

தங்களுக்கே இவ்வளவு தெரிந்திருக்கும் போது இது சுரேந்திரனுக்கும் தெரியாமல் இருக்குமா என்று தாய் - மகளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தேவேந்திரன் சொந்த ஊரில் ஒரு நிலப் பிரச்சனையென்று கிளம்பிச் சென்றிருக்க இவர்கள் மூவரும் மட்டுமே கிளம்பி வந்திருந்தார்கள்.

அகிலாவின் கணவன் தான் மாப்பிள்ளைத் துணையென்பதால் அவர் முதல்நாளே மாப்பிள்ளையின் வீட்டிற்குக் கிளம்பி வந்திருந்தார்.

எப்பொழுதும் போல உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் காரை ஓட்டி வந்த மகனைப் பார்க்கவே கலைவாணிக்குச் சற்று பயமாகக் கூட இருந்தது.

எது எப்படியானாலும் மருமகளையும் பேரனையும் உடன் அழைத்து வந்து விடுவதில் மட்டும் அவர் மிகவும் உறுதியாக இருந்தார்.

மணமக்கள் மணவறைக்கு வருவதற்கு முன்பே குழந்தை பசிக்கு அழுததால் அங்கிருந்து எழுந்து அவளுக்கென ஒதுக்கப்பட்ட அறைக்குச் சென்றிருந்தாள் சஞ்சனா.

# 15

கார் திருமண மண்டபத்தை வந்தடைந்திருக்க, ''சரி. நீங்க ரெண்டு பேரும் இறங்கிக்கோங்க. நான் காரப் பார்க்

பண்ணிட்டு வர்றேன்,'' என்று பெண்கள் இருவரையும் இறங்கிக் கொள்ளச் சொன்னான் சுரேந்திரன்.

''சரி சுரேன். நீ வா. நாங்க ரெண்டு பேரும் முதல்ல உள்ள போறோம்,'' என்று அவர்கள் இருவரும் உள்ளே வந்திருந்தார்கள்.

அகிலாவை விடக் கலைவாணிக்குத் தான் என்ன வென்று சொல்ல முடியாத ஒருவிதப் படபடப்பில் உள்ளம் அடித்துக் கொண்டது.

ஒருவேளை இங்கு மருமகளைப் பார்க்க முடியா விட்டால்?

இல்லையில்லை. அகிலா சொல்வதைப் போல அவ ளுடைய தோழியான மணமகளின் உதவியுடன் தான் இந்த ஒரு வருடத்தையும் கூட மருமகள் சமாளித்திருக் கிறாள் என்றால், அந்தத் தோழியின் திருமணத்திற்கு எப்படியும் வராமல் இருக்க மாட்டாளென்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டார்.

ஒருவேளை அப்படி மருமகள் வராமல் இருந்து விட் டிருந்தாலும் கூட மணப்பெண்ணிடமே விசாரித்துக் கொண்டு நாமே சென்றால் ஆயிற்று என்று தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டுபோய் அங்கு வரிசையில் போடப்பட்டிருந்த இருக்கைகளில் ஒன்றில் அமர்ந்து விட்டிருந்தார்.

ஆனால் அவருடைய கண்கள் மட்டும் கூட்டத்திற் குள் ஆவலுடன் அலை பாய்ந்து கொண்டிருந்தன.

அதற்குப் பிறகுதான் எங்கே தன்னுடன் உள்ளே வந்த மகளைக் காணவில்லையே என்று பார்த்தார்.

ஒருவேளை அவள் மருமகளைக் கண்டு கொண்டு விட்டாளோ...



''அம்மா.''

அகிலா வர, ''வாம்மா, எங்க போய்ட்ட?'' என்று கேட்டார்.

''கொஞ்சம் எங்கூட வர்றீங்களாம்மா?''

''என்னமா?'' என்று ஆவலுடன் எழுந்து வந்த தாயை அழைத்துக் கொண்டு நடந்தாள் அகிலா.

''எங்க போய்ட்டிருக்கோம்?''

''சஞ்சனாவைப் பாக்கறதுக்கு.''

நேராகச் சென்று சஞ்சனா இருந்த அறையின் கதவைத் தட்டியவர்களுக்கு மனம் படபடவென்று அடித்துக் கொண்டது.

பசியாறியிருந்த புத்திரனைத் தோளில் போட்டுத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்த சஞ்சனா யாராக இருக்குமென்று யோசித்துக் கொண்டே, ''வாங்க!'' என்று அழைத்தாள்.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தவர்களைப் பார்த்தவளுக்கு அப்படியே ஆச்சரியத்தில் வாயடைத் துப் போய் விட்டிருந்தது.

அதெல்லாம் சில வினாடிகள் தான். ''அத்தை...'' என்று கண்கள் கலங்க அழைத்தாள்.

''அகிலாக்கா...''

ஆனால் அதெல்லாம் கலைவாணியின் காதுகளில் விழுந்திருந்தால் அல்லவா?

வேகமாக வந்து மருமகளின் கையிலிருந்த பேரக் குழந் தையை ஆவலுடனும் ஆசையுடனும் வாங்கிக் கொண் டிருந்தவளின் கண்களும் நிறைந்து விட்டிருந்தன.

''சஞ்சு,'' என்ற அகிலாவை, ''அகிலாக்கா,'' என்று அழுகையுடன் பார்த்தாள் சஞ்சனா.

மனமே இல்லாமல் மகளிடம் பேரக் குழந்தையைக் கொடுத்துவிட்டு நிமிர்ந்தார் கலைவாணி.

தன்னைப் பார்த்த தனது அத்தையின் பார்வையைச் சந்திக்க முடியாத அளவிற்கு அவளுடைய கண்களும் கண்ணீரால் நிறைந்து விட்டிருந்தன.

''இப்படிப் பண்ணிட்டயேம்மா...''

''அத்தை...''

''எங்கள்ல யாராவது செத்துக் கித்துப் போயிருந்தாக் கூட உனக்குத் தெரியப்படுத்த முடியா...''

''ஐயோ! அத்தை...''

அதற்கு மேல் முடியாமல் தனது அத்தையின் கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுது விட்டிருந்தாள் சஞ்சனா.

அதே சமயம் கலைவாணியாலும் அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

பட்டுப் போன்ற மிருதுவான குழந்தையின் அழகில் மயங்கிப் போய் அதை ஆசை பொங்கப் பார்த்த வண்ணம் அப்படியே நின்று விட்டிருந்தாள் அகிலா.

சில நிமிடங்களில் தன்னைச் சமாளித்துக் கொண்டு கண்களைத் துடைத்துக் கொண்டே திரும்பி மகளைப் பார்த்தார்.

''என்னமா?''

''அவன வரச் சொல்றியா?''

தனது கணவனைத் தான் சொல்கிறாரென்று சஞ்சனாவுக்கும் புரிந்தது.



நெஞ்சு படீர் படீரென்று அடித்துக் கொள்ள, ''இப்பவா? வேண்டாம்மா,'' என்று மறுத்து விட்டிருந்த அகிலாவின் வார்த்தைகளில் தான் சற்று நன்றாக மூச்சுக் கூட விட்டாள் எனலாம்.

ஆனால் அதற்குப் பிறகு அவள் சொன்னதோ மீண்டும் வயிற்றைக் கலக்கியது.

''எப்படியும் சஞ்சுவோட ரூமுக்குப் போய் எல்லாத்தையும் காலி பண்ணிட்டுத்தான போகப் போறோம், அப்ப வேணும்னா...''

''அது சரிதான்மா,'' என்றவர், ''சரி. இனி நீ போ. மாப்பிள்ளை தேடப் போறார்,'' என்று மகளை அனுப்பினார்.

''நீயும் வேணும்னாப் போம்மா,'' என்று அவர் மருமகளைப் பார்க்க, ''இல்ல அத்தை. நான் இங்கயே இருந்துக்கறேன்,'' என்று உடனே மறுத்து விட்டிருந்தாள் அவள்.

தன்னை அவர்களுடனேயே அழைத்துச் செல்லப் போவதாக அவர்கள் பேசிக் கொண்டதே சஞ்சனாவைப் பயப்படுத்தப் போதுமானதாக இருந்தது.

இப்பொழுது என்ன செய்வது என்று புரியாமல் மனதளவில் கலங்கிப் போய் விட்டிருந்தாள்.

அப்படியானால் கணவனுக்கும் அனைத்தும் தெரியுமோ?

அவனுடைய சம்மதத்துடன் தான் தன்னை அழைத்துச் செல்வதாகப் பேசிக் கொள்கிறார்களா அல்லது கணவனின் வார்த்தைகளை மீறிக் கொண்டா?

சாதாரணமாகவே தன் மேல் நம்பிக்கை இல்லாத கணவனுக்கு இப்பொழுது ஓடிப் போனவளென்ற எண்ணமும் சேர்ந்து அந்த நம்பிக்கை இன்னும் கூடக்

குறைந்து போயிருக்காதா என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

ஆனாலும் தனது அத்தை நாத்தனாரெல்லாம் முகத்தைத் திருப்பிக் கொள்ளாமல் சாதாரணமாக நடந்து கொண்டதில் மனதிற்குள் எவ்வளவோ இதமாகக் கூட உணர்ந்தாள்.

ஒருவேளை தொடக்கத்தில் அதாவது தன்னை அழைத் துச் செல்லும் வரை மட்டும் தான் அப்படி நடந்து கொள் வார்களோ?

மிகுந்த மனக் குழப்பங்களுக்கிடையே இனி கண வனை எப்படி எதிர்கொள்ளப் போகிறோமென்று பயந்து போய் விட்டிருந்தாள் சஞ்சனா.

''என்னமா?''

தனது அத்தையின் அழைப்பில் நடப்பிற்கு வந்திருந் தவள், திரும்பி அவரைப் பார்த்தாள்.

''என்ன குழப்பம்?''

''இல்ல... எம்மேல எல்லார்க்கும் கோ...''

''தெரிஞ்சோ தெரியாமலோ என்னென்னவோ நடந்து போச்சு. ஆனா இனிமேல் போனதப் பத்தி யாரும் பேச வேண்டாம்மா.''

என்னதான் தனக்குப் பதில் சொன்னாலும் அத்தையின் கவனம் முழுவதும் அவருடைய பேரக் குழந்தையின் மீது இருப்பதைக் கண்டாள்.

''என் கண்ணே பட்டுடும்போல என்ன அழகா இருக் கான். அப்படியே ஜாடைல அவங்கப்பாவ உரிச்சு வெச்சிருக்கான். ஆனா நிறம் மட்டும் உன்ன மாதிரி...''



''என்னமா?''

''நான் வர்றது அவருக்...''

''ஏன் நீ வர்றதுல அவனுக்கென்ன? இனி நீங்க ரெண்டு பேரும் பிரிஞ்சிருப்பீங்களோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனா எங்களால இந்தக் குட்டித் தங்கத்தப் பிரிஞ்சிருக்க முடியாது.''

''ஆனாலும்...''

''வேணும்னா குழந்தையை நாங்க எடுத்துட்டுப் போயிட்றோம். என்ன சொல்ற?''

மனதைக் கல்லாக்கிக் கொண்டு வேறு வழியில்லாமல் தான் கலைவாணியும் அந்தக் கேள்வியையே கேட்டிருந் தார்.

அதே சமயம் அவருடைய கேள்வியில் சஞ்சனாவும் மனதிற்குள் அதிர்ந்து போய் விட்டிருந்தாள்.

''என்ன முடியாதில்ல?'' என்று கேட்டவர், ''வேண்டாம்மா. தயவு செஞ்சு எல்லாத்தையும் மறந்துட்டுக் கிளம்பி வாம்மா. போகப் போக எல்லாம் சரியாயிடும்,'' என்றார்.

கேட்க நன்றாகத் தான் இருக்கிறது. ஆனால் இவருடைய மகனைப் பற்றி என்ன தெரியும் இவருக்கு என்று சஞ்சனாவால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனாலும் அவளை யறியாமலேயே சரியென்று தலையை ஆட்டி விட்டிருந்தாள்.

என்னதான் மருமகளிடம் ஏதேதோ பேசினாலும் மக ளுடைய நிலையைப் பற்றியும் இன்னும் கலைவாணி யால் எந்த முடிவுக்கும் வர முடிந்திருக்கவில்லை.

அதனால் தன் இஷ்டத்திற்குத் தனக்குத் தோன்றுவதை யெல்லாம் சொல்லித் தவறான நம்பிக்கை கொடுக்க வேண்டாமே என்று அதற்கு மேல் எதையும் பேசாமல் விட்டு விட்டிருந்தார்.

இங்கே மருமகள் அங்கே மகனென்று இடையில் நாம் என அனைவரும் பட்ட துன்பங்களெல்லாம் போதும், இனியாவது அனைத்தும் சுபமாக அமைய வேண்டும் கடவுளே என்று மனதார நினைத்துக் கொண்டார்.

கண்கள் கலங்கக் குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தவரைப் பார்த்த சஞ்சனாவிற்கும் அழுகை வந்துவிடும் போலாகி விட்டிருந்தது.

எப்படியோ அனைத்தும் சரியாகி, மீண்டும் எல்லாச் சொந்தங்களும் கிடைத்தால் அதுவே போதுமென்று மனதார நினைத்துக் கொண்டாள்.

ஆனால் கணவன்?

அவன் முதலில் இந்தக் குழந்தையைத் தன்னுடைய தென்று மனதார ஏற்றுக் கொள்வானா?

உடனே ஏன் ஏற்றுக் கொள்ளாமலென்று நினைக்கத் தோன்றியது.

அதுதான் கடவுள் மறுக்கவே முடியாத அளவிற்கு ஒரு மிகப் பெரிய ஒற்றுமையைக் கொடுத்திருக்கிறாரே என்று விரக்தியுடன் சிரித்துக் கொண்டாள்.

மற்றது எப்படியோ, சொந்தங்களுடன் சேர்ந்திருக்கப் போகிறோம் என்ற எண்ணமே சஞ்சனாவை மகிழ்ச்சி யடையச் செய்திருந்தது.



# 16

ஒரு மணி நேரம் சென்றிருந்தது.

தோழி தன்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாளோ என்று நினைத்தவளுக்கு, மண்டபத்திற்குள் அனை வருக்கும் முன்னிலையில் செல்வதைப் பற்றி மட்டும் ஏனோ நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

திருமணத்திற்கு வர வேண்டுமென்றெல்லாம் எண்ணி, கைக் குழந்தையை எடுத்துக் கொண்டு வந்து சிரமப் படாதே என்று முதலில் சொல்லிக் கொண்டிருந்த தோழி, அதற்குப் பிறகு, நீ கட்டாயம் வந்தே தீர வேண்டுமென்று நின்று விட்டிருந்ததின் காரணம் இப்பொழுது புரிந்தது.

எப்படியெல்லாம் நடக்க வேண்டும் என்றிருந்திருக் கிறது என்று சிரிப்பு தான் வந்தது.

''அம்மா!''

அகிலா வர, ''வாம்மா, கிளம்பலாமா?'' என்று கேட்டார் கல்வாணி.

''ரெண்டு பேரும் சாப்பிட வாங்க. அதுக்குக் கூப்பிடத் தான் வந்தேன்.''

''இல்லமா. எனக்கு வேண்டாம். மருமகளுக்கும் தான்,'' என்று மறுத்து விட்டிருந்த தாயிடம், ''ஏம்மா?'' என்று கேட்டாள்.

''எனக்கு இப்பப் பசியில்ல. சஞ்சு சாப்பிட்டா குழந்தைக்குச் சேராமப் போயிடும். அதனால நாங்க சஞ்சுவோட ரூமுக்குப் போய் வேணும்னா சிம்பிளா எதையாவது செஞ்சு சாப்புட்டுக்கறோம்.'' என்றார்.

''ஓ. உங்க மருமகளுக்குக் கம்பெனி குடுக்கறீங்கன்னு சொல்லுங்க.'' என்றவள்,

''சரி, இருக்க வேண்டியது தான்.'' என்று சிரித்தாள்.

''சுரேன் எங்கமா? அவனுக்கு எல்லாம் தெரியுமா?''

''நமக்கே தெரிஞ்சிருக்கும்போது அவனுக்குத் தெரியாம இருக்கறதுக்கான வாய்ப்புகள் குறைவுதான்,'' என்று மருமகனின் அருகில் வந்தவள், ''நான் தூக்கிக்கட்டு மாம்மா,'' என்று ஆசையுடன் கேட்டாள்.

''தூங்கிட்டிருக்காம்மா,'' என்ற தாயிடம்,

''அப்ப இவன அவங்கப்பா கைல குடுக்க வேண்டாமா?'' என்று கேட்டாள்.

''என்னமா சொல்ற?''

''இப்பதாம்மா சுரேன் எல்லாத்தையும் முடிச்சுட்டுக் காருக்குப் போறான். முதல்ல நான் கொண்டு போய்க் குழந்தையக் குடுக்கறேன். அப்படியே நீங்களும் போய் யார் யாரப் பாத்து என்னென்ன சொல்லணுமோ சொல்லிட்டுச் சீக்கிரமாக் காருக்கு வந்துடுங்க,'' என்றவள் தாயிடமிருந்து குழந்தையைக் கையில் வைத்துக் கொள்வதற்குவாகாக வாங்கிக் கொண்டாள்.

''பாத்துமா.''

''எனக்கு வேணும்னா அனுபவம் இல்லதான். ஒத்துக்கறேன். அதுக்காகக் குழந்தையத் தூக்கறது கூடவா தெரி



யாமப் போயிடும்.'' என்று ஆதங்கத்துடன் கேட்ட மகளை, ''நான் அதுக்காகவா சொல்றேன், என்னமா?'' என்று அலுத்துக் கொண்டார் கலைவாணி.

''ஃபார்மாலிட்டிக்குச் சொல்றீங்க. இல்லையா? ஓ.கே. ஓ.கே.''

அப்படியானால் அகிலாக்காவிற்கு இன்னும் குழந்தை எதுவும் இல்லை போலிருக்கிறதே என்று சஞ்சனா மனதிற்குள் நினைத்துக் கொண்டிருக்க, ''இந்தா சஞ்சு, நீ வேணும்னாப் போ,'' என்று குழந்தையை அதன் தாயிடம் கொடுக்கப் போனாள் அகிலா.

ஆனால் சஞ்சனாவோ, ''இல்ல. நான் போகல,'' என்று உடனே மறுத்து விட்டிருந்தாள்.

''அப்ப நாங்க இப்பவே கிளம்பலாம் இல்லையா, அகிலா?''

''ஆமாம்மா. ஆனா நாங்க இன்னும் ரெண்டு நாளைக்கு இருக்கணுமாம்மா. அவர் சொல்லிட்டார்,'' என்றவள், ''சரி - நான் சுரேன்கிட்டக் கொண்டு போய் அவனோட குழந்தையக் குடுக்கறேன்,'' என்று சென்றாள்.

காருக்குள் ஏறி அமர்ந்திருந்த சுரேந்திரன் அப்படியே இருக்கையில் சாய்ந்து சற்று நேரம் தூங்க முயற்சி செய்தான். முதல் நாள் இரவெல்லாம் காரை ஓட்டி வந்த களைப்போடு, தூக்கமின்மையும் சேர்ந்து கொள்ள ஒரு மாதிரியாக உணர்ந்தான்.

ஆனால் சரியாகத் தூங்காதது நேற்று ஒரு நாள் மட்டுமா?

ஏதேதோ எண்ண ஓட்டங்களில் மனம் பாரமாகி விட, அப்படியே கண்களை மூடிக் கொண்டான்.

''சுரேன்!''

அகிலாவின் குரலில் திரும்பிய சுரேந்திரன், ''வா,'' என்றான்.

''என்ன, கைல குழந்தை. யாரோ...''

அதற்குள், ''இந்தா குழந்தையப் புடி,'' என்று தம்பியின் அருகிலேயே சென்றிருந்தாள் அகிலா.

''என்ன பாக்கற? உன் குழந்தைய உங்கிட்டக் குடுக்காம நான் வேற யார்கிட்டக் கொண்டு போய்க் குடுக்கறதாம்?'' என்று கிண்டலாகக் கேட்டாள்.

தான் சொல்வதை நம்ப மாட்டாத பாவனை சுரேந்திரனின் முகத்தில் தெரிய,

''சஞ்சனாகிட்டிருந்து வாங்கிட்டு வர்றேன். ம்கூம், இப்படிப் புடி,'' என்று குழந்தையை அதனுடைய தந்தையிடம் கொடுத்திருந்தாள்.

முகத்தில் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளா விட்டாலும் நாடி நரம்பெல்லாம் பரபரத்துப் போனது சுரேந்திரனுக்கு.

அப்படியானால்...

''என்ன சுரேன், இன்னும் நம்பலையா?'' என்ற அகிலா, அதற்குப் பிறகு பேசியதெல்லாம் அவனுடைய காதுகளுக்குள் கூடச் சென்றிருக்கவில்லை.

துணிச் சுருளுக்குள் கொட்டக் கொட்ட விழித்தபடி பஞ்சு போன்ற மென்மையுடன் இருந்த குழந்தையைப் பார்த்தவனால் என்ன முயன்றும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

ஒருவித இனம் புரியாத, இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத சந்தோஷத்தில் நெஞ்சு நிறைந்து போனது.



சரி. இனி நான் இங்க இருக்கறதும் வேஸ்ட். இதோ வர்றேன் என்று நகர்ந்தாள் அகிலா.

ஆனந்தப் பெருக்கில் கண்கள் கூட லேசாகக் கலங்கி விட்டிருக்க, கை கால்களெல்லாம் நடுங்குவதைப் போல உணர்ந்தான்.

இந்தப் பிஞ்சைத் தொடும் தகுதி கூடத் தனக்கு இல்லையே என்று கூனிக் குறுகிப் போனான்.

அதே நேரம் தன்னைப் பார்த்துக் குழந்தை சிரிக்க வேறு செய்ததில், மனதளவில் முழுமையாக உடைந்து போய் விட்டிருந்தான் சுரேந்திரன்.

மிகவும் சிறிய குழந்தைகள் சிரித்தால் கடவுள் அந்தக் குழந்தைகளை விளையாட்டுக் காட்டிச் சிரிக்க வைப்பதாகச் சொல்வார்கள்.

அப்படித்தான் சுரேந்திரனின் செல்வனும் சிரித்திருந்தான்.

உன்ன இனி நான் எப்பவுமே பிரிய மாட்டேன்டா செல்லம் என்று பூக்குவியல் போல இருந்த தனது குழந்தையை எங்கே அதற்கு வலித்து விடுமோ என்னுமளவிற்கு மார்போடு அணைத்துக் கொண்டான் சுரேந்திரன்.

ஒரு வருடத்திற்கு முன்பு நடந்தது தான் அப்பொழுது அவனுக்கு நினைவுக்கு வந்தது.

அது அப்படியே திரைப்படமாக ஓடி வழக்கம் போல மனதை வலிக்கச் செய்தது.

அதிலும் மனைவி தன்னிடம் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, ''நீங்க அப்பா ஆகப் போறீங்க,'' என்று தான் வெளிப்படுத்தப் போகும் சந்தோஷத்தைப் பார்ப்பதற்காக ஆவலுடன் தனது முகத்தைப் பார்த்தது தான் நினைவிற்கு வந்தது.

ஆனால் அதற்குத் தான் சொன்ன பதில், என் அதற்கு மேலும் கூட என்னவெல்லாம் சொல்லி விட்டிருந்தோம்.

பாவம், அதைக் கேட்க நேர்ந்த அவளுடைய மனம் அப்பொழுது என்ன பாடு பட்டிருக்கும்! அந்த வார்த்தைகளின் வலிதான் அவள் தன்னை விட்டுப் பிரிந்து செல்வதற்கான முக்கியமான காரணமாக இருந்திருக்குமோ?

எங்கெங்கோ சென்ற மனதை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு குழந்தையைப் பார்த்தான்.

என்ன மாயம்.

குழந்தையைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்த சில வினாடிகளிலேயே மனதிலுள்ள பாரமெல்லாம் நீங்கி மனம் மிகவும் லேசாகி விட்டதைப் போல உணர்ந்தான்.

ஒரு சிறு குழந்தையின் அருகாமைக்கும் ஸ்பரிசத்திற்கும் இத்தனை வலிமை இருக்கிறதா?

அப்படியானால் இனி அனைத்துமே சரியாகி விடுமோ?

மனைவி நடந்ததையெல்லாம் மறந்து மீண்டும் பழையபடி ஆகி விடுவாளோ?

ஆனால் இடையில் சென்று விட்டிருந்த ஒரு முழு வருடம்.

அது கொடுத்து விட்டுச் சென்றிருக்கும் காயங்களின் வடு அவ்வளவு விரைவில் மறைந்து விடக் கூடியதா என்ன?

உலகம் தெரியாத சிறு பெண்ணாகத் தனது மனைவி இந்த ஓர் ஆண்டில் பட்டிருக்கும் துன்பங்கள்.

குழந்தையைப் போலவே மனைவியிடமும் சாதாரணமாகப் பேசிவிடும் தகுதி கூடத் தனக்கு இல்லையே.



என்ன, இத்தனை நாட்களும் மனைவி சற்று தொலைவில் அவளுடைய தோழியின் உதவியுடன் தனியாகச் சமாளித்தாள் என்றால், இனிமேல் பழையபடி தன்னுடன் ஒரே வீட்டில் மனைவி என்னும் பெயரளவில் இருக்கப் போகிறாள். அவ்வளவே.

எங்கிருந்தாலும் மனைவியும், அவளுடைய நிம்மதியும் தனக்கு முக்கியம் தான். ஆனால் அதற்கு மேல் ஒரு கணவனாக அவளிடம் எதையும் எதிர்பார்ப்பதைப் பற்றி மட்டும் அவனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

இப்பொழுது ஆசையாகத் தான் தூக்கி வைத்துக் கொண்டிருக்கும் இந்தக் குழந்தையைப் பெற்றெடுக்க அவள் தனிமையில் என்ன பாடு பட்டிருக்க வேண்டும்!

## 17

அதிலும் அன்று கடைசியாக நடந்ததையெல்லாம் மீண்டும் நினைத்துப் பார்த்தான் சுரேந்திரன்.

மனைவியைக் கோபத்தில் அவனையறியாமலேயே ஏதேதோ பேசி விட்டிருந்தவனும் அவள் அப்படிக் கடிதத்தை எழுதி வைத்துவிட்டு ஒரேயடியாகக் கிளம்பியே சென்று விடுவாளென்று கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

மனைவி படுக்கைக்குச் சென்றிருக்க, நிச்சயம் நாம் இனிமேல் கோபத்தைக் குறைத்துக் கொண்டே தான்

ஆக வேண்டுமென்று அவனும் சென்று படுக்கையில் விழுந்திருந்தான்.

ஆனால் தூக்கம் தான் அருகில் கூட வந்திருக்கவில்லை. என்னவெல்லாம் பேசி விட்டோமென்று மனம் மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

ஆனாலும் அவனுடைய தாய் தன்னிடம் போன் செய்து கேட்டதைத் தான் அவனால் துளியும் ஜீரணித்துக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

அதுவும் எவ்வளவு நல்ல பெண் மனைவியாக வந்து அமைந்திருந்தும் கூட ஏன் இப்படியெல்லாம் கொடுமை செய்கிறாய். அதற்கு மேல் இப்படி அழவும் வைக்கிறாயென்றால் அந்தப் பாவம் நிச்சயம் உன்னைச் சும்மா விடவே விடாது என்றெல்லாம் இன்னும் ஏதேதோ தனது தாய் கேட்டிருந்ததில் தான் அவனுக்குப் பாவம் மனைவியென்று இறங்கத் தொடங்கி விட்டிருந்த கோபம் மீண்டும் அதிகமாகி விட்டிருந்தது.

சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் பேச்சு வாக்கில் இயல்பாக அவனுடைய தாய் கேட்டதையெல்லாம் அவன் தவறாகப் புரிந்து கொண்டு விட்டிருந்தான்.

அதாவது தன்னுடைய மனைவி தான் தனது தாயிடம் இல்லாததையும் பொல்லாததையும் எல்லாம் சொல்லிக் கண்ணீர் விட்டு அழுதிருக்கிறாள் என்பதைப் போல நினைத்துக் கொண்டான்.

அதாவது மனைவி அவள் தன் மேலிருக்கும் தவறை மறைப்பதற்காக அவசியமில்லாத எதையெதையோ இழுத்துப் பேசிக் குடும்பத்திற்குள் அதாவது கணவன் மனைவிக்குள் மட்டுமே இருக்க வேண்டிய விஷயங்



களைக் கூட வெளியே சொல்லியிருக்கிறாளென்று தவறாகப் புரிந்து கொண்டான்.

ஆனாலும் அதற்குக் கோபப்பட்டு அவன் பேசிய வார்த்தைகள் சற்றும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாதவை. ஏன், அந்த அளவிற்கு அவன் அதற்கு முன்னர் எப்பொழுதுமே கோபப்பட்டுப் பேசியதும் கிடையாது.

மனைவியின் மேல் அவன் வைத்திருந்த அளவிற்கு அதிகமான அன்பின் வெளிப்பாடாகத்தான் அவன் அந்த அளவிற்குப் பேசி விட்டிருந்தான் என்று வேண்டுமானால் சொல்லலாம். சுலபமாக அப்படியெல்லாம் சொல்லித் தப்பித்துக் கொண்டு விடும் எண்ணம் அவனுக்குமே இருக்கவில்லை.

அவன் அப்படி நடந்து கொண்டு விட்டதற்கான காரணங்களுள் ஒன்றாக வேண்டுமானால் அதுவும் இருக்கலாம். அவ்வளவே.

ஆனால் அதற்குப் பிறகு வந்த நாட்களில் - ஏன், இன்று வரையும் கூட - சற்றும் மனச்சாட்சியே இல்லாமல் மனைவியை அவன் பேசி விட்டிருந்த ஒவ்வொரு வார்த்தையையும் குறைந்தது ஓராயிரம் முறையாவது மனதிற்குள் நினைத்து வருத்தப் பட்டிருப்பான்.

வெகு நேரம் கழித்துத் தூங்கியிருந்ததால், அன்று வழக்கத்தை விடவும் தாமதமாகத்தான் தூக்கம் கலைந்து விழித்திருந்தான்.

முதல் வேலையாக மனைவியிடம் சென்று மன்னிப்புக் கேட்டு விட வேண்டுமென்று நினைத்துக் கொண்டே படுக்கையை விட்டு எழுந்தவன், வேகமாகச் சென்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டு மனைவியை நாடி வந்தான்.

எந்த முகத்தை வைத்துக் கொண்டு போய் அவளிடம் பேசுவதென்று அவனுக்கும் மிகவும் தயக்கமாகத் தான் இருந்தது.

எது எப்படியானாலும் மனைவியிடம் தன் நிலையை விளக்கிச் சொல்லி மன்னிப்புக் கேட்டே ஆக வேண்டும்.

அதிலும் அவள் இப்பொழுதிருக்கும் நிலையைக் கூடப் புரிந்து கொள்ளாமல் எப்படியெல்லாம் நடந்து கொண்டு விட்டிருக்கிறோம், அதுவும் அவள் அதைச் சொல்ல வந்த போதும் கூட.

அது மட்டுமா?

இன்னும் என்னவெல்லாம்...

ஏற்கெனவே மிகுந்த குற்ற மனப்பான்மையுடன் வந்தவனுக்கு மேலும் அங்கு காத்திருந்ததோ அவனுடைய மனைவியின் எழுத்துகளைத் தாங்கி நின்ற ஒரு கடிதம் மட்டுமே.

கூடவே அவளுடைய கையெழுத்துடன் கூடிய மற்றொரு முழு வெள்ளைக் காகிதமும்.

ஏற்கெனவே மிகுந்த குற்ற மனப்பான்மையுடன் இருந்தவன் கடிதத்தைப் பார்த்து விட்டுத் தவித்த தவிப்பு, அவன் பட்ட வேதனை.

அவற்றை அப்படியே எப்படிப்பட்ட வார்த்தைகளாலும் விளக்கிச் சொல்லி விட முடியாதே.

அனைத்தையும் விட அவனை முழுமையாக உடைத்து விட்டிருந்தது, தேடினால் உயிரை விட்டு விடுவேனென்று மனைவி எழுதி வைத்து விட்டுப் போன வார்த்தைகள் தான்.



அதனால் வெளிப்படையாகத் தேட அவன் முயற்சிக்கவில்லை. அவ்வளவே.

மனைவி இருக்கும் இடத்தை அறிந்து கொள்வதற்கு அவன் அப்படியொன்றும் அதிகச் சிரமப்பட நேர்ந்திருக்கவில்லை. ஒரு சில நாட்களிலேயே மனைவி அவளுடைய தோழி அஞ்சலியை நாடிச் சென்றதிலிருந்து அனைத்தும் தெரிந்து விட்டிருந்தது.

உடனே சென்று அழைத்து வந்துவிடத் தான் அவனுடைய மனம் துடித்தது.

ஆனால் அதற்குப் பிறகுதான் எந்த அளவிற்கு வேதனையடைந்திருந்தால் கிளம்பியே சென்றிருப்பாள். அப்படியிருக்கும்போது தான் போய் அழைத்தால் மட்டும் உடனே வந்து விடுவாளா என்று யோசிக்கத் தோன்றியது.

சரிதான், இன்னும் சில நாட்கள் போகட்டும், மனைவிக்கும் மனதின் வலி சற்று குறையட்டுமென்று காத்திருக்கலானான்.

அவன் நடந்து கொண்டிருந்த விதத்திற்கு மனைவியைச் சென்று பார்க்க அவனால் முடிந்திருக்கவில்லை என்பதே நிஜம்.

போகப் போக அந்தக் குற்ற மனப்பான்மை மேலும் அதிகமாகிக் கொண்டே தான் போனதே தவிர மற்றும் குறைந்திருக்கவில்லை.

ஒருவேளை மனைவி சிரமப்பட நேர்ந்திருந்தால் அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டுக் கிளம்பியிருப்பானோ என்னவோ. ஆனால் அவள் அளவிற்கு அவன் சமாளித்துக் கொண்டு விட்டிருந்ததும் அவன் மேலும் தயங்கியதற்கு ஒரு காரணமே.

ஆனால் ஒரு பெண்ணாக அதுவும் அந்த மாதிரி ஒரு சமயத்தில் சொந்தங்களென்று ஒரு சிறு ஆறுதலுக்குக் கூட யாருமற்ற தனிமையில் மனைவி பட்ட துன்பத்தைப் பாவம் சுரேந்திரனும் அறிந்திருக்கவில்லை.

ஒரு சில நிமிடங்களுக்குள் அவனுடைய மனம் எங்கெங்கோ சென்று சுற்றி விட்டு வந்திருந்தது. ஆனால் மிஞ்சியதோ வழக்கம் போல மன வேதனை மட்டுமே.

கையிலிருந்த குழந்தையின் அழுகைச் சத்தத்தில் தான் முழுமையாக நடப்புக்கு வந்திருந்தான்.

என்ன செய்வதென்று புரியாமல், எப்படிச் சமாதானப் படுத்துவதென்றும் தெரியாமல் விழித்தவன் திடீரென்று அங்கு தனது மனைவியே வந்து நிற்பாளென்று எதிர் பார்க்கவில்லை.

நேராகக் கணவனிடம் சென்று குழந்தையை வாங்கிக் கொண்டாள் சஞ்சனா.

உதட்டைக் கடித்தபடி குழந்தையின் மீதிருந்த மனைவியின் கவனம், அவள் தன்னைச் சாதாரணமாகக் காட்டிக் கொள்ள எடுத்துக் கொள்ளும் முயற்சி என்பதைக் காட்டியது.

என்னதான் அவனுக்குள்ளும் மிகுந்த குற்ற மனப்பான்மையும் வேதனையும் இருந்தாலும் கூட சுரேந்திரனால் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள முடிந்தது.

ஆனால் என்ன முயன்றும் சஞ்சனாவால் அப்படி முடிந்திருக்கவில்லை. ஏன், அவளையறியாமலேயே அவளுடைய கண்களும் கூடக் கலங்க ஆரம்பித்து விட்டிருந்தன.

இது என்ன தவறை முழுக்கத் தன் மேல் வைத்துக் கொண்டிருக்கும் கணவனே அவனை இயல்பாகக் காட்டிக் கொண்டிருக்கும்போது, தன்னால் மட்டும் ஏன் அப்படி இருக்க முடியவில்லையென்று மனதளவில் மேலும் இறுகிப் போனாள்.



தன்னை வெளிப்படையாகத் தான் அப்படிக் காட்டிக் கொண்டானே தவிர, அவனுடைய மனைவி நினைப்பது போல உள்ளுக்குள் சுரேந்திரனாலும் ஒன்றும் இயல்பாக இருக்க முடியவில்லை.

மனைவியிடம் சாதாரணமாகவேனும் சில வார்த்தைகள் பேசினால் என்னவென்று மனம் துடிக்க, எந்த முகத்தை வைத்துக் கொண்டு போய்ப் பேசுவாயென்று மனச்சாட்சி கேள்வி கேட்டது.

அப்படியே நீ சென்று பேசினாலும் அவள் உன்னிடம் பேசுவாளென்று உன்னால் எப்படி எதிர்பார்க்க முடிகிறது என்றும்.

முதலில் தன்னுடைய நிலையை விளக்கிச் சொல்லாமல், தான் நடந்து கொண்டதற்கு மன்னிப்புக் கேட்காமல், எப்படிப் பேசுவதென்று அவனுக்கும் தயக்கமாக இருந்தது.

வாழ்க்கையில் எப்பொழுதுமே ஏன் யாரிடமுமே அவன் அந்த அளவிற்குப் பேசத் தயங்கியதோ அல்லது வாயடைத்து நின்று விட்டிருந்ததோ கிடையாது.

அதுவே முதல் முறை.

சரிதான். இதுவரை நம் மேல் எந்தத் தவறும் இல்லை, இனிமேலும் நாம் அப்படியே இருந்து விட வேண்டியது தானே என்று பிரம்மப் பிரயத்தனப்பட்டு வாயைத் திறந்தாள் சஞ்சனா.

"அவங்க... அவங்க யாரும் வரல. முதல்ல என்னைப் போய் அங்க வீட்ல இருக்கற திங்ஸ் காலி பண்ணிட்டு வரச் சொன்னாங்க..."

முயன்று ஒரு வழியாகச் சொல்லியே முடித்திருந்த வளுக்கு எங்கே இருதயம் வெளியிலேயே வந்து விழுந்து விட்டதோ என்னுமளவிற்குப் படீர் படீரென்று அடித்துக் கொண்டது.

எப்போது சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப் போனாயோ அத்தோடு நம் உறவும் முடிந்து விட்டது. நீ ஒன்றும் எங்களுடன் வரத் தேவையில்லை என்றெல்லாம் ஏதேனும் சொல்லி விடுவானோ என்னும் பயத்தில் அவளுடைய கை கால்களெல்லாம் நடுங்கத் தொடங்கி விட்டிருந்தன.

குழந்தையை அணைத்துக் கொள்ளும் பாவனையில் தனது நடுக்கத்தை மறைக்க முயற்சி செய்தாள்.

அதுவரை மூச்சு முட்டிப் போயிருந்தவளுக்கு, ''வா. வந்து உக்காரு,'' என்று முன் பக்கக் கார் கதவைக் கணவன் திறந்து விட்ட பிறகு தான் வழக்கம் போல சுவாசிக்கக் கூட முடிந்தது.

ஏன் இவ்வளவு பட்ட பிறகும் இன்னும் துளி கூட மாறாமல் அப்படியே இருக்கிறோமென்று விரக்தியுடன் நினைக்கத் தோன்றியது.

குழந்தையை வைத்துக் கொண்டு மனைவி காரில் ஏறி அமரச் சிரமப்பட, ''ஒரு நிமிஷம்,'' என்று இடதுபக்கமாகச் சாய்ந்து கார் கதவை நன்றாகத் திறந்து விட்டான்.

தான் ஏறிக் கொண்டதும் கணவன் தானே கார் கதவையும் மூட, தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள வெகுவாக முயன்று தோற்றுப் போனாள் சஞ்சனா.

அநியாயத்திற்கு மெலிந்து போயிருந்த மனைவியின் தோற்றம் சுரேந்திரனை மேலும் குற்ற மனப்பான்மையில் தள்ளியிருக்க,



தன்னிடம் ஒரு வார்த்தை பேசும் அளவிற்குக் கூடவா இன்னும் அவனுடைய கோபம் குறைந்திருக்கவில்லையென்று ஆதங்கத்துடன் நினைத்தாள் சஞ்சனா.

உடனே அப்படி நினைத்த தனது முட்டாள் தனத்தை எண்ணி ஏன் இப்படி இருக்கிறோமென்று அதற்கும் தன்னையே நொந்து கொண்டாள்.

இப்படி ஏதேதோ மனப் போராட்டங்களில் இருவருடைய மனங்களுமே தவித்துக் கொண்டிருக்க, அவர்களுடைய செல்வனோ தானும் அங்கு இருப்பதைத் தன்னுடைய அழுகையால் நினைவு படுத்தினான்.

குழந்தை பசிக்கு அழுவது புரிய, அழுகையைக் கட்டுப்படுத்த முயன்றாள்.

ஆனால் நன்றாகப் பசிக்கத் தொடங்கி விட்டிருந்தது போலும். அந்த முயற்சியெல்லாம் குழந்தையிடம் எடுபடவில்லை.

மனைவியின் நிலை புரிய, ''எங்காவது தள்ளி நிறுத்தட்டுமா?'' என்று கேட்டான் சுரேந்திரன்.

''வீட்டுக்கே போயிடலாம்...'' என்ற சஞ்சனாவின் குரல் அவளுக்கே கேட்டிருக்கவில்லை.

அந்த அழுகையிலேயே சோர்வடைந்து விட்டிருந்ததோ என்னவோ, தொடர்ந்து வந்த சில வினாடிகளிலேயே குழந்தை தூங்கவும் தொடங்கி விட்டிருந்தது.

எத்தனையோ நாட்களுக்குப் பிறகு தான் அனுபவிக்க நேர்ந்த கணவனின் அருகாமை நெஞ்சை அடைக்கச் செய்ய ஸ்டியரிங்கைப் பிடித்திருந்த அவனுடைய வலிய கரங்களோ அவளை மேலும் என்னவோ செய்தன.

ஆனால் அதற்கு மேல் அவளுடைய பார்வை உயர்ந்தாலோ அல்லது திரும்பினாலோ அல்லவா?

அடுத்த சில நிமிடங்களில் அவர்கள் வீட்டை அடைந்திருக்க, அப்போதிருந்த மனப் போராட்டத்தில் கணவனுக்கு எப்படித் தான் இருக்கும் வீடு தெரிந்தது என்ற எண்ணம் கூட அவளுக்கு எழுந்திருக்கவில்லை.

தனக்கு முன்பே கணவன் இறங்கியிருக்க, மீண்டும் அழத் தொடங்கி விட்டிருந்த குழந்தையுடன் வேகமாக வீட்டை நோக்கி நடந்தாள் சஞ்சனா.

ஆனால் அதற்கு முன்பே எதுவும் பேசாமல் மனைவியின் கையிலிருந்த சாவியை வாங்கிக் கொண்டு போய்க் கதவைத் திறந்திருந்தான் சுரேந்திரன்.

மனைவி உள்ளே சென்றிருக்க, வீட்டின் அறைகளை வேகமாக நோட்டமிட்டவனுக்கு மனதை என்னவோ செய்தது.

வீட்டின் சுத்தமும், பொருட்களை அடுக்கி வைத்திருந்த நேர்த்தியும் இவள் இன்னும் தனது பழைய சஞ்சனாவே தான் என்று உள்ளுக்குள் எவ்வளவோ இதமாகவும் இருந்தது.

குழந்தையின் பசியை ஆற்ற மனைவி உள்ளறைக்குச் சென்று விட்டிருந்தது தெரிய, தானும் காருக்குத் திரும்பி விட்டிருந்தான் சுரேந்திரன்.

வழக்கம் போல சில நிமிடங்களுக்குள் வயிறு நிறைந்து குழந்தை மீண்டும் தூங்க ஆரம்பித்திருக்க, தோளில் போட்டுத் தட்டிக் கொடுத்துப் படுக்க வைத்து விட்டு வந்தாள்.

அதே சமயம் கணவனும் வீட்டிற்குள் வர, இலக்கின்றி எங்கோ பார்த்தபடி நின்றாள் சஞ்சனா.

"எல்லாத்தையும் எடுத்துக் கட்டலாம்," என்று கணவன் சொல்ல, தானும் எதையாவது எடுத்து வைக்கலாமென்று அவளும் திரும்பினாள்.



ஆனால் அதே சமயம் கணவனும் தன்னை நோக்கித் திரும்புவது தெரிய, என்னவென்பதைப் போலப் பார்த்தாள்.

"முதல்ல நீ போய் ஏதாவது சாப்புடு..." என்றவனுக்கும் இனி என்ன நினைவு வந்ததோ, முகத்தில் சுத்தமாக உணர்ச்சி துடைக்கப்பட்டு விட்டிருந்ததைக் கண்டாள்.

கிளம்பி வருவதற்கு முதல் நாள் கணவன் சொன்ன வார்த்தைகள் தான் அப்பொழுது சஞ்சனாவிற்கும் நினைவிற்கு வந்தன.

"இப்பப் பசியில்ல," என்று - மெல்லிய குரலில் என்றாலும் - உடனே சொல்லி விட்டிருந்தாள்.

அது சரிதான். முழுமையாக ஒரு வருடம் வயிற்றுப் பாட்டுக்கு என்ன செய்தாள், என்னென்ன சிரமப்பட்டாள் என்றெல்லாம் துளியும் நினைத்துப் பார்க்காமல், இப்பொழுது திடீரென்று வரும் கரிசனத்தை மட்டும் மனைவியாலும் தான் எப்படி ஏற்றுக் கொள்ள முடியுமென்று நினைத்துக் கொண்டான்.

"வேகமா எல்லாத்தையும் எடுத்து வைக்கலாம்," என்ற கணவனின் வார்த்தைகளில் முதலில் குழந்தை சம்பந்தப்பட்ட அனைத்தையும் எடுத்து ஒரு இடத்தில் வைத்தாள் சஞ்சனா.

## 18

அடுத்ததாக நடந்தது தான் சஞ்சனாவை - ஏன், இருவரையுமே - தங்களுக்குள் உணர்ச்சி வசப்படுத்தியிருந்தது.

அதற்குக் காரணம் சஞ்சனாவின் தலையணைக்குப் பக்கத்தில் தலைகீழாகத் திருப்பி வைக்கப்பட்டிருந்த சுரேந்திரனின் போட்டோ.

குழந்தை சம்பந்தப்பட்ட பொருட்களைச் சஞ்சனா எடுத்து ஒரு பைக்குள் சேகரித்துக் கொண்டிருக்க, மற்றதைத் தான் எடுத்து வைத்துக் கொண்டிருந்தான் சுரேந்திரன்.

அப்படித் தலையணை, போர்வை என ஒவ்வொன்றாக எடுத்துக் கட்டிக் கொண்டு வந்தவன், அடுத்ததாக அதற்குப் பக்கத்தில் திருப்பி வைக்கப்பட்டிருந்த அந்த போட்டோவைக் கையில் எடுத்திருந்தான்.

அப்படி எடுத்துப் பார்த்தவனுக்கு அதற்குப் பிறகுதான் அது போட்டோ என்பதும், அதிலும் தன்னுடையது என்பதும் தெரிந்தது.

திடீரென்று அதை உணர்ந்தவளாய், சஞ்சனா திரும்பவும் அதே சமயம் சுரேந்திரன் அந்த போட்டோவைக் கையில் எடுக்கவும் சரியாக இருந்தது.

தனது கையிலிருக்கும் புகைப்படத்தைப் பார்த்தவன், அதே சமயம் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த மனைவியின் பார்வையையும் சந்தித்தான்.

இருவருடைய உள்ளங்களுமே வெவ்வேறு விதமான உணர்ச்சிப் பெருக்கில் நிறைந்து போய் விட்டிருந்தன.

வழக்கம் போல சுரேந்திரன் அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டு விட்டிருக்க, ஒன்றும் முடியாமல் திரும்பிக் கொண்டு விட்டிருந்தாள் சஞ்சனா.

கணவன் தன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருப்பான்? அவனுடைய அருகாமைக்காக இத்தனை நாளும் ஏங்கிக் கொண்டே இருந்ததாக அல்லவா நினைக்கத் தோன்றும்?



அதனால் தான் இப்பொழுது அழைக்காமல் கிளம்பி விட்டாள் போலிருக்கிறதென்றும் கூட நினைத்துக் கொள்வானோ?

மீண்டும் மீண்டும் கணவனிடம் தோற்றுப் போய்க் கொண்டே இருப்பதைப் போன்ற ஒரு உணர்வில், சஞ்சனாவின் மனம் மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

கடவுளே! அப்படியானால் இனிவரும் நாட்களில் கணவன் தன்னை இன்னும் கூடக் கேவலமாக நடத்துவானோ? அவனுடைய தவறை உணர்ந்து ஆறுதல் சொல்லி அரவணைத்துக் கொள்ளா விட்டாலும் கூடப் பரவாயில்லை. கணவன் தன்னை இன்னும் கூட உதாசீனப்படுத்தி விட்டால் அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி தனக்கு இல்லையே என்று மனதில் ஒரு வலியுடன் நினைத்தாள்.

சஞ்சனா இப்படி நினைத்துக் கொண்டிருக்க, சுரேந்திரனோ, இப்படிப்பட்ட மனைவியைப் போய் என்னவெல்லாம் பேசி விட்டோம், எப்படியெல்லாம் நடத்தி விட்டோம், மன்னிக்கவே முடியாத அளவிற்கு மிகப் பெரிய குற்றத்தையல்லவா செய்து விட்டோமென்று மனதளவில் மேலும் உடைந்து போய் விட்டிருந்தான்.

என்னதான் மற்றவர்களுக்காகப் போகப்போக மனைவியும் தன்னிடம் சாதாரணமாக நடக்கத் தொடங்கி விடுவாளென்ற நம்பிக்கை இருந்தாலும், மனதாரப் பழையபடி தன்னைக் கணவனாக ஏற்றுக் கொள்ள அவளால் இனி எப்பொழுதுமே முடியாதோ என்றும்.

அடுத்த பத்து நிமிடங்களில் தேவையானவற்றை மட்டும் கட்டி எடுத்துக் காரில் வைத்துக் கொண்டு, குழந்தையுடன் இருவரும் கிளம்பி விட்டிருந்தனர்.

சுருக்கமாக விஷயத்தைச் சொல்லி, மற்றதைத் தோழி அஞ்சலி வந்து பார்த்துக் கொள்வாளென்று பக்கத்து வீட்டில் சாவியைக் கொடுத்து விட்டு வந்திருந்தாள் சஞ்சனா.

நடப்பதையெல்லாம் நினைத்து சந்தோஷப் பட முடியாவிட்டாலும் கூடப் பரவாயில்லை. ஏனோ மனம் மிகவும் பாரமாகி விட்டிருந்தது சஞ்சனாவிற்கு.

இனி அவ்வளவு தான், அனைத்துமே முடிந்து போய் விட்டன. இனி தனக்கு வாழ்க்கையில் ஒன்றுமே இல்லை என்ற எண்ணங்கள் தான் மீண்டும் மீண்டும் உதித்து அவளை மேலும் பலவீனப்படுத்திக் கொண்டிருந்தன.

பத்து நிமிடங்களில் திருமண மண்டபத்தை அடைந் திருந்தவர்கள், சொல்ல வேண்டியவர்களிடம் மட்டும் சுருக்கமாகச் சொல்லிவிட்டுக் கலைவாணியுடன் அப் பொழுதே ஊருக்குக் கிளம்பி விட்டிருந்தனர்.

ஒரு வழியாகப் பயணம் முடிந்து, அன்று இரவு பதி னோரு மணிக்கு அனைவரும் வீடு வந்து சேர்ந்திருந் தார்கள்.

வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்தவளுக்குப் பழைய நினைவுகளின் தாக்கத்தில் அழுகை வந்து விடும் போலி ருந்தது. ஆனாலும் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

தனது அத்தையின் கைகளில் குழந்தை நன்கு தூங்கிக் கொண்டிருப்பது தெரிய, அவர் சொன்னது போலச் சென்று குளித்துவிட்டு வந்திருந்தாள் சஞ்சனா.

''வாம்மா. இந்தா, குழந்தைய எடு,'' என்று மருமக ளிடம் பேரக் குழந்தையைக் கொடுத்தார் கலைவாணி.



''அத்தை.''

''என்னமா?''

''நீங்க எங்ககூடப் படுத்துக்க முடியுமா?''

''சரிதான்மா, ஏன் நைட்டெல்லாம் குழந்தை அழு வானா?''

''இல்ல அத்தை, ஆனாலும் எங்க பசிக்கு எழுந்து அழு வானோன்னு பயந்துகிட்டு அசந்து தூங்கவே ரொம்ப பயமா இருக்கும்.''

மருமகளிடம் காட்டிக் கொள்ளாவிட்டாலும் மனம் உருகி விட்டிருந்தது கலைவாணிக்கு.

''இந்தக் குட்டித் தங்கத்த வெச்சுக்கவும் கசக்குமா?'' என்று புன்னகையுடன் கேட்டார்.

''அப்பக் குழந்தைய நீ தொட்டில்ல போட்டதே இல்ல, இல்லையா?''

''ஆமா அத்தை, எம் பக்கத்துல தான் படுக்க வெச்சுப் பேன்.''

''அதான, குழந்தைங்கள தொட்டில்ல போட்டா தான் அப்படியே அணைச்ச மாதிரி ஆதரவா இருக்கும்மா. அப்ப தான் திடீர்னு துள்ளி விழுந்து எழாம நல்லாத் தூங்கவும் செய்வாங்க,'' என்றவர், ''இதோ வர்றேன்,'' என்று உள்ளே சென்றார்.

சென்றவர் சில வினாடிகளில் ஒரு நூல் சேலையுட னும் தொட்டில் கட்டும் கம்பியுடனும் திரும்பி வந்தார்.

தொடர்ந்து வந்த மகனிடம் அவற்றைக் கொடுத்து, அவர் சொல்வதைப் போலத் தொட்டில் ஒன்றைக் கட்டிக் கொடுக்கச் சொன்னார்.

''போதும்பா. இனி ஒண்ணுமாகாது. நீ இறங்கிக்கோ.''

''அப்புறம் சுரேன்...'' என்ற தாயின் அழைப்பில் அவரைத் திரும்பிப் பார்த்தான் சுரேந்திரன்.

''இல்லப்பா. அது பரண் மேல இருக்கும். இப்ப ஒண்ணும் அவசரமில்ல...'' என்று தாய் முடித்து விட்டிருக்க, ''அப்பா காலைல வர்றதா இப்பதான் போன்ல கூப்புட்டுச் சொன்னார்,'' என்று நகர்ந்தான் சுரேந்திரன்.

எதையோ சொல்ல அழைத்துவிட்டுப் பிறகு பேச்சை மாற்றியிருந்த தாயின் செய்கையில், அது என்னவாக இருக்குமென்று நினைக்கத் தோன்றியது.

ஏனோ அப்பொழுதே குழந்தையைப் பார்க்க வேண்டும் போல அவனுடைய மனம் பரபரத்தது சுரேந்திரனுக்கு.

காலையில் குழந்தையைத் தான் கைகளில் வாங்கியது தான் நினைவிற்கு வந்தது. அதிலும் அப்பொழுது தன்னைப் பார்த்துச் சிரித்த குழந்தையின் நினைவில் மீண்டும் உடல் சிலிர்த்துப் போனான்.

ஆனாலும் அப்பொழுது மனைவி குழந்தையைப் பசியாற்ற எடுத்துச் சென்றிருப்பதை உணர்ந்து, காலையில் பார்த்துக் கொள்ளலாமென்று குளிக்கப் போனான்.

குளித்துவிட்டு வந்து படுக்கையில் விழுந்தவனுக்கு மனைவியின் நினைவு தான் வந்தது. முக்கியமாகத் தன்னுடைய புகைப்படத்தை அவள் தனது படுக்கையில் வைத்திருந்தது.

ஏதேதோ எண்ணங்கள் மனதிற்குள் முட்டி மோதினாலும், வழக்கத்திற்கு மாறாக அன்று நன்றாகத் தூங்கியும் போய் விட்டிருந்தான்.



# 19

காலையில் ஆறு மணிக்கு விழித்தெழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியே வந்தவனுக்கு, இன்னும் யாரும் எழுந்திருக்கவில்லை என்பது தெரிந்தது.

குழந்தை அவர்களை இரவெல்லாம் தூங்க விட்டானோ என்னவோ என்று நினைக்கத் தோன்றியது.

உள்ளே செல்லத் திரும்பியவன், ''என்னப்பா எழுந்தாச்சா?'' என்ற தந்தையின் குரலில் மீண்டும் திரும்பினான்.

''வாங்கப்பா.''

''எங்கபா, யாரயும் காணல?''

''இன்னும் யாரும் எழுந்திருக்கல.''

''ஓ, நீயும் கூட இப்பதான் எழுந்திருந்திருப்ப போலிருக்கு.''

''ஆமாம்பா. அங்க எத்தன மணிக்குக் கிளம்பினீங்க? இவ்வளவு நேரத்துல வந்துட்டிங்க,'' என்று கேட்டான்.

''என் பேரக் குழந்தையப் பாக்கணுங்கற ஆவல். விட்டிருந்தா நடு ஜாமத்துல கூட வந்து நின்னிருப்பேன்,'' என்று தேவேந்திரன் சொல்லிக் கொண்டிருக்கவும், குழந்தையுடன் அவருடைய மனைவி கலைவாணி ஹாலுக்கு வரவும் சரியாக இருந்தது.

''வாங்க, இப்பதான் வந்தீங்களா?''

மனைவியின் கேள்வியெல்லாம் அவருடைய காதுகளுக் குள்ளும் சென்றிருந்தால் அல்லவா?

"அடடா, குடு குடு குடு..." என்று ஆசை பொங்க எழுந்து வந்து தனது பேரக் குழந்தையை வாங்கிக் கொண்டார் தேவேந்திரன்.

குழந்தையைப் பார்த்தவருக்கு சந்தோஷத்தில் நெஞ்சு நிறைந்து போனது.

ஆனந்தத்தில் அவருடைய கண்களும் கலங்கிப் போய் விட்டிருக்க, அது தாய் - மகன் கண்களிலும் படத் தவறி யிருக்கவில்லை.

பேச வார்த்தைகளே இல்லாததைப் போல, குழந்தை யின் அழகைக் கண்களால் ஆசை தீரப் பருகினார்.

"என்னங்க?"

"எங்க மருமக?"

"இதோ வர்றா," என்று அவர் சொல்லிக் கொண்டிருக் கும் போதே, சஞ்சனா தானும் ஹாலுக்கு வந்திருந்தாள்.

ஒரு விதப் பயத்தில் அவளுடைய உடலும் மனமும் பரபரத்தது.

"வாம்மா, எப்படியிருக்க?"

பிரம்மப் பிரயத்தனப்பட்டு வாயைத் திறந்தவள், "நல் லார்க்கேன் மாமா," என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

"இப்படிப் பண்ணிட்டயேம்மா, இது நியாயமா?"

............

அவ்வளவு நாளும் மகனிடம் எதையும் கேட்க முடியாத தாலோ என்னவோ, அதற்கெல்லாம் சேர்த்து வைத்து மருமகளிடம் கேட்டாரென்று கூடச் சொல்லலாம்.



உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் நின்றிருந்த மகனையும், கடவுளே! என்ன கேட்டு விடுவாரோ என்று கணவனையும் பயத்துடன் பார்த்த வண்ணம் நின்று விட்டிருந்தார் கலைவாணி.

அவருக்கே அப்படியென்றால், சஞ்சனாவின் நிலையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

"புருஷன் பொண்டாட்டிக்குள்ள ஆயிரம் இருக்கும். சரிதான். அதப் பத்தி யெல்லாம் நான் கேக்கல வரல. ஆனா போனா போகுதுன்னு எங்களயும் கூட நீ கொஞ்சம் நினைச்சுப் பாத்திருக்கலாமேம்மா!" என்றார்.

அவருடைய முகத்தைப் பார்த்துப் பேசும் தகுதி கூட இல்லாது போய் விட்டிருக்க, அப்படியே தரையைப் பார்த்தவாறு நின்று விட்டிருந்தாள் சஞ்சனா.

"நீ மட்டும் போய் நிம்மதியா இருந்துட்டியேன்னு நான் கேக்க வரல. ஆனா உங்கப்பாவுக்குக் குடுத்த வாக்கக் காப் பாத்த முடியாமப் போயிடுச்சேன்னு தினம் தினம் மனசுக் குள்ள நான் பட்ட வேதனை எனக்குத்தான தெரியும்..."

கண்கள் கலங்கி விட்டிருந்தன சஞ்சனாவிற்கு. தந்தை நோய்வாய்ப்பட்டதிலிருந்து, ஏன் ஆரம்பத்தி லிருந்தே கூட, தனக்கும், தந்தைக்கும் இவர்கள் எந்த அளவிற்கு ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்திருக்கிறார்களென்று நினைக்கத் தோன்றியது.

"நீயும் இந்தப் பச்ச மண்ண பூமிக்குக் கொண்டு வர்ற துக்கு மறு ஜென்மமல்லவா எடுத்திருப்ப! எப்படியோ கடவுள் புண்ணியத்துல எல்லாம் நல்லபடியா நடந்துடுச்சு.

"ஒருவேளை சரியான கவனிப்பு இல்லாம உங்க ரெண்டு பேர்ல யாருக்காவது ஏதாவது ஆபத்து வந்திருந்ததுன்னா... யோசிச்சுப் பாரு..."

அவருடைய அந்த வார்த்தைகள் அங்கிருந்த ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதத்தில் அசைத்து விட்டிருந்தன.

* * *

ஏன், சுரேந்திரனுமே கூட அதற்குப் பிறகு தான் அந்த மாதிரிக் கோணத்தில் யோசித்துப் பார்த்தான்.

அப்படி மட்டும் ஏதாவது நடந்திருந்தால்...

மனைவி தான் ஏதோ ஆதங்கத்தில் கிளம்பிச் சென்று விட்டிருந்தாள் என்றாலும், அவளுடைய இருப்பிடத்தையும் தெரிந்து வைத்துக் கொண்டு தான் பேசாமல் இருந்தது எவ்வளவு பெரிய தவறு.

''எனக்கு நீ வேற, அகிலா வேற இல்லமா. அந்த மாதிரிக் கோணத்துல நான் பாத்ததும் இல்ல. அதாவது இவ்வளவு நாளும். ஆனா நீ இப்ப பண்ணினது அப்படியெல்லாம் இல்ல. என்ன எதுவும் கேக்கற எந்த உரிமையும் உங்களுக்குக் கிடையாதுன்னு நீ சொல்லாம சொல்ற மாதிரியிருக்....''

அந்த வினாடியே, ''ஐயோ! அந்த மாதிரியெல்லாம் இல்ல மாமா...'' என்று சொன்னவளுக்கும் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத அளவிற்கு அழுகை வந்து விட்டிருந்தது.

''அச்சச்சோ! வேண்டாம்மா. பச்ச உடம்புக்காரி அழக் கூடாது...'' என்று கலைவாணி உடனே சொல்ல, முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் சஞ்சனா.

''இவ்வளவு நாளும் போனதெல்லாம் போகட்டும்மா. இந்தப் பச்ச மண்ணு நம்ம எல்லாரையும் மாத்திடும்.



அதுக்கு மட்டும் கொஞ்சம், ரொம்பவும் கொஞ்சம் நாம எல்லாரும் ஒத்துழைச்சாப் போதும்!'' என்று தேவேந்திரன் சொல்ல, தன்னைக் குறிப்பிட்டுத் தான் தந்தை அப்படிச் சொன்னாரென்பது சுரேந்திரனுக்கும் புரியாமல் இல்லை.

''சரி. இனி எல்லாரும் போய் வேலையப் பாருங்க,'' என்ற தேவேந்திரன், ''என்னடா செல்லக்குட்டி!'' என்று தனது பேரக் குழந்தையைக் கொஞ்ச ஆரம்பித்து விட்டிருந்தார்.

சில நிமிடங்களில் அனைவருக்கும் காபி எடுத்து வந்த கலைவாணி, முதலில் கணவனிடமிருந்து குழந்தையை வாங்கிக் கொண்டார்.

தொடர்ந்து சிறிது நேரத்தில் நிகிலாவும் எழுந்து வந்திருக்க, அதற்குப் பிறகு அனைத்தும் ஓரளவு சுமுகமாகி விட்டிருந்ததைப் போல உணர்ந்தாள் சஞ்சனா.

நிகிலாவிற்கும் சிறு குழந்தையைப் பார்த்ததில் அளவு கடந்த சந்தோஷம். குழந்தையைக் கீழே விடவே அவள் விட்டிருக்கவில்லை.

''அம்மா! சிரிக்கிறது பாருங்கள். அச்சச்சோ! இப்பொழுது தான் விழித்துக் கொண்டிருந்தது. அதற்குள் தூங்கி விட்டதே...'' என்றெல்லாம் அவளுக்கு வியந்து சொல்லிக் கொண்டே போக, குழந்தையைப் பற்றிய விஷயங்கள் நிறையக் கிடைத்துக் கொண்டே இருந்தன.

பார்க்கிறவரை பார்த்து விட்டுப், ''போதுண்டி. கொஞ்சம் பேசாமப் போ,'' என்று அதட்டி விட்டிருந்தார் கலைவாணி.

''ஏன் அத்தெ?'' என்று நாத்தனாருக்குப் பரிந்து வந்த சஞ்சனாவிடம், ''எல்லாமே ஒரு அளவு தான. விட்டா

இவளோட கண்ணே பட்டுடும் போலிருக்கு!'' என்று லேசான கோபத்துடன் சொன்னார்.

''போடா, இதுக்கு மேல நான் உங்கிட்ட வந்தா அப்புறம் என்ன என்னன்னு கேளு!'' என்று பொய்க் கோபத்துடன் அவளுடைய மருமகனைப் பார்த்துச் சொல்லி விட்டுப் போன நிகிலாவைப் புன்னகையுடன் பார்த்தாள் சஞ்சனா.

''பாவம் அத்தெ, இனிமேல் இப்படியெல்லாம் சொல்லாதீங்க,'' என்றாள்.

''சரிமா. நீ வந்து சாப்புடு.''

''நான் அப்புறமா...''

''அதுசரி, சாப்பாட்டக் கண்ல பாத்தே பல நாள் ஆன மாதிரி ஆள் பாக்க எந்த மாதிரி இருக்க தெரியுமா? உங்கிட்டயே ஒன்னுமில்லேன்னா குழந்தைக்கு என்ன கிடைக்கும். எழுந்து வா முதல்ல...''

அத்தையின் அக்கறையான அதட்டலில் உடனே எழுந்து சென்றிருந்தாள் சஞ்சனா.

அவள் அங்கு வந்திருந்த அந்த ஒரு சில நாட்களிலேயே அவளுடைய அத்தையின் கவனிப்பில் உடல் தேறிப் புது அழகு பெறத் தொடங்கி விட்டிருந்தாள்.

உடலோடு அவளுடைய மனமும் கூட மெல்ல மெல்லப் பழைய நிலைக்குத் திரும்பத் தொடங்கி விட்டிருந்தது.

சஞ்சனாவுடைய செல்வனால் இப்பொழுது வீட்டில் அனைவருடைய முகங்களிலுமே சிரிப்பு மலர ஆரம்பித்திருந்தது.



அதிலும் தனது அத்தையும் மாமாவும் குழந்தையின் மேல் செலுத்தும் பாசத்தையும் அக்கறையையும் பார்த்த வளுக்கு அதற்குப் பிறகு தான் இத்தனை நாளும் எவ்வளவு பெரிய தவறைச் செய்து வந்திருக்கிறோம் என்பதை முழுமையாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

அதிலும் முடிந்த அளவு பழைய நினைவுகளைக் கிளறாமல் எந்நேரமும் சிரித்த முகத்துடன் தன்னையும் சிரிக்க வைத்துக் கொண்டு இருக்கும் தனது அத்தைக்கும் தான் எவ்வளவு பரந்த மனதென்று மனதிற்குள் நினைத்து நினைத்து வியந்து போனாள் சஞ்சனா.

## 20

திருமணத்திற்குச் சென்றுவிட்டு அங்கிருந்து சுரேந்திரனின் செல்வனைப் பார்ப்பதற்காக அன்று மாலை அகிலாவின் புகுந்த வீட்டுச் சொந்தங்கள் அனைவரும் அங்கு வந்திருந்தார்கள்.

ஏன், தொடர்ச்சியாக அந்த மூன்று நாட்களும் கூட சொந்தபந்தங்கள் முதல் தெரிந்தவர் வரை அனைவரும் வந்து அந்த வீட்டின் பேரக் குழந்தையைப் பார்த்து விட்டுச் சென்ற வண்ணம் தான் இருந்தார்கள்.

ஒரு சிலர் வம்பு பேசவும் முயல, அதற்குத் தனது அத்தை துளியும் இடம் கொடுக்காததைக் கண்டாள் சஞ்சனா.

கடந்த ஒரு வருடத்தில் இப்படி இன்னும் எத்தனை பேரோ!

அதிலும் முன்னே விட்டுப் பின்னே பேசினால் என்று நினைத்தவளுக்குத் தனது புகுந்த வீட்டுச் சொந்தங்கள் அனைவரும் எந்த அளவிற்குப் பரந்த மனப்பான்மையுடன் இருக்கிறார்களென்று கண்களும் கூடக் கலங்கிப் போய் விட்டிருந்தன.

டிபனை முடித்துக் கொண்டு அன்று இரவே அகிலாவின் சொந்தங்கள் கிளம்பி விட்டிருக்க, அவர்களை வழியனுப்பி விட்டு அனைவரும் வீட்டிற்கு வந்தார்கள்.

''சரி. நான் போய் எக்ஸாமுக்குப் படிக்கணும்,'' என்று நிகிலா அவளுடைய அறைக்குச் செல்ல, குழந்தையின் அழுகுரலில் தாயும், மனைவியும் உள்ளே செல்வது தெரிந்தது.

சரிதான். தான் இன்னும் சிறிது நேரம் கழித்துப் போய்க் குழந்தையைப் பார்க்கலாமென்று, டி.வி.யைப் போட்டுக் கொண்டு சோபாவில் அமர்ந்து விட்டிருந்தான் சுரேந்திரன்.

அரைமணி நேரம் சென்றிருக்க, குழந்தையைப் பார்ப்பதற்காக எழுந்து உள்ளே வந்தான்.

மனைவி துணிகளை எடுத்துக் கொடுக்க, அதை வாங்கித் தனது மடியிலிருக்கும் குழந்தையின் ஈரத் துணிகளைத் தாய் மாற்றிக் கொண்டிருப்பது தெரிந்தது.

''வா சுரேன்.''

தாய் அழைக்க, ''என்னமா, தூங்கறானா?'' என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்திருந்தான்.

''இல்லல்ல, இப்பதான் பசியாறியிருக்கான். இன்னும் கொஞ்ச நேரம் ஆகும்பா,'' என்ற கலைவாணி, கட்டிலில் வந்து அமர்ந்திருந்த மகனிடம், அவனுடைய குழந்தையை எடுத்துக் கொடுத்தார்.



அவர்களுக்கு அருகில் நின்று கொண்டிருந்த சஞ்சனாவிற்குத் தான் தொடர்ந்து அங்கு நிற்க முடியாமல் ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

வேலை சாக்கில் வித்தியாசமாகத் தெரியாதபடி அடுத்த சில வினாடிகளிலேயே அவள் வெளியே சென்றிருக்க, அது கலைவாணியின் கருத்திலும் படத் தவறியிருக்கவில்லை. கூடவே அது முதல் முறையல்ல என்பதும்.

சிறிது நேரத்தில் குழந்தை தூங்க ஆரம்பித்திருக்க, தான் வாங்கிக் கொண்டார் கலைவாணி.

''ஏம்மா, தொட்டில்ல போடப் போறீங்களா?''

''இல்லப்பா. எனக்கு இனி குறைஞ்சது ஒரு ரெண்டு நாளைக்காவது ரெஸ்ட் வேணும். அந்த அளவுக்கு உன் பிள்ளை படுத்தறான். எனக்கொரு சின்ன உதவி பண்ண முடியுமாப்பா?''

''என்ன, சொல்லுங்க.''

கலைவாணிக்கும் இப்படித் தப்பித்துக் கொள்வதைத் தவிர வேறு வழி தெரிந்திருக்கவில்லை.

''உங்க ரூம்லயும் போய் ஒரு தொட்டிலக் கட்டி விட்டுடுப்பா. பகல்ல முழுக்க வேணும்னா நான் இந்தத் தொட்டில்ல போட்டுக்கறேன். நைட்ல உம் பொண்டாட்டியே பாத்துக்கட்டும். அவளுக்கு முடியலேன்னா நீ உதவி செய். எப்படியோ சமாளிச்சுக்கங்க.''

தாயின் முயற்சி புரிய, சிரித்துக் கொண்டான் சுரேந்திரன்.

சிறிது நேரத்தில் வந்த மருமகளிடமும் மகனிடம் சொன்னது போலவே சொல்லிவிட்டிருந்தார் கலைவாணி.

ஆனால் மகனைப் போல இல்லாமல் மருமகள் அதை அப்படியே நம்பி விட்டிருந்ததைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

''உடம்புக்கு என்ன பண்ணுது அத்தெ?''

''அதெல்லாம் ஒரு நாலு நாள் ரெஸ்ட் எடுத்தா சரியாப் போயிடும்மா!'' என்று மனமே இல்லாமல் தனது பேரக் குழந்தையை மருமகளிடம் கொடுத்தார்.

ஆனாலும் சமாதானமடையாமல் நின்று விட்டிருந்த மருமகளிடம், ''சரி போம்மா. குழந்த நல்லாத் தூங்கறான் பாரு. கொண்டு போய்த் தொட்டில்ல போடு.'' என்று அனுப்பி விட்டிருந்தார்.

சிறிதாகி விட்டிருந்த மருமகளின் முகத்தைப் பார்த்த வருக்கும் என்னவோ போலத்தான் இருந்தது.

ஆனாலும் இதைத் தவிர வேறு வழியில்லையே என்று விட்டு விட்டிருந்தார்.

வெகு நாட்களுக்குப் பிறகு தங்களுடைய படுக்கை அறைக்கு வந்திருந்த சஞ்சனாவிற்கு மனதிற்கு என் னவோ போலிருந்தது.

நேராகச் சென்று குழந்தையைத் தனது படுக்கைக்குப் பக்கமாகக் கட்டப்பட்டிருந்த தொட்டிலில் இட்டாள்.

பழைய நினைவுகள் வந்து நெஞ்சை அடைக்க, முயன்று முகத்தை இயல்பாக வைத்துக் கொண்டாள்.

கணவனும் தூங்கப் போவதற்காகப் படுக்கைக்கு வந்திருந்தது தெரிந்தது.

நல்ல வேளையாகத் தொடர்ந்து வந்த சில வினாடி களிலேயே படுத்தும் இருந்தான்.



கை போன போக்கில் குழந்தையின் துணிகளைப் பெயருக்கு எடுத்து வைத்துக் கொண்டிருந்தவள், பிறகு தானும் படுத்துக் கொண்டாள்.

அப்படிப் படுத்திருந்தவள் அந்த இரண்டு மணி நேரங்களில் தொட்டில் லேசாக ஆடினாலும் கூட எழுந்து எழுந்து பார்த்து விட்டு மீண்டும் படுத்த வண்ணம் இருந்தாள்.

அப்படி நான்கைந்து முறை கூட எழுந்து பார்த்திருப் பாள்.

வயிறு நிறையக் குடிக்க வெச்சுப் பழகிட்டா இப்படி பயந்துட்டு அப்பப்ப எழுந்து பாக்க வேண்டிய அவசிய மில்ல என்று தனது அத்தை சொன்னது தான் அப்பொழுது நினைவிற்கு வந்தது.

அப்படித் தானே குடிக்க வைத்திருக்கிறோம், பிறகு ஏன் இப்படி பயந்து எழுந்து பார்க்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டே படுத்தவள் தான், நன்றாகத் தூங்கியும் போய் விட்டிருந்தாள்.

மனைவி எழுந்து பார்த்துக் கொண்டே இருந்ததைச் சுரேந்திரனும் அறிவான்.

இப்பொழுதாவது நிம்மதியாகத் தூங்குகிறாளே என்று நினைத்தவனும், அதற்குப் பிறகு தான் தூங்க ஆரம்பித் திருந்தான்.

ஆனால் அதற்கு அவனுடைய செல்வன் விட்டாலல் லவா?

இப்பொழுது குழந்தை உண்மையிலேயே அழ, சில வினாடிகளில் விழித்திருந்தான் சுரேந்திரன்.

ஆனால் மனைவி நன்றாகத் தூங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

உடனே கட்டிலை விட்டு இறங்கியிருந்தவன், வேகமாகத் தொட்டிலுக்கருகில் வந்து தாய் சொல்லிக் கொடுத்ததைப் போலப் பிடித்துக் குழந்தையை வெளியே எடுத்தான்.

கையில் தூக்கியதிலேயே குழந்தை அழுகையை நிறுத்தியிருக்க அப்படியே குழந்தையுடன் படுக்கையில் வந்து அமர்ந்திருந்தான்.

கை கால்களை உதறித் தள்ளிக் கொண்டு கொட்டக் கொட்ட விழித்தபடி பார்த்த தனது செல்வனை ஆசை பொங்கப் பார்த்தான் சுரேந்திரன்.

குழந்தையின் அழகில் அப்படியே அணைத்துக் கொள்ள வேண்டும் போல மனம் பரபரத்தாலும், எங்கே வலித்து விடுமோ என்பதைப் போல மிருதுவாகப் பிடித்திருந்தான்.

ஆனாலும் குழந்தை பசிக்குத் தேடுவது தெரிய, திரும்பி மனைவியைப் பார்த்தான்.

அவள் நன்கு தூங்குவது தெரிய மேலும் சில நிமிடங்களும் கூடக் குழந்தையைக் கையிலேயே வைத்துச் சமாளித்துப் பார்த்தான்.

ஆனால் இப்பொழுது குழந்தை பசிக்கு மிகவும் தேட ஆரம்பித்திருக்க, மனைவியை எழுப்பினான்.

இரண்டு அழைப்பிலேயே கட்டிலில் எழுந்து அமர்ந்திருந்தாள் சஞ்சனா.

அப்படிப் படுக்கையில் எழுந்து அமர்ந்திருந்தவள் உடனே தொட்டிலைப் பார்த்தாள்.



குழந்தையை அங்கு காணாது திரும்பியவள், அதற்குப் பிறகு தான் கணவனின் கைகளில் இருப்பதைக் கண்டாள்.

"எப்படியோ தூங்கிட்டேன் போலிருக்கு. உங்களுக்கு சிர...."

அதற்குள் எழுந்து வந்து குழந்தையை மனைவியிடம் கொடுத்திருந்தான் சுரேந்திரன்.

மனைவியின் தயக்கம் புரிய, பால்கனிக்குச் செல்லத் திரும்பினான்.

நீங்க எங்கயும் போக வேண்டாம் என்று தொண்டை வரை வந்திருந்த வார்த்தைகள் அதற்கு மேல் வரத் தயங்கின.

கணவனுக்கு முன்பாகவே தான் விழித்திருந்தால் இப்படி அவன் வெளியே செல்ல வேண்டிய அவசியம் வந்தே இருக்காதே. இப்படித் தூங்கிப் போய் விட்டிருக்கிறோமே என்று ஒரு மாதிரியாகி விட்டிருந்தது சஞ்சனாவிற்கு.

வெளியே சென்று கணவனை அழைத்தால் என்ன வென்று நினைத்தவள், முதலில் குழந்தையின் பசியை ஆற்றிவிட்டு அதற்குப் பிறகு இப்படி வெளியே செல்ல வேண்டிய அவசியம் இல்லையென்று சொல்லிவிட வேண்டியது தானென்று நினைத்துக் கொண்டாள்.

அதே போலக் குழந்தையின் பசியை முதலில் ஆற்றினாள் சஞ்சனா.

பிறகு தோளில் போட்டுத் தட்டிக் கொடுத்து, ஈரம் செய்திருந்த துணிகளையெல்லாம் மாற்றிவிட்டுப் பிறகு மீண்டும் தொட்டிலில் இட்டாள்.

குழந்தை நன்கு தூங்கிவிட்டது தெரிய பால்கனிக்குச் சென்று தயக்கத்துடன் கணவனை அழைத்தாள்.

சில வினாடிகளில் உள்ளே வந்தவனிடம், ''இனிமேல் இப்படிப் போக வேண்டிய அவசியமில்ல. நான் பெட்ல திரும்பி உக்காந்து ஃபீட் பண்ணிக்குவேன்,'' என்று மெல்லிய குரலில் சொல்லி விட்டிருந்தாள்.

அதற்குப் பிறகு என்னதான் படுக்கையில் விழுந் திருந்தாலும் கணவன் மனைவி இருவருக்குமே தூக்கம் அருகில் கூட வந்திருக்கவில்லை.

# 21

அப்படியே ஒரு வாரமும் சென்றிருந்தது.

தன் நிலையை விளக்கிச் சொல்லி மனைவியிடம் மன்னிப்புக் கேட்க சுரேந்திரனும், பழையவற்றையெல் லாம் மறந்து கணவன் தன்னிடம் நல்லவிதமாகப் பேச மாட்டானா என்று சஞ்சனாவும் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கி விட்டிருந்தனர்.

ஆனாலும் ஒருவரின் மனதை மற்றொருவர் அறிந் திருக்கவில்லை.

மகனும் மருமகளும் ஆளுக்கொரு திசையில் பார்த் துக் கொண்டிருப்பதை வந்ததிலிருந்து கலைவாணியும் பார்த்துக் கொண்டு தான் இருந்தார். முக்கியமாக மருமகள்.



பாவம், மனைவி! அவளைத் துன்புறுத்த வேண்டாமே என்பதைப் போன்ற பாவனையில் மகன் நடந்து கொள் வதும்.

வேண்டுதலின்படி அன்று இரவு மூன்று நாள் பயண மாகக் கோவிலுக்குச் சென்று வருவதற்காக அனைத் தையும் எடுத்து வைத்துக் கொண்டிருந்தார் கலைவாணி.

பார்க்கிறவரை பார்த்து விட்டு மருமகளை அழைத் தார் கலைவாணி.

மற்றது எப்படியோ இப்பொழுது இருவருமே சமா தானத்தை விரும்புகிறார்கள் என்பது மட்டும் தெளி வாகத் தெரிந்தது.

''அத்தெ, சொல்லுங்க.''

''இன்னைக்கு சாயங்காலம் நான், மாமா, நிகிலா மூணு பேரும் நம்ம குல தெய்வக் கோவிலுக்குக் கிளம்ப றோம்மா. ரொம்ப நாளைய வேண்டுதல். அதனால இன்னும் தள்ளிப் போட வேண்டாமேன்னு பாக்கறோம். நாங்க திரும்பறதுக்கு மூணு நாள் ஆகும்.''

''சரி அத்தெ. போய்ட்டு நல்லவிதமா வேண்டுதல முடிச்சுட்டு வாங்க.''

''நீ இப்பதான் கொஞ்சம் கொஞ்சமா தேறிட்டு வர்ற. குழந்தையும் இப்பதான் புது இடத்துல பழகியிருக் கான். அதனால உங்களுக்கு இப்ப அவ்வளவு தூரப் பயணம் வேண்டாம். எப்படியும் குழந்தைக்கு இன்னு மொரு ஆறு மாசத்துல முதல் முடி கொடுக்கணுமே. அதுக்கு வேணும்னா இன்னொரு முறை எல்லாருமே போய்ட்டு வந்துடலாம்.''

"சரி அத்தெ."

"அப்புறம்..."

"சொல்லுங்க அத்தெ"

"பிரச்சன எதுவானாலும் முதல்ல பொண்ணுங்க விட்டுக் குடுக்கலாம்மா. அதுல ஒன்னும் தப்பில்ல. இத்தன நாளும் ஏதேதோ நடந்துடுச்சு. அதையெல்லாம் பெரிசா எடுத்துப் பேசறதுனால ஒரு பலனும் இல்ல. ஆனா இனிமேல் எல்லாப் பிரச்சனையும் சரியாகி எல்லாரும் சந்தோஷமா இல்லேன்னாக் கூடப் பரவாயில்ல, நிம்மதியா இருக்கணுமா வேண்டாமா?"

ஆமாம் என்பதைப் போலத் தலையை ஆட்டினாள் சஞ்சனா.

"நான் எதுக்காகச் சொல்றேன்னு புரியும்னு நினைக்கறேன். உங்க ரெண்டு பேருக்குள்ள இனி என்ன பிரச்சனையோ எங்களுக்குத் தெரியாது. ஆரம்பத்துல அவன் மேல தப்பிருந்தாலும், யாரப் பத்தியும் நினைச்சுப் பாக்காம நீ கிளம்பிப் போனியே, அது நீ பண்ணின ரொம்பப் பெரிய தப்பு."

............

"அதெல்லாம் இப்ப வேண்டாம்மா. போனதெல்லாம் போகட்டும். நீ கிளம்பிப் போனதுக்கப்புறம் சுரேனும் ஒன்னும் நிம்மதியா இருந்துடலமா. ஏன், நரக வேதனையை அனுபவிச்சான்னு கூட சொல்லலாம்."

"பேச்சு வாக்குல கூட ஒரு தடவ எம் மேலதான் எல்லாத் தப்பும்னு வருத்தத்தோட சொல்லிக்கிட்டான். இப்ப நீ மட்டும் மனசு வெச்சா எல்லாப் பிரச்சனையும் சரியாயிடும்."



"சரி அத்தெ."

"அவன் என்னைக்குமே ரோஷம் கொஞ்சம் அதிகம் பாக்கறவம்மா. பொண்டாட்டி நீயே புரிஞ்சுக்கிட்டுப் போகலேன்னா எப்பிடி. நீ கிளம்பிப் போனதே உம் புருஷனோட தன்மானத்துக்கு ரொம்பப் பெரிய அடிதான். போதும். இதுக்கு மேலயும் அவனுக்கு எந்த தண்டனையும் குடுக்காத."

எதுவும் பேச முடியாமல், அதாவது பேசத் தோன்றாமல் தனது அத்தையைப் பார்த்தாள் சஞ்சனா.

அன்றும் சரி, இன்றும் சரி, தான் எப்பொழுதுமே சிறிதளவு கூட ரோஷம் பாராட்டியதில்லையே.

கணவனுடைய அன்பிற்காகவும் ஆறுதல் வார்த்தைகளுக்காகவும் மனதிற்குள் தான் தவிக்கும் தவிப்பைப் பற்றி என்ன தெரியும் இவருக்கு.

எடுத்துச் சொன்னாலும் கூடப் புரியுமாமா?

ஏன், அவ்வளவு அன்பு வைத்திருப்பவன் ஒரு வருடத்திற்குப் பிறகு பார்க்கும் மனைவியிடம் ஒரு வார்த்தை பேசினால் ஆகாதாமா?

ஏதேதோ எண்ணங்கள் முட்டி மோதினாலும் எதிரில் நின்று தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் அத்தைக்காக முயன்று முகத்தை இயல்பாக வைத்துக் கொண்டாள்.

"என்னமா, நான் எதுவும் தப்பா..."

"அச்சச்சோ! இல்ல அத்தெ. நிச்சயம் இனிமேல் எல்லாத்தையும் புரிஞ்சு நல்லவிதமா நடந்துக்கறேன்."

"சந்தோஷம் கண்ணம்மா. உன் தங்கமான குணத் துக்கு எல்லாமே நல்ல விதமா தான் அமையும்!" என்று உணர்ந்து சொன்னவர், "சரிமா. குழந்த என்ன பண் றானோ, போய்ப் பாரு. நான் எல்லாத்தையும் எடுத்து வைக்கறேன்," என்று மருமகளை அனுப்பினார்.

சிறிது நேரத்தில் வெளியே சென்றிருந்த அந்த வீட்டு ஆண்கள் இருவரும் மதிய உணவுக்கு வர, தானே சென்று பரிமாறினாள் சஞ்சனா.

உணவு முடிந்து கணவனும், மாமனாரும் எழுந்து செல்ல, "சரி, இனி நாம சாப்பிடலாம் அத்தெ," என்று சென்று தனது அத்தையை அழைத்தாள்.

"நிகிலா எங்கமா?"

"பின்னாடி இருந்தா அத்தெ. போய்க் கூப்பிட்டு வர்றேன். வாங்க."

அதே நேரம், "அடடா! இன்னும் மூணு நாளைக்கு உன்னப் பாக்காம எப்பிட்றா இருக்கப் போறேன்?" என்று தேவேந்திரன் வந்து குழந்தையைக் கையில் எடுத் திருக்க, "சரி. அப்பப் பாத்துக்கோங்க. நாங்க எல்லாரும் சாப்டுட்டு வந்துடறோம்," என்று மருமகளுடன் தானும் வந்தார் கலைவாணி.

"அண்ணி, சாப்பிடலாமா?" என்று நிகிலாவும் வர, "வா நிகிலா. உன்னக் கூப்பிடத் தான் நானும் வந்தேன்," என்றாள் சஞ்சனா.

ஏற்கெனவே முடிவு செய்தது போல மூன்று மணிக்குக் கோவிலுக்கு செல்வதற்காகத் தாய் தந்தையும், தங்கையும் கிளம்பியிருக்க, அவர்களை வழியனுப்பி விட்டு வருவதற்காகத் தானும் உடன் சென்றான் சுரேந்திரன்.

கார் கிளம்பியதும் வீட்டிற்குள் வந்த சஞ்சனாவிற்கு, அடுத்த மூன்று நாட்களும் கணவனுடன் தான் மட்டும் தனியாக இருக்க வேண்டுமே என்ற எண்ணமே ஒரு வித இனம் புரியாத பயத்தைக் கொடுத்தது.

ஆனாலும் தனது அத்தை சொல்வதை வைத்துப் பார்த்தால், கணவனும் பாவம் தானோ, மிகவும் சிரமப் பட்டு விட்டானோ என்று நினைக்கத் தோன்றியது.

சரிதான், படட்டுமே என்று நினைத்தவள் உடனே அப்படி நினைத்ததற்காகத் தன்னையே நொந்து கொண் டாள்.

கணவன் ஆள் பார்க்கவே சற்று இளைத்து, அதாவது முன்பு இருந்த அந்த நிமிர்வு இல்லையோ என்று நினைக்கத் தோன்றியது.

ஏன், எப்பொழுதும் கல்லைப் போல இறுகிக் கிடக்கும் அந்த முகத்தில், பழைய சிரிப்பும் ஒரு வித இளக்கமும் என அனைத்துமல்லவா இப்பொழுது சுத்தமாகக் காணா மல் போய் விட்டிருக்கின்றன.

குடும்பத்தில் நடக்கும் ஒரு சிறு பிரச்சனை கூட மற்றவர்களுக்குத் தெரியக் கூடாதென்று நினைப்பவன், இனி என்ன நடந்ததோ, கட்டிய மனைவியே அவனை விட்டு ஓடிப் போய் விட்டாளென்று மற்றவர்கள் சொல் லக் கேட்கும் போது என்ன பாடுபட்டிருப்பான்.

அவனுக்குள் எந்த அளவிற்குத் துடித்துப் போயிருப் பான்.

யோசிக்காமல் தான் செய்ததும் தான் எவ்வளவு பெரிய தவறு! ஏன் அப்படித் தானென்று தனது அத்தையே சொல்லவில்லை?

நல்ல பெண்ணென்று திக்கற்று நின்ற தன்னை அவர்களுடைய மகனுக்குத் திருமணம் செய்து அந்த வீட்டின் மருமகளாக்கிக் கொண்ட பெரியவர்களுக்குத் தான் செய்தது எந்த விதத்தில் நியாயமாகும்? அவர் களுடைய குடும்ப கௌரவத்திற்கும் அது எவ்வளவு பெரிய அடி.

அப்பிடியிருந்தும் கூட அதைச் சுட்டிக்காட்டி யாரும் மறந்தும் கூட ஒரு வார்த்தை பேசி விடவில்லையே.

அப்படி அவர்கள் நடந்து கொண்டதும் தன்னுடைய கணவனின் முகத்திற்காகவே அல்லவா?

இதுவே அவர்களுடைய இடத்தில் வேறு யாரேனும் இருந்திருந்தால், அதற்கு மேல் சஞ்சனாவால் நினைத் துக் கூடப் பார்க்க முடியவில்லை.

என்னதான் தொடக்கத்தில் தவறு முழுவதும் தனது கணவனின் மேல் மட்டுமே இருந்திருந்தாலும் கூட, அதற்குப் பிறகு தான் செய்தது அவற்றையெல்லாம் ஒன்றுமே இல்லையென்பதைப் போல ஆக்கி விட்டதே.

அனைத்தையும் சகித்துச் சமாளித்துக் கொண்டு தொடர்ந்து குடும்பத்திற்குள்ளேயே இருந்திருந்தால் எப்படியோ, ஆனால் எதைப் பற்றியும் யோசிக்காமல் வெளியே கிளம்பிச் சென்று விட்டிருந்த தனக்கு இனி மேலும் ரோஷம் பாராட்டும் உரிமை இல்லை.

முக்கியமாகக் கணவனிடம்.



அனைத்திற்கும் மேலாக இரவெல்லாம் தூங்காமல் கணவன் படும் அவஸ்தையைக் கடந்த சில நாட் களாகத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்தவளுக்குத், தான் செய்து கொண்டிருக்கும் தவறு முழுமையாகப் புரிந்தது.

இனிமேல் தான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதும்.

கணவனுடன் அமர்ந்து இரவு உணவை முடித்துக் கொண்டு விட்டிருந்த சஞ்சனா, குழந்தையையும் பசியாற்றித் தொட்டிலில் இட்டிருந்தாள்.

வெளியே நன்கு மழை பெய்து கொண்டிருப்பது தெரிந்தது.

மண் வாசனையும், குளிர்ந்த காற்றும் மனதை என்னவோ செய்தன.

கணவன் ஹால் சோபாவில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

எவ்வளவு மெதுவாகச் செய்தும் சமையலறையில் அனைத்தையும் ஒதுக்கி வைத்து முடித்திருந்தாள்.

மேலும் சிறிது நேரமும் கூட அங்கேயே அமர்ந் திருந்தவள், பிறகு எழுந்து படுக்கையறைக்கு வந்திருந் தாள்.

குழந்தை நல்ல உறக்கத்திலிருப்பது தெரிந்தது.

வயிறு நிறையப் பசியாறத் தொடங்கி விட்டிருந்த தால், இப்பொழுதெல்லாம் அழுகை குறைந்து குழந்தை தூங்கும் நேரமும் கூட அதிகமாகி விட்டிருந்தது.

அதனால் முன்பு போல அடிக்கடி எழுந்து பார்க்க வேண்டுமென்ற பயமின்றி, சஞ்சனாவும் நிம்மதியாக உணர்ந்தாள்.

சற்று அழுதாலும் தவறில்லை. எல்லா அழுகையுமே பசிக்காகத் தானென்று நினைத்து விடக் கூடாதென்று தனது அத்தை நிறைய சொல்லிச் சொல்லி இப்பொழுது சில நாட்களாகப் பயம் துளியுமின்றிக் குழந்தையைக் கையாளவும் தொடங்கி விட்டிருந்தாள்.

ஏதோ அரவம் கேட்கத் திரும்பியவள், கணவன் உள்ளே வந்து கொண்டிருப்பதைக் கண்டாள்.

ஏனோ முன்பு போல நெஞ்சில் பயம் தோன்றாத தோடு, உடல் முழுக்க ஒருவிதப் பரபரப்பும், ஆவலும் கூட எழுவதை உணர்ந்தாள்.

கணவன் படுக்கப் போவது தெரிய, திரும்பி அவனைப் பார்த்தாள்.

''ஆயின்மெண்ட் ஏதாவது இருக்கா...?''

தயக்கத்துடன் தான் என்றாலும் வாயைத் திறந்து கேட்டே விட்டிருந்தாள் சஞ்சனா.

''எதுக்கு?''

''எனக்குத் தான். காலைல கொதிக்கற குக்கர் பட்டதுல ஒரு சின்னக் காயம்...''

நேராகச் சென்றவன், ஆயின்மெண்ட்டுடன் திரும்பி வந்திருந்தான்.

''எங்க, காட்டு...'' என்று அருகில் வந்திருந்த கணவனிடம், வலது முழங்கைக்கு உள் பக்கமாக இருந்த காயத்தைப் படபடப்பைத் தனக்குள் மறைத்துக் கொண்டு காட்டினாள் சஞ்சனா.

அப்படியொன்றும் காயம் பெரிதாக இருக்கவில்லை என்பதும் கூட அவளுடைய படபடப்பிற்கான ஒரு காரணமே.

''பாத்து செஞ்சிருக்கலாமே!'' என்றவன், அவனே காயத்திற்கும் மருந்திட்டான்.

கணவனின் கை பட்ட இடம் குறுகுறுவென்றிருக்க, அதை மறைக்க சஞ்சனா சற்றும் முயன்றாள் இல்லை.

என்னதான் மனைவியின் நிலை அவனுக்கும் புரியவே செய்தாலும், ஏதோ ஒரு விதத் தயக்கம் வந்து அவனைத் தடுத்து விட்டிருந்தது.

உணர்ச்சி வேகத்தில் அங்கிருந்து திரும்பப் போன கணவனின் கையைப் பிடித்திருந்தாள் சஞ்சனா.

ஒரு விதத்தில் அதை எதிர்பார்த்தே இருந்த சுரேந்திரனும், நின்று மனைவியைத் திரும்பிப் பார்த்தான்.

மனைவியின் மிருதுவான பிடி அவனையும் என்னவோ செய்தது.

ஆனாலும் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அங்கிருந்து நகர்ந்திருந்தான்.

வெட்கத்தை விட்டுத் தான் இறங்கிப் போயும் கூட கண்டுகொள்ளாமல் சென்ற கணவனின் உதாசீனத்தில் சஞ்சனாவின் கண்கள் கலங்கி விட்டிருந்தன.

அப்படியானால் கணவனுக்கு இன்னும் தன் மேல் கோபமென்று தானே அர்த்தம்.

ஏனோ ஆரம்பத்திலிருந்து நடந்ததெல்லாம் நினைவிற்கு வந்துவிட, அதற்குப் பிறகு முழுமையாக உடைந்து போய் விட்டிருந்தாள் சஞ்சனா.

சுரேந்திரன் அப்படிச் சென்றதற்கும் காரணம் இருக்கவே செய்தது. மதியம் மனைவியிடம் அவனுடைய தாய் சொன்னதையெல்லாம் அவனும் கேட்க நேர்ந்ததே அது.

மற்றப்படி மனைவிக்காகவும், அவளுடைய அன்பிற்காகவும் ஏங்கிக் கொண்டிருப்பவனுக்கு, அவளே இறங்கி வேறு வருகிறாளென்றால் சொல்லவும் வேண்டுமா?

மனைவியின் அன்பு, அணைப்பு ஏன் அவளிடம் அவன் இன்னும் எவ்வளவோ எதிர்பார்த்தான், எதிர்பார்த்துக் கொண்டும் இருக்கிறான்.

ஆனால் அதை மனைவி அவளாகவே தர வேண்டும் அல்லது தான் தன் நிலையை எடுத்துச் சொல்லி அவளுக்குப் புரிய வைப்பதால் அது நடக்க வேண்டும்.

அப்படியில்லாமல் மற்றவர்கள் சொல்லி - அது அவனுடைய தாயே என்றாலும் - அதைச் சுரேந்திரனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அது ஏனோ அவனுக்கு ஒரு மாதிரியாகப் பட்டது.

அதாவது, மனதைப் பொருட்படுத்தாமல் வெறும் உடலுக்காகப் பார்ப்பது போல...

ஆனால்,

திரும்பி மனைவியைப் பார்த்தான்.



அதை எப்படி இப்பொழுது மனைவிக்குப் புரிய வைப்பது என்று தெரியாமல் தவித்தான்.

எவ்வளவு ஆசையுடனும், ஆவலுடனும் பார்த்தாள்.

அதற்குத் தனது தாயின் வார்த்தைகள் மட்டுமே தான் காரணமா?

அது மட்டும் காரணமாக இருக்காது என்றே அவனுக்குத் தோன்றியது.

அப்படித்தான் என்றால் இப்பொழுது ஏன் அவள் கண் கலங்க வேண்டும்?

திரும்பிப் பார்த்தவனுக்கு அழுகையில் மனைவியின் உடல் குலுங்குவது தெரிந்தது.

மனைவி திரும்பி வந்த நாளிலிருந்து நடந்தவற்றையெல்லாம் ஒருமுறை வேகமாக நினைவு படுத்திப் பார்த்தான்.

மற்றவர்கள் சொல்வதற்காக மட்டும் மனைவி பார்க்கவில்லையென்பது நூற்றுக்கு இருநூறு சதவிகிதமாகவே தெளிவாகியிருந்தது.

பாவம் மனைவி, தான் ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறோமென்று இப்பொழுது சுரேந்திரனுக்கு அவன் மீதே கோபம் வந்தது.

ஏற்கெனவே தன்னால் எவ்வளவோ துன்பங்களை அனுபவித்து விட்டிருந்த மனைவிக்காக இப்பொழுது அவனுடைய உள்ளம் உருக ஆரம்பித்திருந்தது.

நாம் இன்னும் ஒரு வருடத்திற்கு முன்பு இருந்தது போலவே தான் இருப்பதாக எண்ணி அவளுடைய மனம் என்ன பாடு பட்டுக் கொண்டிருக்கும்.

எழுந்து மனைவியின் அருகில் சென்றிருந்தவன், அவள் அருகில் படுக்கையில் அமர்ந்திருந்தான்.

ஏதோ அரவம் உணர்ந்து திரும்பிப் பார்த்த சஞ்சனா விற்கு, அதற்குப் பிறகு தான் கணவன் தன்னருகில் வந்து அமர்ந்திருந்தது தெரிந்தது.

தனது கையைத் தொட்டிருந்த கணவனின் ஸ்பரி ஸத்தில் எழுந்து அமர்ந்திருந்தாள்.

எங்கே விட்டால் கதறி விடுவோமோ என்பதைப் போன்ற மனநிலையிலிருந்த சஞ்சனா அப்படியே குனிந்த படி அமர்ந்து விட்டிருந்தாள்.

இத்தனைக்கும் பிறகும் கூட ஏதோ போனால் போகி றது என்று மட்டும் தான் தன்னை ஏற்க முடிகிறதாக்கும் என்று நினைத்தவளுக்கு ஆதங்கத்தில் அழுகை வரப் பார்த்தது.

ஆனாலும் உதட்டைக் கடித்துத் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

குனிந்தபடி அமர்ந்திருந்த மனைவியின் முகவாயைத் தொட்டுத் தூக்கினான் சுரேந்திரன்.

''சஞ்சு...''

.........

''இங்க பாருமா..''

''ஸாரி, நான் கொஞ்சம் முன்னாடி யோசிக்காம அப் பிடி...''

''ப்ளீஸ்... வேண்டாம்மா...''

மீண்டும் தன்னைத் தொட வந்த கணவனிடமிருந்து வேகமாக விலகியிருந்த சஞ்சனா, ''தயவுசெஞ்சு என்ன விட்டுடுங்க. எனக்கு எதுவுமே பிடிக்கல. என்னால எதுவுமே முடியலையே அம்மா!'' என்று தன் பாட்டுக்குக் கைகளில் முகம் புதைத்து அழவே தொடங்கி விட்டிருந் தாள்.



மனைவியின் வேதனை அவனுடைய நெஞ்சைக் கசக்கிப் பிழிய, தன்னை இயல்பாக வைத்துக் கொள்ளச் சுரேந்திரனும் சற்று சிரமப்பட்டுத் தான் போனான்.

ஒரு சில வினாடிகளுக்குள் ஓரளவு சமாளித்துக் கொண்டு நிமிர்ந்து தன்னைப் பார்த்த மனைவியின் பார்வையைத் தானும் சந்தித்தான் சுரேந்திரன்.

அடிபட்ட மானின் வேதனை மனைவியின் கண் களில் தெரிய, துடித்துப் போனான்.

''உங்களுக்கும், எனக்கும் கல்யாணப் பேச்சு எடுத்த நாள்ல இருந்தே நான் உங்ககிட்ட எதிர்பாக்கறது உங்க அன்பையும், ஆறுதலான சில வார்த்தைகளையும் தான்.

''அது எப்படி சுரேன் ரொம்ப ஆசையோடவும், எதிர் பார்ப்புகளோடவும் நான் நெருங்கும் போதெல்லாம் என்னக் காயப்படுத்த உங்களால முடியுது?

''விவரம் தெரிஞ்ச நாள்ல இருந்து என் மனசறிஞ்சு ஒரு சின்னத் தப்பக் கூட நான் செஞ்சதில்ல சுரேன்.

''ஆனாலும் கடவுள் ஏன் என்ன இந்த மாதிரியெல் லாம் சோதிக்கறார்னு தெரியலையே! ஒருவேள இந்த மாதிரி குழந்தையா இருக்கும் போது, இல்ல அம்மா வயித்துல இருக்கும் போதே, ஏதாவது பெரிய தப்புப் பண்ணியிருப்பேன்னு நினைக்கறேன்.

''எதிர்பார்த்து ஏமாந்து போறதோட வலி ஒன்னும் எனக்கும் புதுசில்ல தான். ஆனாலும்...''

மீண்டும் அழுகையில் உடல் குலுங்கிய மனைவியைச் செய்வதறியாது பார்த்த சுரேந்திரனுக்கும் யாரோ கத்தி கொண்டு மாறி மாறி நெஞ்சிலேயே செருகுவதைப் போல இருந்தது.

கண்களைத் துடைத்துக் கொண்டு மீண்டும் நிமிர்ந்தவள், ''வேண்டாம். இனிமேலும் வாழ்க்கைல நான் எதையுமே எதிர்பார்க்க மாட்டேன். ஏன்னா இனியும் ஏமாற்றத்தத் தாங்கிக்கற சக்தி எனக்கு இல்ல!'' என்று விட்டுக் கட்டிலை நோக்கி வந்தாள்.

ஏனோ அதற்கு மேல் மனைவியை நெருங்கும் சக்தி அப்பொழுது சுரேந்திரனுக்கும் இருக்கவில்லை.

மனைவியின் நடையில் தெரிந்த தடுமாற்றம் அவனை என்னென்னவோ எண்ண வைத்து விட்டிருந்தது.

என்னதான் படுக்கையில் சென்று விழுந்திருந்தாலும் சஞ்சனாவின் எண்ண அலைகள் ஆழிப் பேரலைகள் போல நெஞ்சுக்குள் குமுறிக் கொண்டிருந்தன.

ஒரு வருடப் பிரிவும் கூடக் கணவனிடம் எந்த ஒரு மாற்றத்தையுமே ஏற்படுத்தவில்லையென்றால் தான் எந்த அளவிற்குத் துரதிர்ஷ்டசாலியாக இருக்க வேண்டுமென்று தோன்றியது.

அதற்குள் இந்த அப்பாவி மனம் எந்த அளவிற்குப் பேராசைத்தனமான கற்பனைகளுக்கெல்லாம் இடம் கொடுத்து விட்டது என்றும்.



கணவனும் புரண்டு படுத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

சரிதான், பிடிக்காத மனைவியுடன் ஒரே கட்டிலில் படுத்துத் தூங்க அவனுக்கும் பாவம் சிரமமாகத் தானே இருக்கும்.

ஏதேதோ எண்ண ஓட்டங்களின் தாக்கத்தில் வெகு நேரத்திற்குப் பிறகே தூங்கிப் போனாள் சஞ்சனா.

## 22

காலையில் அவள் விழித்து எழுந்த போது தொட்டிலில் குழந்தை இருக்கவில்லை. அருகில் கணவனும்.

ஹாலுக்குச் சென்று பார்த்தவளுக்கு அங்கு தென்பட்ட காட்சி ஏனோ அப்படியே மனதில் பதிந்து போய் விட்டிருந்தது.

குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டபடி, எங்கோ இலக்கின்றி வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் அவளுடைய கணவன் சுரேந்திரன்.

இந்த மாதிரியான ஒரு பார்வையை அவள் கணவனிடம் என்றுமே கண்டதில்லை.

அதாவது சோகமாக, சோகமாக என்பதை விடப் பாவமாக என்று சொன்னால் சரியாக இருக்கும்.

சில வினாடிகள் தான், மீண்டும் உள்ளே வந்திருந்தாள் சஞ்சனா.

கணவனின் அந்தப் பார்வை அவளையும் மனதளவில் அசைத்து விட்டிருந்ததென்றால் அது சற்றும் மிகையல்ல.

வேகமாகச் சென்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வந்தவள் அப்பொழுதும் கணவன் குழந்தையை அணைத்துக் கொண்ட படியே அமர்ந்திருப்பதைக் கண்டாள்.

ஆனால் இப்பொழுது பேப்பர் படித்துக் கொண்டிருந்தான்.

முதலில் காபி கலக்கிக் கொடுக்கலாமென்று நேராகச் சமையலறைக்குச் சென்றாள்.

இரவெல்லாம் கணவன் தூங்காமல் புரண்டு கொண்டிருந்தது தான் நினைவிற்கு வந்தது. இப்பொழுதும் நேரத்திலேயே எழுந்து விட்டிருந்த குழந்தையை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறானென்றால்,

கூட்டிக் கழித்துப் பார்த்தால் இரவு ஏன் சிறிது நேரம் கூடக் கணவன் தூங்கியிருக்கவில்லையென்பது தெளிவானது.

அவன் நிம்மதியாகத் தூங்கிப் பல நாட்களாகி விட்டதென்று அத்தை ஒரு முறை சொன்னதும் அப்பொழுது நினைவிற்கு வந்தது.

சில நிமிடங்களில் கணவனுக்குக் காபியைக் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வந்தவள், பிறகு காலை டிபன் வேலையைக் கவனிக்கத் தொடங்கிவிட்டிருந்தாள்.

இடையில் வந்து பசிக்கு அழும் குழந்தையைப் பசியாற்றித் தொட்டிலில் இட்டு விட்டுச் சென்றாள்.



வழக்கம் போல ஒன்பது மணிக்குக் கடைக்குக் கிளம்பி விட்டிருந்த கணவனுக்கு வந்து உணவு பரிமாறினாள்.

அவன் சாப்பிட்டு எழுந்திருக்கவும், ''வாணிமா...'' என்று அழைத்துக் கொண்டே ஒரு வயதான பெண்மணி வீட்டிற்குள் வரவும் சரியாக இருந்தது.

வாஷ் பேஸினில் கைகளைக் கழுவித் துடைத்துக் கொண்டே வந்த சுரேந்திரன், ''வாங்கமா!'' என்று அவரை வரவேற்றுக் கொண்டே வந்தான்.

''வரலாம்பா. எங்க கடைக்குக் கிளம்பிட்ட போலிருக்கு?''

''ஆமாம்மா. உக்காருங்க,'' என்ற கணவனைத் தொடர்ந்து, தானும், ''வாங்க! உக்காருங்க!'' என்று வரவேற்றாள் சஞ்சனா.

''ஒரு நிமிஷம். இதோ வர்றேன்,'' என்று சுரேந்திரன் உள்ளே செல்ல, சோபாவில் அமர்ந்தவரிடம், ''நான் உங்களப் பாத்ததில்லையே! நீங்க எப்படிச் சொந்தம்?'' என்று விசாரித்தாள் சஞ்சனா.

''நான் சுரேனோட அம்மாவுக்கு அக்கா முறை,'' என்றவர், ''நீ எப்ப வந்த?'' என்று கேட்டார்.

''பத்து நாளாச்சு!'' என்று மெல்லிய குரலில் சொன்னவளிடம், ''எல்லாரும் எங்க?'' என்று கேட்டார்.

சஞ்சனா விவரம் சொல்ல, ''நீ போனப்ப வேண்டினதாத் தான் இருக்கும்,'' என்று எரிச்சலை மறைக்கக் கூட முயலாது சொன்னவரைப் பார்த்தாள் அவள்.

''ஆமா, எதுக்கு அப்படி யார் கூடவும் சொல்லாமக் கொள்ளாமக் கூட பெரிய இவ மாதிரி கிளம்பிப் போன?

இப்ப எந்த மூஞ்சிய வெச்சுக்கிட்டுத் திரும்பவும் வேற வந்திருக்க?"

.............

"உன்ன மாதிரி ஒருத்திக்கு வாழ்க்கை குடுத்தது மில்லாம எவ்வளவு அன்பாவும், ஆதரவாவும் கூட நடந்துக்கிட்டாங்க. அந்த நன்றியுணர்ச்சி நூத்துல ஒரு சதவீதம் இருந்திருந்தா அப்படி ஓடிப் போயிருப்பியா?

"எந்தக் குடும்பத்துக்குள்ள பிரச்சனைகள் இல்லாம இருக்கு? எந்தப் புருஷன் பொண்டாட்டிக்குள்ள கருத்து வேறுபாடு இல்லாம இருக்கு? அதுக்கெல்லாம் ஓடிப் போறது தான் ஒரே தீர்வுன்னா இன்னைக்கு நூத்துல தொண்ணூறு சதவிகிதம் பேர் உன்ன மாதிரி தான் செஞ்சுட்டிருக்கணும்.

"எம்மருமக கீது இப்படி ஓடிப் போய்ட்டுத் திரும்பி வந்திருந்தா இப்படியெல்லாம் திரும்பவும் வீட்டுக்குள்ள வெச்சு அழகு பாத்துட்டிருந்திருக்க மாட்டேன். அப்ப டியே செருப்பாலடிச்சுத்தான் துரத்தி விட்டிருப்பேன்."

கண்கள் அதன் பாட்டிற்குக் கலங்கிப் போய்விட் டிருக்க, உதட்டைக் கடித்து அழுகையைக் கட்டுப்படுத் திக் கொண்டு நின்றிருந்தாள் சஞ்சனா.

"பெத்தவங்க இருந்து வளத்திருந்தா அது வேற. இதுதான் அநாத மாதிரி வந்ததாச்சே. அப்படி என்ன உலகத்துல இல்லாத அதிசயம் உங்கிட்ட இருக்குதுன்னு இனி உன்னப் புடிச்சுட்டு வந்தாங்களோ தெரியல.

"குடும்பம்னா பிரச்சனைகளும் சகஜம் தான். பொம் பளைங்க தான் விட்டுக் குடுத்துப் போகணும். எங்காவது



இன்னொரு தடவ ஓடிப் போயிடாதம்மா. பாவம், ஏற்கெனவே குடும்பத்துலிருக்கற ஒவ்வொருத்தங்களும் படாதபாடு பட்டுட்டாங்க. எவ்வளவு செல்வாக்கான குடும்பம். இப்படித் தல குனிய வெச்சுட்டயே.

"எங்க போற?"

உள்ளே செல்லப் போன சஞ்சனா திரும்பி அவரைப் பார்த்தாள்.

"உங்களுக்குச் சாப்பிடறதுக்..."

"உங்கையாலயா..." என்று ஏளனமாகச் சிரித்தவரைப் பார்த்த சஞ்சனாவிற்கு, நிற்க முடியாமல் கை கால்க ளெல்லாம் நடுங்கத் தொடங்கிவிட்டிருந்தன.

உண்மையிலேயே தான் செய்தது எவ்வளவு பெரிய தவறென்று மனதிற்குள் கூனிக் குறுகிப் போனாள்.

அந்தக் கோபத்தில் தான் நேற்று இரவு கணவனும் கூட அப்படி நடந்து கொண்டானோ?

மற்றவர்களே இப்படியென்றால், இன்னும் நெருங்கிய எத்தனையெத்தனையோ சொந்தங்கள் எல்லாம் எப்படி யெல்லாம் பேசியிருப்பார்கள்.

அப்பொழுது இந்தக் குடும்பத்து அங்கத்தினரின் மனதெல்லாம் என்ன பாடு பட்டிருக்கும், எப்படித் துடித்துப் போயிருக்கும்.

ஆனாலும் அந்தக் கோபத்தை வெளிப்படையாக - ஏன் மறைமுகமாகக் கூடத் - தன்னிடம் யாரும் வெளிப்படுத்தி னார்கள் இல்லையே.

அப்படியிருக்க, தனக்கெல்லாம் எதற்காக ரோஷம் வர வேண்டும்.

தான் செய்த தவறு இப்பொழுது மலையாகத் தெரிய, அப்படியே அவளுடைய கண்களிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் வடியத் தொடங்கி விட்டிருந்தது.

சுற்றுப்புறம் கூட அவளுக்கு நினைவில் இருக்க வில்லை. மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதும்.

அந்த நிலையில் மனைவியைப் பார்த்த சுரேந்திரனுக் கும் மனம் ஆடிப்போய் விட்டிருந்தது.

''வர்றேன்...'' என்று ஹாலுக்குள் வந்தவனிடம் மட் டும் சொல்லிக் கொண்டு அந்தப் பெண்மணி அதாவது அவனுடைய பெரியம்மா கிளம்பிச் சென்றும் வெகு நேரமாகி விட்டிருந்தது.

சுத்தமாக உணர்ச்சி துடைக்கப்பட்டு விட்டிருந்த சுரேந்திரனின் முகம் தான் அவரை அப்படிக் கிளம்பவும் செய்திருந்தது.

என்னவெல்லாம் பேசி விட்டார்கள், எந்த மாதிரியான வார்த்தைகள் என்று சுரேந்திரனும் கூட மனதளவில் துடித்துப் போய் விட்டிருந்தான்.

நல்ல வேளையாக அவனின் பார்வையைப் புரிந்து கொண்டு, அவனுடைய பெரியம்மா கிளம்பி விட்டிருந் தார் என்று தான் சொல்ல வேண்டும்.

என்ன நடந்திருக்கும் என்பதைப் பற்றியெல்லாம் துளி கூட யோசித்துப் பார்க்காமல் இப்படி வாய்க்கு வரு வதையெல்லாம் பேசிவிட்டுப் போக இவர்களால் எப்படி முடிகிறது?

திரும்பி மனைவியைப் பார்த்தான்.



கண்களைத் துடைத்துக் கொண்டு அவள் அனைத் தையும் ஒதுக்கி வைத்துக் கொண்டிருந்தது தெரிந்தது.

# 23

அன்று கணவன் மனைவி இருவருமே எல்லாம் தங்களால் வந்தது தானென்று மேலும் மனதளவில் உடைந்து போய் விட்டிருந்தனர்.

சுரேந்திரனுக்குக் கடையில் வேலையே ஓடியிருக்க வில்லை என்றால் சஞ்சனாவிற்கு வீட்டில்.

அதிலும் சுரேந்திரனுக்குத் தான் அனைத்தும் தன் னால் வந்தது தானென்று மனம் மிகுந்த வேதனைக்குள் ளாகி விட்டிருந்தது.

தான் மட்டும் அன்று கொஞ்சம் பொறுமையாகக் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருந்திருந்தால் என்று நினைத்து நினைத்து மாய்ந்து போனான்.

மனைவியின் மேல் அவள் வீட்டை விட்டுக் கிளம்பிச் சென்றதற்கு முன்பு வரை தவறென்று ஒன்றுமே இருக்க வில்லையே.

ஏன், அவளுக்கென்று ஒரு போக்கிடமாகத் தாய் வீடு இல்லாததால் தானே அவள் தோழியை நாடிச் சென்ற தும் கூட.

அதற்கு ஓடிப் போனவளென்று எந்த அளவிற்கு நாக் கூசாமல் சொல்கிறார்கள்.

ஏன் அதற்குப் பிறகும் கூட மனைவி இருக்கும் இடத்தைத் தெரிந்து வைத்துக் கொண்டு பேசாமல் இருந்து விட்டதும் தன்னுடைய தவறே அல்லவா?

தான் மட்டும் சென்று ஒரு வார்த்தை அழைத்திருந்தால் அவளும் கிளம்பி வந்திருக்கத் தானே போகிறாள். இப்பொழுது இந்த அளவிற்குப் பிரச்சனையும் வந்திருக்காதே.

இப்படி அடி முதல் நுனி வரை அனைத்துப் பிரச்சனைகளுக்கும் நாமே காரணமாகி விட்டுப் பழியை மட்டும் மனைவியின் மீது போடுவது எந்த விதத்தில் நியாயமாகும்?

அன்று வழக்கத்தை விடவும் இரண்டு மணி நேரங்கள் முன்னதாகவே கடையை விட்டுக் கிளம்பி விட்டிருந்தான் சுரேந்திரன்.

வந்தவன் ஹாலில் தனியாகப் படுக்க வைக்கப்பட்டிருந்த குழந்தையைப் பார்த்தான்.

அது தன் பாட்டிற்குக் கை கால்களை உதறியபடி அங்குமிங்கும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்க்கவே நெஞ்சு நிறைந்து போனது.

வேகமாகச் சென்று குளித்து உடை மாற்றிக் கொண்டு வந்தவன், அப்பொழுதும் அப்படியே படுத்திருந்த தனது குழந்தையைக் கைகளில் எடுத்துக் கொண்டான்.

சோபாவில் வந்து அமர்ந்தவனுக்குக் குழந்தையைப் பார்த்துக் கொண்டிருந்ததிலேயே அனைத்துப் பிரச்சனைகளும் காணாமல் போய் விட்டாற் போல இருந்தது.



இப்பொழுதெல்லாம் குழந்தை தூங்கும் நேரமும் சற்று குறைந்திருப்பது தெரிந்தது.

ஏதேதோ பிரச்சனைகளை நினைத்து நினைத்து மனம் மேலும் சோர்வடைந்து விடக் கூடாதென்று அன்று முழுவதும் உடல் தேய அனைத்து வேலைகளையும் இழுத்துப் போட்டுச் செய்த சஞ்சனா, மீண்டுமொருமுறை கூடச் சென்று குளித்து விட்டு வந்திருந்தாள்.

குழந்தை தனியாக இருக்கிறானே என்று வேகமாக வந்து பார்த்தவள், அதற்குப் பிறகு தான் கடையிலிருந்து கணவன் வந்திருப்பதையும் அவன் குழந்தையை எடுத்து வைத்துக் கொண்டிருப்பதையும் கண்டாள்.

கணவன் அன்று மிகவும் நேரத்திலேயே வந்து விட்டிருந்தது தெரிய, என்ன காரணமாக இருக்குமென்று தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

நேராகக் கிச்சனுக்குச் சென்றவள் கணவனுக்கு ஸ்நேக்ஸ் எடுத்து வந்து கொடுத்தாள்.

''இதெல்லாம் வேண்டாம். ஒரு கப் டீ மட்டும் குடு,'' என்று கணவன் சொல்லிவிட, ''இதோ எடுத்துட்டு வர்றேன்,'' என்று நகரப் போனாள்.

அதே நேரம் குழந்தை அழ, ''இந்தா, நீ குழந்தைய எடு. நான் பாத்துக்கறேன்,'' என்றான் சுரேந்திரன்.

''உங்களுக்கு டீ...''

''நானே போட்டுக்கறேன்.''

குழந்தையை எடுத்துச் சென்ற சஞ்சனா அதன் பசியை ஆற்றித் தொட்டிலில் இட்டு விட்டு வந்தாள்.

சமையலறைக்குச் சென்று பார்த்ததில் கணவன் அவனே டீ கலக்கிக் குடித்திருந்தது தெரிந்தது.

சரிதானென்று சென்று பூஜையறையில் விளக்கேற்றி வைத்து விட்டு வந்தவள், இரவு உணவு வேலையைப் பார்க்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

திடீரென்று யாரோ வருவது போலத் தோன்றியதில் திரும்பிப் பார்த்தாள்.

சமையலறைக்குள் கணவன் வந்திருக்க, முயன்று முகத்தை இயல்பாக வைத்துக் கொண்டு அவனைப் பார்த்தாள் சஞ்சனா.

"என்ன டிபன்?"

கணவன் கேட்க, "சப்பாத்தி குருமா, அப்புறம் தயிர் சேமியா," என்றாள்.

"ரெண்டு எதுக்கு, சப்பாத்தியும் குருமாவும் மட்டும் போதும்."

சரியென்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

"கைல என்ன?"

"சப்பாத்திக்கு மாவு பிசைஞ்சுட்டிருக்கேன்."

"ஓ, சரி, தள்ளு. நான் தேய்ச்சுக் குடுக்கறேன். நீ கல்லுல போட்டு எடு," என்று அருகில் வந்திருந்தான் சுரேந்திரன்.

........

"என்னாச்சு?"

"நீங்க எது..."



"ஏன் செஞ்சா என்னவாம்?" என்றவன், இப்பதான் குளிச்சுட்டு வந்தேன். ஆனாலும் இருக்கட்டுமென்று மற்றொரு முறை கைகளை நன்கு சோப்பு போட்டுக் கழுவிக் கொண்டு வந்தான்.

வேஷ்டி பனியனுடன் கணவன் தன்னருகில் வந்து நின்றிருக்க, வெகு நாட்களுக்குப் பிறகு அவனுடைய அருகாமையில் சஞ்சனாவின் உள்ளம் படபடவென்று அடித்துக் கொண்டது.

மனைவியின் நிலை புரிய, தனக்குள் சிரித்துக் கொண்டான் சுரேந்திரன்.

"யாராவது பாத்தா..."

..........

"பாத்தா, ம்... என்ன?"

"நீங்க ஏன் இதையெல்லாம் செய்யணும், நீங்க வேணும்னா பேசாம நின்னு பேசிட்டிருங்க. நானே செய்யறேன்," என்று ஒரு வழியாகச் சொல்லியே முடித்திருந்தாள் சஞ்சனா.

"ஏன், எனக்கென்ன, தடிமாடு மாதிரி இருக்கேன். நீ வேணும்னா உக்காரு. நான் செஞ்சு எடுத்துட்டு வந்து உனக்கு ப்ளேட்ல போட்டுக் குடுக்கறேன்."

அதற்கு மேல் எதையும் சொல்லாமல் விட்டிருந்த சஞ்சனா, சப்பாத்தியைக் கணவன் தேய்த்துக் கொடுக்கக் கொடுக்க கல்லில் போட்டு எடுத்தாள்.

அதே நேரம் தனது மொபைலுக்கு அழைப்பு வர, அட்டெண்ட் செய்து காதில் வைத்தான் சுரேந்திரன்.

"சொல்லுங்கம்மா."

..........

"வீட்ல தான்."

..........

"தூங்கறான்."

..........

"நாங்களா? நானும் சஞ்சனாவும் சமையல் செஞ்சுட்டிருக்கோம்," என்று கணவன் குட்டைப் போட்டு உடைத்திருக்க, கடவுளே! இப்படிச் சொல்லிவிட்டிருக்கிறானே என்று சஞ்சனாவின் முகம் குங்குமமெனச் சிவந்து போய்விட்டிருந்தது.

"இதோ ஒரு நிமிஷம்," என்று கணவன் தன்னிடம் மொபைலை நீட்ட, வாங்கிக் காதில் வைத்தாள் சஞ்சனா.

"சொல்லுங்க அத்தெ"

........

"ம்."

..........

"இல்ல, அவரு தான்..."

உடனே தனது மனைவியிடமிருந்து போனை வாங்கித் தான் பேச ஆரம்பித்திருந்தான் சுரேந்திரன்.

"என்னமா, எதுக்கு என் பொண்டாட்டியக் கேள்வி மேல கேள்வி கேட்டுட்டிருக்கீங்க?"

..........



"இனிமேல் நீங்க கண்ணு வைக்கறதென்ன, அந்தக் கடவுளே வந்து நின்னாக் கூட எங்களப் பிரிக்க முடியாது."

........

"ஆமாம், பாருங்க. சரிதான். உங்க வேண்டுதலையெல்லாம் ஒன்னும் அவசரமில்லாம பொறுமையா முடிச்சுட்டு வாங்க!" என்று சிரித்துக் கொண்டே போனை வைத்திருந்தவன் சற்றே திரும்பி மனைவியைப் பார்த்தான்.

இப்பொழுது மனைவியின் முகத்தில் தெரிந்த சோகத்தில், "சஞ்சு..." என்று அழைத்தான்.

........

"என்னமா, பேச மாட்டியா?"

கணவனின் கேள்வியில் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் சஞ்சனா.

"என்ன மன்னிக்க முடியுமாடா?"

........

"அது கஷ்டந்தான்னு எனக்கே தெரியும். ஆனா நான் செஞ்ச தப்ப உணர்ந்து திருந்த ஆசப்படறே..."

"ஐயோ! பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க."

"நான் முட்டாள்தனமா நடந்துக்கிட்டதால பட்ட துன்பங்களெல்லாம் போதும்மா. எங்க எல்லார விடவும் பாவம் நீ எவ்வளவு சிரமப்பட்டுட்ட. சொல்லுமா. உன்னால என்ன மனசார மன்னிக்க முடியுமா?

கணவனின் குரலில் தெரிந்த ஏக்கமும் ஆதங்கமும் தன்னை என்னவோ செய்வதை உணர்ந்தாள் சஞ்சனா.

"சரிதான், நானும் என்ன மன்னிச்சு விட்டுர்ற அளவுக்கா நடந்துக்கிட்டேன்..."

"ஐயோ! கொல்லாதீங்க!" என்று வந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு சொன்னவள், "தப்பு எல்லாமே எம் மேல தான். என்னால உங்களுக்கு... ஏன் அத்தை, மாமா எல்லாருக்குமே அவ்வளவு துன்பம்!" என்று முயன்று வரவழைத்த சாதாரணக் குரலில் பேசினாள்.

"சரிதான். நீ பேசறது உன்னோட நல்ல மனசக் காட்டுது. அதுக்காக நான் பேசினதெல்லாம் இல்லேன்னு ஆயிடுமா? அதுலயும் உங்கிட்ட எவ்வளவு கேவலமா நடந்துக்கிட்டேன்."

"போதும் சுரேன், அப்படியே நீங்க செஞ்சதெல்லாத்தையும் தப்பு தான்னு எடுத்துக்கிட்டாக் கூட நான் அத மன்னிச்சுட்டேன். முக்கியமா அதையெல்லாம் இப்ப மறந்து கூடப் போய்ட்டேன்."

உணர்ந்து சொன்ன மனைவியைப் பார்த்த சுரேந்திரனுக்கு சந்தோஷத்தில் வார்த்தை கூட வந்திருக்கவில்லை.

"உண்மையதான் சொல்றேன் சுரேன். பிரச்சனை எதுவானாலும் வீட்ட விட்டுக் கிளம்பறது, அதுக்குத் தீர்வாகாது. அப்படிக் கிளம்பிப் போனது மட்டுமா?



தேடக்கூடாதுன்னு வேற ஸ்ட்ரிக்டா நான் சொன்னது அதவிடப் பெரிய தப்புதான?"

அப்படி மனைவி எழுதி வைத்துவிட்டுச் சென்றதற்காகவெல்லாம் சுரேந்திரனும் ஒன்றும் அப்படியே தேடாமல் விட்டுவிடவில்லையே.

மனைவி கிளம்பிச் சென்றதிலிருந்து அவள் திரும்பி வரும் வரை நடந்ததையெல்லாம் அப்படியே மனைவியிடம் சொன்னான், குற்ற மனப்பான்மையுடன் தான்.

ஆனால் அதைக் கேட்ட சஞ்சனாவோ அப்படியே சந்தோஷத்தின் எல்லைக்கே சென்று விட்டிருந்தாள்.

அப்படியானால் தான் நினைத்தது போலெல்லாம் கணவனும் ஒன்றும் எப்படியோ தொலைந்தாளே... அதுவே போதுமென்று நிம்மதியாக இருந்து விடவில்லை என்பதே அதுநாள் வரை அவள் பட்டிருந்த காயங்களையெல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஆற்றிவிடப் போதுமானதாய் இருந்தது.

அது மட்டுமல்லாமல் அவளுடைய தோழி அவளாக முன் வந்து இவ்வளவு பெரிய உதவியைச் செய்திருக்காவிட்டாலும் கூட எப்படி அவனாகவே வந்து அழைத்து வருவதாக இருந்தான் என்பதையும் மனைவியிடம் தயக்கத்துடன் எடுத்துச் சொன்னான் சுரேந்திரன்.

"என்னமா, ஏதேதோ சொல்றானேன்னு பாக்கறியா? நான் சொல்றதெல்லாம் நூத்துக்கு நூறு சதவிகிதம் உண்மையத்தான்..."

''நம்பறேன் சுரேன். ஆனா...''

''என்னமா?''

''எம் மேல எந்தத் தப்பும்... அவன் அந்த நித்யன்...''

மனைவி எதைப் பற்றிச் சொல்ல வருகிறாள் என்பது புரிய, ''உம்மேல எந்தத் தப்புமே இல்லேங்கறதுல - இப்ப இல்லமா - அப்ப ஒரு வருஷத்துக்கு முன்னாடியே எனக்கு எந்த சந்தேகமுமில்ல!'' என்று உணர்ந்து சொன்னவன் அப்பொழுது தான் ஏன் அப்படி நடந்து கொண்டான், அதாவது அவனுடைய அப்பொழுதைய மன நிலையைப் பற்றி மனைவி புரிந்து கொள்ளும் விதமாக எடுத்துச் சொன்னான்.

இவ்வளவு பிரச்சனைகள் நடந்து விட்டதற்குப் பிறகு அதற்குத் தான் சொல்லும் காரணங்கள் எல்லாம் வெறும் சப்பைக் கட்டுக் கட்டுவதைப் போலிருந்தது சுரேந்திரனுக்கும் புரியவே செய்தது.

அதாவது சுரேந்திரனுக்கு மட்டும் தான்.

ஆனால்... கணவன் சொல்வதையெல்லாம் வைத்து அவனுடைய அப்போதைய மனநிலையைச் சஞ்சனாவால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது. பாவம்! கணவனுடைய இடத்தில் வேறு யாரேனும் இருந்திருந்தாலும் கூட இதைத் தான் செய்திருப்பார்களோ என்றும்.

...............

''என்னமா?''



''இல்ல, அந்த நித்...''

''அதுக்கப்புறமும் ஒரு மாசம் கழிச்சு வந்தான். நாலு தட்டுத் தட்டினதுல அப்படியே அவனோட தப்பையெல்லாம் ஒத்துக்கிட்டான். இனியொரு தடவ என் கண்ல பட்டா அப்புறம் போலீஸ்ல கம்ப்ளெய்ண்ட் பண்ணிடுவேன்னு சொன்னது தான். போனவன் திரும்பவே இல்ல...''

...........

''என்னமா?''

''என்னால உங்க எல்லாருக்கும் எவ்வளவு பிரச்சன...''

''நான் சொல்ல வேண்டியத நீ சொல்றியாக்கும்!'' என்று சிரித்தவன், ''அப்பறம்...''

''என்னங்க...''

''நேத்தைக்கு மதியம் நீயும் அம்மாவும் பேசிட்டிருந்ததை எதிர்பாராத விதமாக கேக்க வேண்டியதாயிடுச்சு.''

............

சில வினாடிகள் கணவன் மனைவி இருவருமே எதையும் பேசத் தோன்றாது நின்று விட்டிருந்தனர்.

அதற்குப் பிறகு சுரேந்திரன் முதலில் வாயைத் திறந்திருந்தான்.

''அம்மாவோட வார்த்தைக்காக மட்டும் தான் நேத்து நைட் நீ அப்படி நடந்துக்கறையோன்னு தப்பா நினைச்சுட்டேன். ஆனா அதுக்கப்புறம் யோசிச்சதுல அப்படி இல்லேங்கறதும் எனக்கே புரிஞ்சுடுச்சு...''

மனைவியின் வேதனை புரிய, ''சஞ்சு...'' என்று ஒரு எட்டு எடுத்து வைத்திருந்தான்.

அதே நேரம் அவனுடைய மொபைல் அழைக்க, ''சிமா. நீ பாரு. நான் பேசி முடிக்கக் கொஞ்ச நேரமாகும்,'' என்று கைகளைக் கழுவிக் கொண்டு ஹாலுக்கு வந் திருந்தான்.

தொடர்ந்து வந்த ஒரு மணி நேரத்தில் கணவன் மனைவி இருவருமே ஒன்றாக அமர்ந்து இரவு உணவை எடுத்துக் கொண்டனர்.

ஆனால் எதையும் பேசிக் கொள்ளவில்லை.

மனதிலுள்ள பாரங்களெல்லாம் இறங்கி விட்டிருந்த தில் அந்த மௌனமே இருவருக்கும் பிடித்துப் போனது.

உணவு முடிந்ததும் அனைத்தையும் ஒதுக்கி வைத்து விட்டு நேரம் பார்த்தாள் சஞ்சனா.

ஒன்பது மணி ஆகியிருந்தது.

கணவன் தூங்கச் சென்று விட்டிருந்தது தெரிய, அவனுக்குப் பாலை எடுத்துக் கொண்டு தானும் படுக்கையறைக்குப் போனாள்.

வழக்கமில்லாத வழக்கமாக அன்று மனம் படபட வென்று அடித்துக் கொண்டதோடு, ஏதோ ஒரு இனம் புரிந்து கொள்ள முடியாத அவஸ்தையும் வந்து நெஞ்சைக் குறுகுறுக்கச் செய்தது.

அன்று நேரம் நிறைய இருந்ததால் வந்து அலுவலக வேலைகளில் அமர்ந்து விட்டிருந்தான் சுரேந்திரன்.



மனைவி உள்ளே வருவது தெரிய, அதற்கு மேல் வேலையில் கவனத்தைச் செலுத்த முடியாது அனைத் தையும் எடுத்து வைத்தான்.

அவனுக்கும் அவனுடைய மனைவியின் மனநிலை தான் என்றால் அது சற்றும் மிகையல்ல.

எழுந்து மனைவியின் அருகில் வந்திருந்தவன், அவளிடமிருந்து பால் டம்ளரை வாங்கி டேபிளின் மீது வைத்தான்.

அப்படியே அவளை அழைத்துக் கொண்டு போய்ப் படுக்கையில் அமர வைத்துத் தானும் அருகில் அமர்ந்து கொண்டான்.

வெட்கத்துடன் சிவந்து விட்டிருந்த மனைவியின் முகவாயை மிருதுவாகப் பிடித்து நிமிர்த்தினான்.

''சஞ்சு...''

..........

''என்னடா, இங்க பாரு.''

உடலின் நடுக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு கணவனை நிமிர்ந்து பார்த்தாள் சஞ்சனா, அதாவது பார்க்க முயன்றாள்.

மனைவியின் நிலை புரிய, எல்லையற்ற காதலுடன் அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் அவளை நெருங்கினான்.

சரியாக அதே நேரம் குழந்தை அழத் தொடங்க, கணவன் மனைவி இருவருமே முயன்று நடப்புக்கு வந்திருந்தனர்.

"ம்... இன்னொரு வில்லனா?" என்று சலித்துக் கொண்ட கணவனின் பாவனையில் இப்பொழுது நன்றாகவே சிரிக்கத் தொடங்கி விட்டிருந்தாள் சஞ்சனா.